# இந்து சமயக் கையேடு

தமிழாக்கம்

அ. நடராஜன்

திருமலை - திருப்பதி தேவஸ்தான வெளியீடு
திருப்பதி.

இந்து சமயக் கையேடு
முதற் பதிப்பு: டிசம்பர், 1979

T. T. D. Religious Publications Series No: 17.

மலிவுப் பதிப்பு: விலை: ரூ. 1-50

அச்சிட்டோர்:

திருமலை-திருப்பதி தேவஸ்தான அச்சகம்,
திருப்பதி.

வெளியிடுபவர்:

பி. வி. ஆர். கே. பிரஸாத், ஐ.ஏ.எஸ்.,
செயலாட்சித் தலைவர்,
திருமலை - திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

# முகவுரை

திருமலை - திருப்பதி தேவஸ்தான மேலாண்மைக் குழுவினர் ஏறக்குறைய முப்பது ஆண்டுகளுக்கு முன் இந்து சமயப் பிரசாரத்திற்காக இந்து சமயக் கோடைப் பள்ளி ஒன்றைத் துவக்கி, ஒவ்வொரு ஆண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட சிலருக்கு இந்து சமயத்தில் பயிற்சியளிக்கத் தீர்மானித்தனர். அப்பள்ளியில் பயிற்சி பெறுவோருக்கும் பொதுமக்களுக்கும் பயன்படும் வகையில் இந்து சமயக் கையேடு ஒன்றை வெளியிடக் கருதி, அதற்கான பாடத் திட்டம் ஒன்றை வகுப்பதற்கு பேராசிரியர்கள் பி. என். ஸ்ரீநிவாஸாச்சாரி, பி. வி. ராமானுஜ ஸ்வாமி, டாக்டர் கே. ஸி. வரதாச்சாரி ஆகியோர் அடங்கிய குழு ஒன்றை அமைத்தனர். இந்நூலின் கையெழுத்துப் பிரதியைப் படித்து, பாடத் திட்டம் பற்றி இப் பேராசிரியர்களுடன் கருத்துப் பரிமாறிக் கொள்வதற்கான நல்வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இந்நூல் 1951இல் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டது. நூலின் பொருளும் அதன் அமைப்பும் என்னைப் பெரிதும் கவர்ந்தன.

எனது அருமை நண்பர், திருமலை திருப்பதிக் கோவில்களின் அர்ச்சக உரிமை பெற்றதொரு குடும்பத்தைச் சேர்ந்த திரு. அ. வாசுதேவன் அவர்கள் தாம் படிப்பதற்காக இதைத் தமிழில் செய்து தரும்படி கேட்டதற்கிணங்க, நான் இந்நூலைத் தமிழாக்கினேன்.

காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஜகத்குரு ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சுவாமிகளும் ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளும் சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன் திருப்பதியில் முகாமிட்டிருந்த போது, அவர்களுக்குத் தொண்டு செய்யும் அரிய பேற்றினை நான் அடைந்தேன். அப்போது ஸ்ரீ ஜயேந்திர சுவாமிகள், தாங்கள் காஞ்சியில் நடத்தும் சமயப் பள்ளிப் பாடத் திட்டம் பற்றிக் குறிப்பிட்டார்கள். திருமலை திருப்பதி தேவஸ்தானத்தார் வெளியிட்டுள்ள ஆங்கில நூல் குறித்து அவரிடம் எடுத்துச் சொன்னேன். அதைப் படித்த சுவாமிகள் தேவஸ்தானத்தின் முயற்சியைப் பெரிதும் பாராட்டினார்கள்.

எனது தமிழ்ப் பிரதியை சுவாமிகளிடம் காண்பித்துக் கொண்டிருந்தபோது உடனிருந்த தி. தி. தேவஸ்தானக் கல்வி அதிகாரி திரு. கனகபூஷணம் அவர்கள் தேவஸ்தானத்தின் சமய இதழான 'ஸப்தகிரி'யில் அதைத் தொடர்ந்து வெளியிட்டால் பயனுள்ளதாயிருக்கும் என்று கருதி, 'ஸப்தகிரி' ஆசிரியர் திரு. கே. சுப்பாராவ் அவர்களிடம் பரிந்துரைத்தார்; அவரும் அதற்கிசைந்து வெளியிட்டார். அதுவே நூலாக இப்போது மலர்கிறது.

ஸ்ரீ வேங்கடேஸ்வரர் கல்லூரியில் பணிபுரியும் பொருட்டு 1946இல் நான் திருப்பதிக்கு வந்தபோது, அக் கல்லூரியில் சம்ஸ்கிருதப் பேராசிரியராய் இருந்த திரு. டி. டி. தாதாசாரி யார் அவர்களும் தத்துவவியல் பேராசிரியராயிருந்த டாக்டர். கே. ஸி. வரதாச்சாரி அவர்களும், நான் அதற்குமுன் பணி புரிந்த ஸ்ரீ வில்லிபுத்தூரிலிருந்து நான் திருப்பதிக்கு வந்தமை யால் ஆண்டாளின் அருளுடன் வந்திருப்பதால் திருப்பதி யிலேயே நான் நிரந்தரமாகத் தங்கி விடுவேன் என்று கூறினர் கள். அதுவே உண்மையும் ஆயிற்று. இந்நூல் தயாரிப்பையே எனது தேவஸ்தான ஆசிரியப் பணியின் தனிச் சிறப்பாகக் கருதி, இப் பெருமைக்கு என்னை ஆளாக்கிய திருவேங்கடவனின் திருவருளைக் கனிந்துருகி அவன் தாளினை வணங்குகிறேன்.

இதை வெளியிடுவதற்கு ஆணை வழங்கிய, செயலூக்கம் மிகுந்த தேவஸ்தானச் செயலாட்சித் தலைவர் திரு. பி. வி. ஆர். கே. பிரஸாத், ஐ. ஏ. எஸ். அவர்களுக்கு என் பணிவார்ந்த நன்றி உரியதாகும். இதை வெளியிடுவதில் ஆர்வம் காண்பித்து உதவிய 'ஸப்தகிரி' ஆசிரியர் திரு. கே. சுப்பாராவ் அவர்களுக்கும், துடிப்புடன் விளங்கும் அவருடைய உதவி ஆசிரியர் திரு. என். எஸ். ராமமூர்த்தி அவர் களுக்கும் தேவஸ்தான அச்சக மேலாளர் திரு. எம். விஜய குமார் ரெட்டி அவர்களுக்கும், அச்சக ஊழியர்களுக்கும் நான் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

2-12-1979
திருப்பதி.

அ. நடராஜன்

---

# உள்ளுறை


| அத்தியாயம் | | பக்கம் |
|---|---|---|
| 1. | அறிமுகம் | ... 1 |
| 2. | கடவுள் | ... 8 |
| 3. | ஜீவன் | ... 16 |
| 4. | பிரகிருதி | ... 23 |
| 5. | தரிசனங்கள் | ... 26 |
| 6. | சமய இலக்கியங்கள் | ... 40 |
| 7. | வர்ணங்களும் ஆச்ரமங்களும் | ... 53 |
| 8. | வழிபாடு | ... 69 |
| 9. | சாதனங்கள் | ... 76 |
| 10. | புருஷார்த்தங்கள்: முக்தி | ... 84 |
| 11. | சமயமும் சமுதாயமும் | ... 89 |
| 12. | முடிவுரை | ... 102 |

# இந்து சமயக் கையேடு

## அத்தியாயம் 1

## அறிமுகம்

உலகில் இன்று வழக்கில் இருந்துவரும் மிக முக்கிய மான சமயங்களுள் ஒன்று இந்து மதம். சநாதன தர்மம் என்று அழைக்கப்பெறும் இதுவே மிகவும் தொன்மையான தாகும். மதத்தைப்பற்றிய எந்த ஆராய்ச்சியும், அதன் புனித நூல்களில் காணப்படுகின்றனவும், அதன் பிரதான ஆசிரியர்களினுல் விரித்து விளக்கப்பட்டிருப்பனவும், அதைச் சார்ந்த ஞானிகள், முனிவர்கள் மற்றும் சித்தர்கள் ஆகியோர் உணர்ந்தறிந்து கொண்டுள்ளனவுமான அதன் மிக நுட்பமான கூறுபாடுகளையும், உயரிய அம்சங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டாலன்றி, முழுமை பெற்றதாக ஆக முடியாது. இந்து மதம் ஒருவகையில் சமய ஆராய்ச்சிக்குத் தேவையானவை அனைத்தையுமே வழங்குகிறது. இந்து மதம் எந்நிலைக்கும் பொருந்துகிற, எல்லாவற்றையும் தன்னகத்தே கொண்ட, மிகப் பரந்த ஒரு பொது மதம் எனச் சொல்லிக் கொள்ள முடியும்.

இது ஒரு வரலாற்றுச் சமயமன்று; வரலாற்று மனிதர் எவரும் நிறுவாத ஒரு மதம். இதன் அடிப்படை என்ஞான்றும் இருந்து வருவது, நித்தியமானது. வரலாற்றுச் சமயங்களின் கொள்கைளும் கோட்பாடுகளும் அவற்றை நிறுவிய மகான் கள் கண்டு கொண்டு எடுத்துரைத்த உண்மைகளை அடிப்படை யாகக் கொண்டனவாகும். இந்து மதமோ, என்ஞான்றும் இருந்துவரும், நித்தியமான வேதங்களை ஆதாரமாகக் கொண் டிருக்கின்றது; ஞானிகளுக்கும் முனிவர்களுக்கும் தெரிவிக்கப் பட்டு, ஸ்மிருதிகளினுல் நிரூபிக்கப்பட்டு, தலைமுறை தலை முறையாகக் கற்பிக்கப்பட்டு வருபவை இவை. வேதம் கடவு ளின் சொல்லே ஆதலால் அதுவும் கடவுளே ஆகும். எனவே, அது அழிவில்லாதது, நித்யமானது, அபௌருஷேயமானது,

அதாவது புருஷனுல்-அல்லது மனிதனுல்-ஏற்படுத்தப்படாதது. இந்து மதம் முதலும் முடிவும் இல்லாத சநாதன (பழைமை யான) சமயம். வேதங்கள், வேதாங்கங்கள், ஸ்மிருதிகள், இதிகாசங்கள், புராணங்கள், ஆகமங்கள், ஆழ்வார்களின் பாசுரங்கள், நாயன்மார்களின் பாடல்கள் ஆகியவற்ருலான ஒரே தொடர்ச்சியான தெய்விக உண்மை. மாறும் நிலைமை களுக்கேற்ப அமையும் நிரந்தரமான ஆன்மிக உண்மைகளைப் பற்றியது அது. எனவே, முக்கியமான அடிப்படைக் கொள்கை களைப் பொறுத்தவரை அது நிலையானது, மாருதது; ஆனால் சடங்குகள், கருமங்கள் போன்ற முக்கியமல்லாதனவற்றில் அது நெகிழ்ச்சியுடன் கூடியது.

இந்து மதம் என்பது அயல் நாட்டினர் அளித்த பெயர்; தெளிவில்லாதது. ஆகவே அதைக்காட்டிலும் சநாதன தர்மம் (பழைய மதம்) என்னும் பெயரே சிறந்தது; நிறைவும் முழுமை யும் உடையது. எனினும், இந்து மதம் என்னும் பெயர் நெடுங் காலமாகப் புழக்கத்திற்கு வந்துவிட்டிருக்கும் பெயராகும். தர்மம் அல்லது மதவொழுக்கம் என்பது தனிப்பட்ட முறை யிலும் சரி, சமூக நோக்கிலும் சரி, அன்ருட வாழ்வில் எடுத்துக் காட்டாக விளங்கி வருகிற அல்லது விளங்க வேண்டிய நேர்மை யையும், மோட்ச தர்மத்தையும், அதாவது, வாழ்க்கையின் இடர்களினின்றும் கிடைக்கும் விடுதலையின் இயல்பையும் குறிக் கிறது. ஆக, அது ஒரு வாழ்க்கையின் தத்துவம் மட்டுமின்றி, ஒரு வாழ்க்கை முறையுமாகும். தத்துவம் (அல்லது கொள்கை), நடைமுறை என்னும் இரண்டையும் கொண்டது அது. இந்து மதத்தின் பிரதான ஆதாரம் அல்லது பிரமாணம் வேதம். செயல் முறையில் அதைப் புரிந்து கொள்வதற்கு உதவியாக இருப்பவை ஸ்மிருதிகள் போன்ற ஏனைய புனித நூல்கள். ரிக்வேதம், யஜுர்வேதம், சாமவேதம், அதர்வணவேதம் என்று நான்கு வேதங்கள் உள்ளன. ஒவ்வொரு வேதத்திலும் மந்திரம், பிராம்மணம், உபநிஷத்து என்ற மூன்று பிரிவுகள் இருக் கின்றன. மந்திரங்கள், பிராம்மணங்கள் ஆகியவற்றின் உட் கருத்தை அறிந்தவன் 'மந்திரங் கண்டோன்' ஆகின்ருன். உள்ளேயும் வெளியேயும் உள்ள இயற்கையின் மீது அவன் ஆதிக்கம் பெறுகிருன். வேதங்கள் மனித ஜாதியின் குழந்தைப் பருவத்தைச் சேர்ந்தவை என்று சொல்லுவது தவறு. 'உண்மை (ஸத்) அல்லது கடவுள் ஒன்றே, ஞானிகள் அதைப் பலவாருகக் குறிப்பிடுகின்றனர்' என்னும் பழைமையான வேத வாக்கியம் ஒன்றில் இந்து மதத்தின் ஆதார சுருதியும் எல்லா நிலைகளுக் கும் பொருந்தும் அதன் தன்மையும் அடங்கியுள்ளன. உப நிஷத்துக்கள் அல்லது வேதாந்தம் இந்து மதத்தின் மிக

உயரிய போதனைகளாகும்; பிரம்மவித்தை என்று அழைக்கப் பெறுவது எதை அறிந்து கொண்டால் எல்லாவற்றையும் அறிந்ததாக ஆகுமோ அந்தப் பிரம்மத்தைப் பற்றிய அறிவைக் கொண்டது. வாழ்வு, சாவு இரண்டின் ஆறுதலும் அவையே. வேதங்களின் அறிவு அனைத்தும் பிரணவம் அல்லது ஓம் என்பதில் அடங்கியுள்ளது. பிரம்மத்தைக் குறித்து வேதாந்த ஞானத்தில் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது. பொருளாதார இலட்சியங்களையும் இன்பக் குறிக்கோள்களையும் பற்றி வேதங்கள் குறிப்பிட்டாலும், மிகச்சீரிய குறிக்கோள் மோட்சம் அல்லது பிரம்மத்தை அறிதல் என்பதே ஆகும். எனவே தான், அது பிரம்ம வித்தை எனப்படுகிறது. துணைகள் அல்லது அங்கங்கள் இல்லாமல் வேதத்தை அறிந்து கொள்ளமுடியாது. சிட்சை, வியாகரணம் (இலக்கணம்), ஜ்யோதிஷம் (சோதிடம்) போன்ற ஆறு அங்கங்கள் இருக்கின்றன.

மனுஸ்மிருதி போன்ற ஸ்மிருதிகள் இந்துக்களின் அறவியல் குறித்து அவர்களது தனிப்பட்ட முறையையும் சமூக அம்சங்களையும் விவரிக்கின்றன. உரிமைகளையும் சலுகைகளையும்விடக் கடமைகளையும் ஒழுக்கங்களையும் பற்றியே அவை குறிப்பிடுகின்றன. எங்கும், எக்காலத்திற்கும் பொருந்தக் கூடிய உண்மை, அகிம்சை போன்ற அடிப்படையான அறவியற் கருத்துக்கள் என்றும், குறிப்பிட்ட சில காலங்களுக்கு மட்டுமே பொருந்தும் யுக தர்மங்கள் அல்லது அந்தந்தக் காலத்திற்குரிய கடமைகள் என்றும் இருக்கின்றன. பராசர முனிவரின் ஸ்மிருதி இக் கலியுகத்திற்காக ஏற்பட்டதாகும். ராமாயணம், மகாபாரதம் என்னும் இதிகாசங்கள் இரண்டும் ராமாவதாரம், கிருஷ்ணுவதாரம் என்னும் இரண்டு அவதாரங்களை விரித்துக் கூறுகின்றன. நேர்மையை மீண்டும் நிலை நிறுத்தவும் தீயதை அழிக்கவும் நெருக்கடியான சமயங்களில் கடவுள் அவதரிக்கிறுர். அத்தகைய தண்டனைகூட இறுதியில் தீயோரைத் திருத்தி நல்வழிபடுத்துவதற்குத்தான். பதினெட்டுப் புராணங்கள் உள்ளன. முக்கியமானவை விஷ்ணு புராணமும் பாகவதமுமாகும். அவை சிறப்பாகப் பிரபஞ்சத்தின் தோற்றம், இருத்தல், அழிவு ஆகியவை குறித்த ஒழுங்கான விவரணங்கள். அவற்றின் பிரதான லட்சியம், ரட்சகர், அல்லது முக்தர்களை (அதாவது, சம்சாரத்திலிருந்து விடுதலை பெற்றவர்களை) உண்டாக்குபவர் என்னும் கடவுளின் அதிகரித்து வரும் பொறுப்பை எடுத்துக்காட்டுவதுதான். மனிதனை அவனது பாவத்திலின்றும் மீட்பதற்காக கடவுள் அர்ச்சை, அதாவது, விக்ரகம் அல்லது மூர்த்தி உருவத்தில் மனித உலகிற்கு இறங்கிவரும் முறையை ஆகமங்கள் விளக்குகின்றன.

நாயன்மார்களின் பாடல்களும், ஆழ்வார்களின் பாசுரங்களும் கடவுளின் மீட்புக்கருணையை வேண்டி, கோயிலிலுள்ள அர்ச்சை அல்லது மூர்த்தி உருவத்தைச் சிறப்பாகப் போற்றிப் பாடப் பெற்றவையேயாகும்.

வேதங்கள், ஸ்மிருதிகள், இதிகாசங்கள், புராணங்கள், ஆகமங்கள், ஆழ்வார்கள் மற்றும் நாயன்மார்கள் ஆகியோரின் அனுபவங்கள் ஆகியவற்றைப் படித்தால், சமயத்தின் உள்ளுண்மையை, அதாவது, மனிதனைத் தெய்விக நிலைக்கு உயர்த்தும் பொருட்டு, கடவுள் மனிதனின் நிலைக்குப் படிப்படியாக இறங்கி வருவதைக் காணமுடிகிறது. வேதங்களில் பிரம்மம் என்றழைக்கப்படுவது வேதத்தில் அந்தர்யாமியாகவும், ஸ்மிருதிகளிலும் புராணங்களிலும் ஈசுவரனாகவும், இதிகாசங்களில் அவதாரமாகவும், ஆகமங்கள், ஆழ்வார்களின் பாசுரங்கள், நாயன்மார்களின் பாடல்கள் ஆகியவற்றில் அர்ச்சை அல்லது விக்கிரகம் என்பதாகவும் ஆகின்றது. கடவுளின் அருளினால் மனிதன் மிருக நிலையிலிருந்தும் மனித நிலையினின்றும் ஆன்மிக நிலைகளின் வழியாக முக்தி என்னும் தெய்விக நிலையை அடைகிறான். ஆகவே, இந்து சமய நூல்கள் எல்லாவற்றிலும், வெவ்வேறு வகை நிலைகளுக்கும் ஆட்களுக்கும் தக்கபடி இருக்கும் ஓர் ஆன்மிக நோக்கத்தின் ஒருமையைக் காணமுடிகிறது.

வேதாந்தம் எனப்படுவதில், இந்த ஆன்மிக நோக்கத்தின் ஒருமையையே இந்து மதம் தத்துவவியல் முறையில் (மெய்ப்பொருளியல் முறையில்) விரித்துரைக்கின்றது. தரிசனங்கள் எனப்படும் மெய்விளக்கக் கோட்பாடுகள் அல்லது தத்துவவியற் கொள்கைகள் ஆறும், ஒரே குறிக்கோளுடன், அதாவது, வாழ்வின் துயர்களை நீக்கி மோட்சம் அல்லது வீடு பெற வேண்டும் என்னும் ஒரே நோக்கத்துடன் வெவ்வேறு ரிஷிகளினால் இயற்றப்பட்டவையாகும். நியாய-வைசேஷிகம் எனப்படுவது தர்க்கம் அல்லது பிரமாணங்களும் அவற்றின் வாழ்க்கைக் கூறுகளும் என்பதைப் பற்றியதாகும். சாங்கிய - யோகம் எனப்படுவது புருஷன், பிரகிருதி, பிரகிருதியினின்றும் புருஷன் விடுதலை பெறும் வழி முறை ஆகியவற்றை ஆராய்வதாகும். பூர்வ மீமாம்சம் தர்மத்தின் அறவியல் அம்சத்தை வலியுறுத்துவதாகும். உத்திர மீமாம்சம் அல்லது வேதாந்தம், எதை அறிந்து கொண்டால் எல்லாவற்றையும் அறிந்ததாக ஆகுமோ அந்தப் பிரம்மத்தைப் பற்றிய தலையாய தத்துவத்தைக் குறிப்பதாகும்.

இம் மெய்விளக்கக் கோட்பாடுகளுள் ஒவ்வொன்றும் முறையே, பிரம்மத்தை அடைவதற்கு இன்றியமையாத நிலைகளான அறிவுக்கூர்மை (விவேகம்), பற்றின்மை (வைராக்

கியம்), அறத்தூய்மை ஆகியவற்றைப் பெறுவதில் மோட்சத்தை நாடுபவனுக்கு (பிரம்மத்தை அடைய முற்படுபவனுக்கு) உதவி புரிகிறது.

அறிவின் மிகச் சிறந்த பயன் அல்லது முடிவு பிரம்மமே என்று பிரமாணங்கள் சாற்றுகின்றன. மிக உயர்வான புருஷன் ஒருவன் இருக்கும் மெய்ம்மையை அவை உறுதிப்படுத்துகின்றன. மிகச்சிறந்த தர்மம் அல்லது மதம் அவனை அடைவது தான். மூன்று பிரஸ்தானங்கள் எனப்படும் உபநிஷத்துக்கள், கீதை, பிரம்மசூத்திரங்கள் ஆகியவற்றில் கூறப்பட்டிருக்கும் வேதாந்த முறை இதுவேயாகும். கடவுளை ரிஷிகள் நேரடியாக அறிந்துணர்ந்த அநுபவத்தை விவரிப்பது உபநிஷத்துக்கள்; உபநிஷத்துக்களின் சாரம் கீதை; பிரம்ம சூத்திரங்கள் அவற்றின் தத்துவவியலை விரித்துரைக்கின்றன.

"சநாதன தர்மத்தில் அல்லது வேதாந்தத்தில் அனைத்தும் அடங்கியுள்ளது. அது எந்த நிலையிலும் உண்மையாயிருக்கும்" என்பதை தரிசனம் என்னும் சொல் நன்கு எடுத்து வெளிப்படுத்துகிறது. 'இந்த ரோஜா சிவப்பு' என்னும் எடுத்துக் காட்டில் இருப்பதைப் போன்ற, புலன்களின் வாயிலாகக் கிடைக்கும் பிரத்தியட்ச அறிவையே தரிசனம் என்பது சாதாரணமாகக் குறிக்கின்றது. அது குறிப்பிட்டதாகவும் தாற்காலிகமானதாகவும் இருப்பினும்கூட, உண்மையானதாகும்; அது ஒரு மாயத் தோற்றமில்லை. உய்த்தறிவு அல்லது அநுமானம் என்பதன் வாயிலாகக்கிடைக்கும் அறிவு அதைவிட நிலையானது; ஏன் எனில், புலனுணர்வில் கிடைக்கும் குறிப்பிட்ட உண்மைகளை விளக்கும் பொது விதிகளைப்பற்றி ஓரளவு ஆழ்ந்த அறிவை அது நமக்கு வழங்குகிறது. "பூமி ஒரு கிரகம்; எனவே, அது சூரியனைச் சுற்றுகிறது" என்னும் எடுத்துக்காட்டில் இருப்பதைப் போல், உய்த்தறிவு அல்லது அநுமானம் என்னும் கருத்தில் அது 'தரிசனம்' ஆகிறது. அநுமானத்தைவிட மேலும் சிறந்தது, நம்மாழ்வார் போன்ற ஆன்ம ஞானிகளின் அநுபவத்தில் ஏற்பட்டதைப் போன்ற உள்ளுணர்வு அல்லது கடவுள் (பிரம்மம்) பற்றிய நேரடியான அறிவு. அது பிரம்மதரிசனம் ஆகின்றது. அறிவின் தலையாய பயன் அல்லது முடிவு அதுவே. இவ்வாறாக, தரிசனம் என்பது பௌதிக உணர்ப்பொறியிலிருந்து, உய்த்தறிவு, பிரம்மசக்ஷு அல்லது நேரடியான இறையுணர்வு எனப்படுவது வரை உள்ள ஒன்றாகின்றது. இங்ஙனம் அறிவு மேன்மேலும் பெருகுகிறது. புலனுணர்வு அல்லது பிரத்தியட்சம் என்பதிலிருந்து தொடங்கி உய்த்துணர்வு அல்லது அநுமானம் என்பதாக அது வளர்கிறது. பின்னர், உய்த்துணர்வு

சாத்திரத்தில் கண்டுள்ளபடி நேரடியான இறையுணர்வு நிலைக்கு உயர்கிறது. இம்மூன்று வழிகளும் ஒன்றுடன் ஒன்று தொடர் புள்ளவை; ஒன்றுக்கு ஒன்று துணையாக இருப்பவை. இவற்றுள் முரண்பாடு எதுவும் கிடையாது. வேதம், ரிஷிகளினுலும் கடவுளைக் கண்ட பிற ஞானிகளினுலும் மெய்ப்பிக்கப் பட்டுள்ள ஓர் ஆன்மிக உண்மை ஆதலால், அது ஒரு வெறும் குருட்டு நம்பிக்கை இல்லை. வேத அறிவிற்கான மிகச் சிறந்த சோதனை என்னவெனில், கடவுளை நேருக்கு நேர் கண்ட ஒரு குருவின் துணையுடன் இறைவனை நேரடி உள்ளுணர்வு மூலமாக நாம் அறிந்து கொள்ளுதலாகும். இவ்வாறக, புலனறிவான தரிசனம் உய்த்தறிவு என்னும் அகக்கண் கொண்டு பார்ப்பது என்ருகி இறுதியில் பிரம்ம தரிசனமாக அல்லது ரிஷிகளும் கடவுளைக் கண்ட பிற ஞானிகளும் பெற்ற நேரடியான இறை யநுபவமாக ஆகின்றது. இங்ஙனம், தரிசனம் என்னும்சொல் இந்துசமயத்தைக் குறிக்கும்போது அது அனைத்தையும் உள் ளடக்கிய ஒன்ருக ஆகிறது. விஞ்ஞானம் (அறிவியல்) விவரிக் கும் பொருளின் அல்லது இயற்கையுலகின் மெய்ம்மையை அது ஏற்றுக் கொள்கிறது; ஆனல், வாழ்வின் அடிப்படை நோக்கு லோகாயதம் என்னும் பொருள் முதற் கொள்கையே யாகும் என்பதை அது மறுக்கிறது. உய்த்தறிவுக்குள்ள முக்கியத்து வத்தை அது ஏற்றுக் கொள்கிறது; ஆனல், வாழ்வின் அடிப் படை நோக்கு அறிவுமுதற் கொள்கையே யாகும் என்பதை அது மறுக்கிறது. சாஸ்திரம் அல்லது சமயநூல் என்பதன் முக்கியத்துவத்தை அது ஏற்றுக் கொள்கிறது; ஆனல் அறிவு பூர்வமான கடவுளியல் என்பது வெறும் குருட்டு நம்பிக்கையே யாகும் எனக்கருதி அதை மறுக்கிறது. இந்து மதம் விஞ்ஞானம் (அறிவியல்), தத்துவம் (மெய்ப்பொருளியல்), அறிவு பூர்வ மான கடவுளியல் ஆகியவை மூன்றுக்கும் இடமளித்து, இவற்றை ஒருமைப்படுத்தி இணைக்கிறது. கடவுள் இருக்கிருர் என்பதற்கான மிகச் சிறந்த சான்று இறையனுபவமே என்று அது கூறுகிறது.

இந்து மதம் வாழ்வின் மொத்தமான ஒருமைப்பாட்டை யும் ஒவ்வோர் ஆளுக்கும் சமுதாயத்தின் பிற உறுப்பினர்கள் பால் உள்ள கடமைகளையும் வலியுறுத்துவதால் அது தனி ஆளை மட்டுமே சார்ந்த பிரத்தியேகமான ஒரு மதமன்று. ஆனல், கடவுளுக்குத் தனது நோக்கத்தை நிறைவேற்றுவதில் மனி தனின் ஒத்துழைப்பு தேவைப்படுகிறது என்னும் மேலைநாட்டுக் கருத்தை அது ஏற்பதில்லை. மனிதன் தனது அலுவலை அல்லது பணியைக் கடவுளின் வழிபாடு எனக் கருதி, தொண்டு என்னும் நோக்கில் மிகுந்த பணிவுடனும் செய்கிருன். சமூக சேவையின்

ஒவ்வொரு பணியும் எல்லா உயிர்களிலும் உறைந்து நிற்கும் அக ஆன்மாவாகிய கடவுளின் பெருமையைப் போற்றுவதே யாகும். ஒரு ஜீவனுக்கும் மற்றொரு ஜீவனுக்குமிடையே ஆன்மிக அரண் என்று எதுவும் கிடையாது.

ஆக, இந்து மதம் தர்க்கபூர்வமானது அல்லது முரண்பாடு இல்லாதது; ஒருமைப்பாடுள்ளது; எந்நிலைக்கும் பொருந்துவது. ஒவ்வொரு பிரமாணத்தையும் அல்லது அளவையையும் அது திருப்திப்படுத்துவதாலும், உய்த்தறிவிற்கும் தெய்விக உண்மைக்குமிடையே வேற்றுமை எதையும் காண்பதில்லையாதலாலும் அது முரண்பாடில்லாதது. ஒவ்வொரு சிந்தனைக் கொள்கைக்கும் வேதாந்தப் பிரிவிற்கும் அது இடமளிப்பதால் அது ஒருமைப்பாடுள்ளது. வகுப்புவாதம் என்பதை அது மறுத்தாலும், பல்வேறு மத வகுப்புகள் இருப்பதை அது ஏற்றுக் கொள்வதால் அது சகிப்புத் தன்மையுடன் கூடியது. 'ஒவ்வொரு மனிதனும் கடவுளின் குழந்தையே, உள்ளுணர்வினால் கடவுளை நேரடியாக அவன் அறிந்து கொள்ளமுடியும்' என்னும் உண்மையை வலியுறுத்துவதால் அது எந்நிலைக்கும் பொருந்துவது. ஆனால், அது வெவ்வேறு மதக் கொள்கைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கருத்துக்களினாலான ஒரு வெறும் கலவைக் கொள்கையன்று. வெவ்வேறு வகையான ஆட்களுக்கு அது இடமளிக்கின்றது. ஆயினும், இலட்சியம் அல்லது முடிவு என்பது ஒன்றேயாகும் என்னும் கருத்தை அது ஓர் உறுதியுடன் கூறுகிறது. ஒவ்வொருவரும் ஆன்மாதான்; எல்லாவற்றிலும் அவற்றுக்கு வெளியேயும் இருப்பது ஒரே ஆன்மாவே யாகும்; ஒவ்வொருவரும் அதை அடைய முடியும். இந்து மதத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் சநாதன தர்மம், வேதாந்தம் அல்லது தரிசனம் மற்றும் பிரம்மவித்தை ஆகியவை எல்லாம் ஒருகருத்துடையனவே யாகும். ஆன்ம இயல்பிலும் சரி, சேவையிலும் சரி அவை ஒரே உண்மையைத்தான் வலியுறுத்துகின்றன.

இந்நூலில் கூறப்பட்டிருக்கும் முக்கியமான பொருள்கள் மூன்று தத்துவங்கள், இந்து மன்பதையியலும் வழிபாட்டு முறைகளும் அடங்கிய கடவுளை அடைவதற்கான வழி வகைகள், தலையாய புருஷார்த்தமான மோட்சம் அல்லது வீடு என்பதன் இயல்பு, மற்றும், இறுதியாக, இந்து மதம் எந்நிலைக்கும் பொருந்துவதும் சமரச இயல்புள்ளதுமான ஒரு சமயம் என்பனவாகும்.

---

அத்தியாயம் - 2

# கடவுள்

கடவுளுக்கு இந்து மதத்தில் பிரம்மம், ஈசுவரன், பகவான், புருஷோத்தமன் போன்ற பல்வேறு பெயர்கள் உள்ளன; அவை யாவும் ஒரே பொருளையே குறிப்பனவாகும். ஆனால், இறைவனின் இயல்பைப்பற்றியும் அவருடைய குணங்களைப் பற்றியும் பல தவறான கருத்துக்கள் நிலவி வருகின்றன. எனவே, உண்மையான அர்த்தத்தை விளக்குமுன் இத்தவறான கருத்துக்களைத் திருத்த வேண்டியது அவசியமாகிறது. மிகுதியாகப் புழக்கத்தில் இருந்துவரும் ஒரு தவறான எண்ணம் யாதெனில், 'இந்துமதத்தினன் கடவுளைத் தனது உருவிலேயே அமைத்துக் கொள்கிறான்; கற்கள், மரங்கள், மிருகங்கள், இறந்தோரின் ஆவிகள் ஆகியவற்றை அவன் வழிபடுகின்றான்; உயர்ந்த பட்சம் கடவுள் என்பவர் மிக உயர்ந்த நிலையை எய்தியுள்ள ஒரு மனிதனே' என்பதாகும். இக்கருத்து முற்றும் தவறானது என்பது வெளிப்படை; ஏனெனில், மனிதன் போற்றி வணங்குவது இயற்கையையன்று; இயற்கையில் உறைந்துள்ள கடவுளைத் தான் அவன் வழிபடுகிறான். மனிதன்தான் இறைவனின் உருவில் அமைக்கப்பட்டிருக்கிறானேயல்லாது இறைவன் மனிதனின் உருவில் அமைக்கப்பட்டிருக்கவில்லை. இந்து மதத்தினன், பல கடவுளரைத் தெய்வங்களாக வழிபடும் பல கடவுட் கொள்கையின்ன் எனக் கூறுவது தவறு. இறைவன் அல்லது ஈசுவரன் எல்லாத் தெய்வங்களினுள்ளும் அவற்றை ஆளுபவராக, தேவதேவனாக இருக்கின்றார்; எனவே, பிரம்மம் இரண்டாவதில்லாத ஒன்றே என்று வலியுறுத்தும் ஒருகடவுள்கொள்கையினனே அவன். இன்னொரு தவறு என்னவெனில், இந்து மதமானது, 'அனைத்தும் கடவுள்; கடவுளே எல்லாம்' எனக் கருதுவதால், உலகத்தினின்றும் தனிப்பட்ட அல்லது இயற்கைக்குப் புறம்பான கடவுள் என்று எதுவும் கிடையாது என்னும் கொள்கையை உடையது என எண்ணுவதாகும். இறைவன் அல்லது ஈசுவரன் எல்லாவற்றினுள்ளும் அவற்றை ஆளுபவராக இருக்கிறாரேயன்றி, அவற்றுக்கே சமமானவராக ஆகிவிடுவதில்லை. கடவுள், கறையோ குறையோ இல்லாத தூயவர்; நிறைவுடையவர். வேறு சிலர், இந்து மதத்தில் கடவுள் எனப்படுவது

மனத்தினுல் ஏற்படுத்தப்பட்ட ஒரு வெறும் கருத்தே என்ருே அல்லது ஒன்றுமின்மையே என்ருே கூடச் சொல்கின்றனர். ஆனுல், 'சமயம் என்பது தனிப்பட்ட இஷ்ட தெய்வம் ஒன்றின் பால் வைக்கப்பட்டிருக்கும் நம்பிக்கையே; மெய்ப் பொருளிய லறிஞரின் மிக உயர்ந்த பொருள் அல்லது கூறு அதுவே' என்பதில் எல்லா இந்துக்களுக்கும் உடன்பாடு உள்ளது. கடவுள் இருப்பதை உய்த்தறிவினுல் மெய்ப்பிக்க இயலாது; அது ஒரு குருட்டு நம்பிக்கையுமன்று. ஒவ்வொருவனும் ஆர்வத்துடன் இறைவனை நாடினுல் அவனுல் கடவுளை நேருக்குநேர் காண முடியும்; அப்போது, இறைவனே அவனைத் தேடிவந்து அவனுக்கு அருளுகின்ருர். எங்ஙனம் மனிதன் இறைவனை நாடுகிருனே, அங்ஙனமே கடவுளும் அவனைத் தேடி வந்து, அவனைப் பாவத்தினின்றும் பிரிவுணர்ச்சியினின்றும் காப்பாற்றுகிருர். கடவுளின் மீட்பு நோக்கம் என்பது இதுதான். இது ஐந்து நிலைகளில் அடையப்படுகிறது. பிரம்மமானது அனைத்திற்கும் அப்பாலிருப்பது; தூயது; நிறைவுடன் கூடியது; இது பரம் என்று குறிக்கப்படுகின்றது. அடுத்து, அதுவே ஈசுவரனுக அல்லது உலகத்தைப் படைத்துக் காத்து அழிப்பவர் எனப்படும் முடிவற்ற ஒரு பொருளாக ஆகின்றது. பிறகு, எல்லா ஜீவன்களின் இதயங்களினுள் புகுந்து அவற்றை ஆளுபவராக அல்லது அந்தர்யாமியாக ஆகின்றது. பின்னர், உலகத்தின் சில நெருக்கடியான கட்டங்களில் இறைப்பொருள் புவியின்மீது அவதரிக்கின்றது அல்லது இறங்கி வருகின்றது; வரலாற்று ரீதியாக கடவுள் இங்ஙனம் வருவதே அவதாரம் எனப்படுகின்றது. இறுதியாக, இறைப்பொருள் மூர்த்தங்களின் உருவில் அர்ச்சை அல்லது அன்பின் நிரந்தரமான வடிவுடைப் பொருள் என்றழைக்கப்படுகின்றது. இந்நிலைகள் அனைத்திலும் கடவுளின் முக்கியமான நோக்கம், உயிர்களைத் தீவினையும் அறியாமையும் மிகுந்த அவற்றின் வாழ்க்கையிலிருந்து மீட்பதே ஆகும். இந்து மதத்தின் புனித நூல்கள் யாவும், சுருதி, புராணம், ஸ்மிருதி, இதிகாசம், மற்றும் தமிழிலும் பிற இந்திய மொழிகளிலுமுள்ள தோத்திரப்பாக்கள் எனபனவற்றில் இந்நோக்கத்தைப் படிப்படியாக வெளிப்படுத்துகின்றன. உபநிஷத்துக்கள் இறைவனின் நிறைத் தன்மையினை, பரம் அல்லது அந்தர்யாமி என்னும் வடிவில் வெளிப்படுத்துகின்றன. புராணங்கள் அவரது தன்மையை படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழிலைச் செய்யும் ஈசுவரனுக வருணிக்கின்றன. இதிகாசங்கள் அவதாரங்களின் மீட்புச் செயல்களை விவரிக்கின்றன. ஸ்மிருதிகள் இறைவனின் அறவியற் சிறப்புக்களையும் எழிலியற் பெருமைகளையும் விரித்துரைக்கின்றன. கடைசியாக, தோத்

திரப்பாக்கள் அவரது அன்பையும், எல்லோரும் அணுகவல்ல அவரது எளிமையினையும் எடுத்துரைக்கின்றன. பிரம்மமானது ஜீவன்களைக் கவர்ந்து அவற்றைத் தன்னிடமே சேர்த்துக்கொள்ளும் நோக்கத்துடன் கவர்ச்சி மிகுந்த எழிலுருவை ஏற்கிறது. கடவுளின் ஐந்து அம்சங்களையும் அடியிற்கண்டவாறு சுருக்கமாக விளக்கலாம்.

**பிரம்மம் :** உபநிஷத்துக்களின் கடவுள் பிரம்மம். உலகத்திற்கு அப்பாலுள்ள அது தூய்மையானது, நிறைவுடன் கூடியது. அதன் இயல்பை முழுமையாக விளக்க முடியாது. ஆனால், அதன் முக்கியமான பண்புகள் சத்தியம் அல்லது வாய்மை, ஞானம் அல்லது அறிவு, ஆனந்தம் அல்லது களிப்பு என்பனவாகும். பிரம்மம் என்பது ஸத் அல்லது மெய்ம்மை. உண்மையே அது; நிரந்தரமானது; பிரகிருதியைப்போல் அல்லது இயற்கையைப் போல் மாறுவதன்று. பிரம்மம் எப்போதும் தானாகவே ஒளிர்வது; எல்லாச் சூரியன்கள், சந்திரன்கள், நட்சத்திரங்கள் ஆகியவற்றையும்விடப் பிரகாசமானது. அது உயர் நலம்; எவ்வகைக் குறையுமில்லாத அமலமான பொருள். இயல்பாகவே அது ஆனந்தமயமானது; அன்பே உருவானது. பிரம்மத்திற்குப் பல பண்புகள் இருந்தாலும், அது இரண்டாவதில்லாத ஒன்று. அதன் மிகச் சிறப்பான பண்பு, அன்பு; இதன் மூலமாகத்தான் அது தனது இயல்பை ஜீவன்களுக்கு வழங்கி அவர்களைத் தன்னைப்போல் ஆக்குகிறது. உலகம் அனைத்தும் அதனிடத்தில் அடக்கம். நமது வாழ்வின் மிகச்சிறந்த குறிக்கோள் பிரம்மமே ஆகும்.

**ஈசுவரன் :** பிரம்மமானது உலகம் அல்லது அகிலம் என்பதுடன் தொடர்புறும்போது அது ஈசுவரன் என்றழைக்கப்படுகிறது. உலகத்தைப் படைப்பவரும் அதைக் காப்பவரும் அதை அழிப்பவரும் ஈசுவரனே! சிருஷ்டி அல்லது படைப்பு, ஸ்திதி அல்லது காப்பு, சம்ஹாரம் அல்லது அழித்தல் என்னும் மூன்று தொழில்களையும் முறையே பிரம்மா, விஷ்ணு, சிவன் என்னும் உருவங்களில் அவர் செய்கின்றார். இம்முத்தொழிலே பதினெட்டுப் புராணங்களிலும் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளது. அவற்றுள் முக்கியமானவை விஷ்ணு புராணமும் பாகவத புராணமுமாகும். உலகம் ஜீவன்களினாலும், பிரகிருதியினாலும் ஆகியது; ஆனால், அவை நிரந்தரமானவை; ஒன்றுமின்மையிலிருந்து உண்டாக்கப்படுபவை அல்ல. மரமாவதற்கு முன் இருக்கும் விதையின் நிலையைப்போல், அவை படைப்பிற்குமுன் பிரளயத்தில் உள்ளுறை நிலையில் இருக்கின்றன. படைப்பின்போது பிரம்மம் அவற்றின் முன்வினைக்கேற்ப அவைகளுக்குப் புதிய உடல்களைத்

தருகிறது; விடுதலையும் நிறைவும் பெறுவதற்கான வாய்ப்புகள் அவற்றுக்குக் கிடைக்கின்றன. ஸ்திதி நிலையில் அவை தத்தம் வினைக்கேற்ப பூவுலகு, சுவர்க்கம் எனப்படும் மேலுலகு, கீழுலகு என்னும் மூன்று உலகுகளிலும் ஜீவித்து நடமாடுகின்றன. தம்மை உயர்வடையச் செய்துகொள்ளவோ, கெடுத்துக் கொள்ளவோ அவற்றுக்கு முழுச் சுதந்திரம் இருக்கின்றது. அப்போது விஷ்ணு அவற்றின் உயிரைப் போன்று இருந்துகொண்டு அவற்றைக்காத்து சரியான முறையில் அவற்றுக்கு வழிகாட்டுகின்றார். பிறகு, உலகம் முழுவதும் தீமையிலும் தீவினையிலும் மூழ்கிக்கிடக்கும் ஒரு நிலை ஏற்படுகின்றது; அந்நிலையில் சிவன் அதைத் தாற்காலிகமாக அழிக்கின்றார். இம்மூன்று தொழில்களும் ஒரே ஈசுவரனால், பரிவும் இனிமையும் நிறைந்த அவரது இச்சையினாலேயே செய்யப்படுகின்றன; அவை ஒரே பிரபஞ்ச அலுவலின், அதாவது, ஜீவன்களை அவற்றின் அறியாமையிலிருந்தும் தீமையிலிருந்தும் மீட்க வேண்டும் என்னும் நோக்கத்தின் அம்சங்களே யாகும். இந்த அலுவல், எல்லா ஜீவன்களுக்கும் முக்தி அல்லது விடுதலை பெறும் வரை முடிவின்றிச் சுழற்சியாக நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றது.

**அந்தர்யாமி:** பிரம்மம் உலகத்தைப் படைத்தபின், அதன் அக ஆன்மாவாக, அந்தர்யாமியாக அதனுள் புகுந்து கொள்கிறது. உலகமானது, பௌதிக உலகு அல்லது அசித்து எனப்படும் ஜடம், மனித நிலைக்குக் கீழ்ப்பட்டவை, மனித நிலையிலிருப்பவை, விண்ணக நிலையிலுள்ளவை என்னும் மூவகைப்பட்ட ஜீவன்களினாலான உலகு-இவை இரண்டினாலும் ஆகியிருப்பதாகும். பிரம்மம் சித்து, அசித்து என்னும் இரண்டினாலுமாகியிருக்கும் உலகு முழுவதிலும் வாசுதேவனாக வியாபித்து, ஒவ்வொரு தாவர, விலங்கு, மானிட அல்லது தேவ ஜீவனின் இதயத்தினுள்ளும் அதன் அக ஆன்மாவாக அல்லது சரீரியாக வசிக்கின்றது. பிரம்மம் எல்லா ஜடப்பொருள்களிலும் ஜீவன்களிலும் இருந்தாலும் அவற்றின் குறைபாடுகளினால் அது எவ்வகையிலும் பாதிக்கப்படுவதில்லை. அது அவற்றின் அந்தராத்மாவாக இருந்து கொண்டு அவற்றுக்கு உயிரளித்து அவற்றை உள்ளேயிருந்து ஆளுகின்றது. அவை யாவும் அதன் திருப்திக்காகவே உள்ளன. ஆனால், அவற்றின் இதயங்களில் அது வசிப்பதன் முக்கிய நோக்கம் என்னவெனில், அவற்றின் தீவினையிலிருந்து அவற்றை விடுவித்துத் தன் உருவத்தை ஒத்ததாக அவற்றை ஆக்குவதே யாகும். இந்து மதத்தைக் குறைகூறுபவர்கள் சுட்டிக் காட்டும் ஒரு முக்கியமான குறைபாடு யாதெனில், பிரம்மம் எல்லாப் பொருள்களிலும் வியாபித்திருக்கிறது என்றும் கல்லோ, நாயோ அல்லது நாயைத் தின்

பவனே கூடப் பிரம்மமேயாகும் என்றும் அது கருதுவதால், உலகம் அல்லது இயற்கையே கடவுள் என அது கூறுகிறது என்பதாகும். கடவுள் எல்லாவற்றிலும் உள்ளிருந்து அவற்றை ஆளுபவராக இருக்கிருரேயன்றி எல்லாம் அவருக்குச் சமமாகி விடாது என்று இந்து மதம் தெளிவாக எடுத்தியம்புவதால், இக்கருத்து தவருனதாகும். உயிரில்லாத பொருள்கள் ஜீவன் களிலிருந்து வேறுபட்டவை; இவை இரண்டிலிருந்தும் கடவுள் வேறுபட்டிருப்பவர்; அவற்றினுள் அவர் புகுவது எதற்காக என்ருல், அவற்றுடன் நெருங்கித் தொடர்பு கொண்டிருக்கும் பொருட்டேயாகும். அன்பின் உருவமான இறைவன் ஜீவனின் அல்லது மனிதனின் இதய கமலம் எனப்படும் நெஞ்சத்தினுள் உறைவதால், மனித உடல் இறையுறைக் கோவில் அல்லது பிரம்மபுரி எனப்போற்றப்படுகிறது. தெய்வத்தின் உறைவிட மாதலால் அது புனிதமானது; அதை அசுத்தப்படுத்திப் பாவ இடமாகச் செய்யக் கூடாது. கடவுள் அன்பே உருவானவர்; ஜீவன் தெய்வத் தன்மை பொருந்தியிருக்க வேண்டும் என்பதற் காகவே அவர் ஜீவனுள் இருக்கின்ருர்.

**அவதாரம்** : ராமாயணம், மகாபாரதம் என்னும் இரு இதிகாசங்களிலும் காண்பிக்கப்பட்டிருப்பதுபோல், பிரம்மம் மீட்புப் பண்புடையது என்னும் கொள்கையே, அவதாரம் அல்லது தெய்வப் பிறப்பு என்னும் கருத்தினுல் தெளிவாக்கப் படுகிறது. கடவுளின் மிக உயர்ந்த அல்லது பூரண அவதார மான கீதாசாரியனுல் (கிருஷ்ணனுல்) இது முழுமையாக விளக் கப்பட்டுள்ளது. பகவானே கீதையில் கூறியிருப்பது போல், தர்மம் அல்லது அறம் நலிவடைந்து அதர்மத்தினுல் அல்லது மறத்தினுல் அது அழிக்கப்பட விருக்கும் நிலையில் கடவுள் உலகில் அவதரிக்கின்ருர். அவர் தமக்கே உரிய சிறப்பான உருவுடன், தீமை புரிந்தவனைத் தண்டிப்பதற்காகவும், நல்லவ னுக்கு அருளுவதற்காகவும், உலகின்கண் அறத்தின் மேன்மை யை மீண்டும் நிலை நிறுத்துவதற்காகவும் இறங்கி வருகின்ருர். அவதாரத்தின் உண்மையான நோக்கம், தீமை புரிந்தவனைக் கூட அவனது பாவ வழிகளிலிருந்து மீட்டுவதும், பக்தனுக்கு அல்லது அடியவனுக்குத் தமது கருணை மயமான வடிவைக் காட்டி அவனுக்கு அருளுவதுமே யாதலால், அது அறத்தன்மை

யும் சமய இயல்பும் உள்ளதாகும். தண்டனை என்பது கூட தயாகாரியம் அல்லது அருட்செயலே; ஏன் எனில், அதன் உண்மையான நோக்கம் தவறு செய்தவனைத் திருத்துவதேயன்றி அவனை அடக்கி நசுக்கி விடுவதன்று. அவதாரம் என்பது பௌதிக உடலுடன் உயர்வானதோர் இடத்திலிருந்து தாழ் வானதோர் இடத்திற்கு இறங்குவதன்று; கடவுளின் அளவிலா அன்பின் காரணமாகவும் மானிட அல்லது மனித னுக்குக் கீழ்ப்பட்ட நிலைகளுக்கு ஆன்மிக முறையில் இறங்கு வதே அவதாரம். இதிகாசங்கள் விஷ்ணுவின் முக்கியமான பத்து அவதாரங்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றன; அவற்றுள் முக்கியமானவை ராமாவதாரமும் கிருஷ்ணவதாரமுமாகும். மீன் (மத்ஸ்யம்), ஆமை (கூர்மம்), காட்டுப்பன்றி (வராகம்), மனித சிங்கம் (நரசிம்மம்), குறளன் (வாமனன்) ஆகிய முதலவதாரங்கள் உலக வரலாற்றின் நெருக்கடியான சமயங் களில், அறத்தின் சிறப்பையும் ஒழுக்கத்தின் மேன்மையையும் மீண்டும் நிலை நிறுத்தி, நேர்மை நிறைந்த வாழ்க்கை முறையை நிறுவுவதற்காகச் செய்யப்பட்டவையாகும். ராவணனைப் போன்ற தீயோரைத் தண்டித்து, தர்மத்தின் நிரந்தரமான மதிப்புக்களின் அடிப்படையில் நேர்மையின் ஆட்சியை அல்லது ராமராஜ்யத்தை நிறுவுவதற்காகவே ராமர் பிறந்தார். ராமாயணமும் கீதையும் இறையன்பின் உருவகமே அவதாரம் எனக் குறிப்பிடுவதுடன், மனித நிலைக்கும் கீழ்ப்பட்ட உயிர் வகைகள் உட்பட்ட எல்லா ஜீவன்களுக்கும் விடுதலை அல்லது முக்தி கிடைக்கும் என்று உறுதி கூறுகின்றன. எனவே, அவ தாரம் என்பது சர்வலோக ரட்சகர் அல்லது அனைத்தையும் மீட்டருளுபவர் என்பதாகப் புகழ்ந்தேற்றப்படுகின்றது.

**அர்ச்சை** : கல், மரம் அல்லது செம்பினாலான மூர்த்தம் அல்லது விக்கிரகம் என்னும் உருவில் இறையருளின் நிரந்தர வடிவமாகக் கடவுளை வழிபடுவது இந்துக்களிடை மிகுதியாகப் புழக்கத்தில் இருந்து வருகிறது; ஆழ்வார்கள், நாயன்மார்கள் மற்றும் பிற கடவுளடியார்கள் ஆகியோரின் தோத்திரப் பாக் களினால் இது புனிதமடைந்திருப்பதாகும். குறை கூறுபவ னுக்கு அல்லது லோகாயதவாதிக்கு (அதாவது, அனைத்தின் அடிப்படையும் சடப்பொருளே என்னும் கொள்கையினனுக்கு)

செதுக்கப்பட்ட உருவமாகத் தோன்றுவது, ஆன்மிகக் கண்ணு டைய பக்தனுக்கு உயிர்த் தன்மையையும் அன்பையும் வீசி வழங்கும் பேரெழிலார்ந்த பேசும் தெய்வமாகக் காட்சியளிக் கின்றது. விக்கிரகம் எனப்படும் அது ஒரு வெறும் கருத்தோ இலட்சியமோ, படிமமோ, அடையாளமோ அன்று; பக்தனின் வேண்டுகோளுக்கிணங்கி அர்ச்சை வடிவில் நிரந்தரமாக உறை யும் கடவுளின் எங்கும் நிறைந்த, அன்புடன் கூடிய சான்னித் தியமாக விளங்குகிறது அது. அப்படிமம் இறையருளின் உருவமேயாகும்: காண்பதற்குக் கண்களும் கேட்பதற்குக் காது களும் உள்ள அனைவரும் எளிதில் அணுக வல்லது அது. விஷ்ணு, சிவன் அல்லது சக்தி என்னும் குறிப்பிட்ட ஒரு வடி வில் பக்தன் இறைவனை நாடுகிறான்; பெயர், உருவம் அனைத் திற்கும் அப்பாற்பட்ட இறைப்பொருள் அந்த வடிவில் அவதரிக் கின்றது; பக்தன் அன்பினால் நெக்குருகி, கடவுளுடன் கலக்கும் களிப்பில் தன்னையே இழந்து விடுகிறான். ஆழ்வார்கள் இறை வனின் தாள்களின் புகலை நாடி, பக்தியையும் முக்தியையும் விடத் திருமாலின் வாயிலில் அடியார்கள் மிதிக்கும் கற்படி யாய் இருப்பதையே பெரிதும் விரும்பினர்.

அன்னைத் தத்துவம் என்பது இறையருளின் தனிப்பட்ட இயல்பாகிய கனிவையும் பரிவையும் குறிப்பாக வெளிப்படுத்து வதால், அது இந்து மதத்தின் ஒரு சிறப்பான அம்சமாகும். ஈசுவரன் சர்வவல்லமையும் புனிதமும் உடையவன் என்னும் கருத்து, 'தான் எதற்கும் தகுதியற்ற ஓர் அற்பப்பிராணி' என்று பக்தனுக்கிருக்கும் எண்ணம் காரணமாக அவனது உள் ளத்தில் ஒருவகை மரியாதையையும் அச்சத்தையுமே தோற்று விக்கிறது. சுவர்க்கத்தில் இருக்கும் தந்தை அல்லது லோகபதி என்னும் கருத்தில் கடவுளைப் பிரார்த்திப்பது என்பது, ஒவ் வொரு மனிதனும் இறைவனின் உருவத்தில் ஆக்கப்பட்டிருப் பவனே அல்லது கடவுளின் மைந்தனே என்னும் கொள்கை யின் அடிப்படையில் நிறுவப்பட்டிருப்பதாகும். இந்தக் கருத் தும்கூட, இறையன்பின் அல்லது கடவுளின் கருணையின் இயல்பை முழுவதாக வெளிக் கொணருவதில்லை; படைப்பிற்கு மையமாக விளங்கும் பரிவையும் கனிவையும் அளிப்பது தெய் வத்தைத் தாயாகக் கருதும் அன்னைத் தத்துவமே. ஆள்பவர்

அல்லது விதிகளை ஏற்படுத்தியவர் என்னும் முறையில் கர்மம், தர்மம் ஆகியவற்றின் கடுமையான விதிகளுக்கேற்பவே கடவுள் ஒவ்வொருவனுக்கும் நியாயம் வழங்குகிறார். விதிகளை மீறு வோருக்குக் கருணைக்கான நம்பிக்கை எதுவும் அதில் கிடை யாது: நேர்மையான வழிகளிலேயே நடப்பதாகச் சொல்லிக் கொள்ளக் கூடிய அளவிற்குப் பாவமே செய்யாதவன் அல்லது தூயவன் எவனும் இல்லை. ஆனால், அன்னை வடிவில் கடவுள் மன்னித்தருளும் தன்மையுள்ளவராக இருக்கின்றார். கருணை அல்லது தயைக்கு உரியதல்லாத பாவம் என்று எதுவுமில்லை. எனவே, மீட்புக் கருணையின் வடிவத்தில் லட்சுமி, பார்வதி அல்லது சக்தியின் அருளை ஒவ்வொருவனும் நாடுகிறான். ஆனால், கருணை மட்டுமே இருப்பதாக இருந்தால், அது பட்சபாதத் திற்கும் சலுகைக்கும் காரணமாகக் கூடும். பாவம் செய்பவன் தெய்வத்தின் மன்னித்தருளும் இயல்பைத் தனக்குச் சாதக மாக்கிக் கொள்ளலாம். ஆகவேதான், இந்துக்கள் கடவுளை ஈசுவரன், ஈசுவரி என்னும் இரட்டை வடிவில் வழிபடுகின்றனர். சட்டம் அல்லது விதி கடுமையாகவிருப்பது; அன்போ தவறை யும் மன்னிக்கக் கூடியது. ஆனால், கடவுளிடம் சட்டமும் அன்பும் ஒருங்கே இணைந்திருக்கின்றன. இரண்டாக அவை செயல்பட்டாலும் உண்மையில் அவை ஒன்றே யாகும்.

அத்தியாயம் - 3

# ஜீவன்

ஜீவன் அல்லது ஆன்மா என்பதைப்பற்றி ஆராய்ந்து தெளிதல் இந்து மதத்தில் ஒரு மையமான இடத்தை வகிக்கின்றது. இந்து மதம் வாழ்வின் புனிதத்தையும் எல்லா ஜீவன்களின் ஒருமைப்பாட்டையும் வலியுறுத்துகிறது. கடவுளை அல்லது பரமாத்மாவைப்பற்றிச் சிந்தனை செய்து, அதை உணர்ந்தறிந்துக்கொள்வதற்கு முன்பாக,ஆன்மாவைப்பற்றிச் சிந்தித்து அதை உணர்ந்து தெளிதல் இன்றியமையாததாகும். பிரகிருதி மற்றும் அதன் இருபத்தி மூன்று கூறுகள் ஆகியவற்றுலான உடலிலிருந்து வேறானது ஆன்மா. பஞ்ச பூதங்கள் எனப்படும் நிலம், தீ, நீர், வளி, விசும்பு என்னும் ஐம்பொருள்களினுல் ஆகியுள்ள பருவுடலிலிருந்து அது தனிப்பட்டது. அது ஐந்து பிராணங்கள் அன்று: உயிரினும் மிகுதியானது. அது கண், செவி, மூக்கு, நாக்கு, மெய் என்னும் ஐந்து உணர்பொறிகள் அன்று. மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகியவற்றுலான சூட்சும சரீரம் அல்லது நுண்ணுடல் என்பதினின்றும் தனிப்பட்டது ஆன்மா என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும். மனம், புத்தி - இவை இரண்டும் கூட உடலின் பகுதியே என்றும், சூட்சும சரீரம் (நுண்ணுடல்) தூலசரீரம் (பருவுடல்) ஆகியவற்றுலான 'மனம்-உடல்' என்பதினின்றும் ஆன்மா வேறானது என்றும் இந்து மதம் கருதுகிறது. உடல்கள் வந்துபோகின்றன—அல்லது தோன்றி மறைகின்றன; ஆனால் ஆன்மா ஒருபோதும் மாறுவதில்லை; அது நித்யமானது. பிறப்பு இறப்பிற்கும் விழிப்புநிலை, கனவுநிலை, உறக்கநிலை என்பனவற்றைப் போன்ற மன வேறுபாடுகள் அனைத்திற்கும் அப்பாற்பட்ட ஆன்மாவானது ஒரு மாறாத தனிப்பொருளாகும்.

இவ்வாறாக, 'ஜீவன்' அதன் பண்பாகிய ஞானம் அல்லது உணர்வு (நனவு) என்பதிலிருந்து வேறானது. ஞானம் என்னும் பண்பு மாறுதல்களுக்குள்ளாகிறது; அது ஆன்மாவன்று. விழிப்பு நிலையில் ஜீவன் உணர்வுடன் அல்லது நனவுடன் இருக்கிறது; அதன் ஐந்து உணர்பொறிகளும் செயல்படுகின்றன. கண்களினுல் அது பண்டங்களைக் காண்கிறது; மூக்கு, நாக்கு,

சருமம் ஆகியவற்றால் முறையே மணம், சுவை, தொடுஉணர்ச்சி ஆகிய உணர்ச்சிகள் அதற்கு இருக்கின்றன. எனவே உணர்ச்சிகள் ஜீவனிலும், அவற்றை உண்டாக்கும் பண்டங்கள் புறவுலகிலும் இருப்பவையாகும். கனவு நிலையில் ஜீவனுக்குப் பண்டங்களின்பால் புலப்பாடு எதுவும் ஏற்படுவதில்லை. அதன் மனம் மட்டும் செயல்பட்டு, அது இன்பத்தையும் துன்பத்தையும் நுகர்கிறது. உறக்க நிலையில் ஜீவன் முழுமையான அமைதி அல்லது நிலைப்பு நிலையில் இருக்கின்றது; அதன் உணர்வு செயல்படுவதில்லை; அது உள்ளுறை நிலையில் மறைந்திருக்கிறது.

ஆன்மா இயல்பாகவே தன்னொளியுடன் பிரகாசிப்பது; செயல் தன்மை வாய்ந்தது; ஆனந்தமாகவும் நிரந்தரமாகவும் இருப்பது. அது கடவுளின் ஓர் அம்சம் அல்லது கூறு; அது நித்தியமான பொருளாக இருப்பினும், இறைவனிடத்திலிருந்து அது தனிப்பட்டதன்று. இறப்பு (கடந்த காலம்) நிகழ்வு (நிகழ்காலம்) எதிர்வு (எதிர் காலம்) என்பனவற்றிற்கும், அதாவது, காலத்திற்கும், இடத்திற்கும் (அல்லது வெளிக்கும்) ஆன்மா அப்பாற்பட்டது. சிறப்பாக, அது தன்னுணர்வுடன் கூடியது; தனக்கிருக்கும் ஞானம் அல்லது உணர்வு என்பதன் மூலம் அது சிந்திக்கிறது; உணர்கிறது; (செயல் படவேண்டுமென) விருப்பமுறுகிறது. அது, அறியும் பொருளேயன்றி (அதாவது, அறிந்து கொள்ளுதல் என்னும் தொழிலைச் செய்யும் பொருளேயன்றி), அது செயலற்ற ஜடமன்று. அதற்கு அறவியல் சுதந்திரம் உண்டு; வினைக்கு உட்படும் வெறும் செயப்படு பொருளன்று அது. அது ஆனந்தத்துடன் கூடியது; துயரப்படும் அல்லது நோயுற்ற மனத்துடன் கூடிய ஒன்றன்று அது. இங்ஙனம், தனக்கே உரிய ஆன்மிக இயல்புடன் கூடிய அது பிரகிருதி யினின்றும் கடவுளினின்றும் வேறானது. அது தனக்கே இயல்பான கௌரவம் அல்லது பெருமிதம், சுயமதிப்பு, ஆட்சிச் சுதந்திரம் அல்லது நடத்தைச் சுதந்திரம் ஆகியவற்றைக் கொண்டது. அசித்து அல்லது ஜடம் ஆகிய கல்லையோ மரத்துண்டையோ போன்ற ஒரு பொருளன்று அது. அது பிரகிருதிக்கும் அதன் குணங்களுக்கும் உட்பட்டதன்று; காமம், சினம், பொறாமை, வெறுப்பு போன்ற இயல்பூக்கங்களினால் பாதிக்கப் படாமல், சுய ஆதிக்கம் பெற்று விளங்குவது அது. இவ்வாறாக, அது சுதந்திரமாகவும் நிரந்தரமாகவும் இருக்கும் ஓர் ஆன்மிக ஆளுமைப் பொருளாகும். அது ஓர் அறியும் பொருள்; சுதந்திரத்துடன் இருப்பது; மகிழ்ச்சியுடன் கூடியது. சம்சாரத்தின் துயர்களுக்கு அல்லது கர்ம பந்தங்களுக்குத் தன்னை உட்படுத்திக் கொள்ளும் ஆன்மா கட்டுண்ட ஜீவன் என்றழைக்கப்படுகிறது.

விளக்க முடியாத அவித்தை அல்லது பழைய அறியாமை காரண மாக எவ்வாருகவோ அது தன்னைப் பிரகிருதியினுலான உட லாகக் கருதிக்கொண்டு பிறப்பு இறப்புத் தொடர்ச்சிகளினுல் துயருறுகின்றது. தாஞகவே தனது தந்தைக்குரிய அரியணையி லிருந்து விலகிக்கொண்டு, காட்டிலுள்ள வேடுவர்களுடன் சேர்ந்து, வேடுவப்பெண் ஒருத்தியை மணந்து, அவளிடம் குழந் தைகளைப் பெற்று, காட்டு மிராண்டித்தனமான வாழ்க்கையில் சிக்கி உழலும் ஓர் அரச குமாரனைப் போல் ஆகிவிடுகிறது அது. ஆன்மாவானது எப்படியோ தனது தெய்விக இல்லத்தைப் புறக்கணித்து விட்டு, அசித்தினுலான உடலினுள் புகுந்து கொண்டு, புலன் வாழ்வில் உழன்று பிறப்பு இறப்புச் சுழற்சி யில் சிக்கிக் கொண்டு விடுகிறது. ஏன் அல்லது எவ்வாறு அது தெய்விக பாரம்பரியத்தினின்றும் வழுவி, அவித்தை (அறியா மை), காமம் (ஆசை), கர்மம் (வினை) ஆகியவற்ருல் துன்புறு கிறது என்பது ஒரு புதிராகவே உள்ளது. ஆனுல் உலகியற் தீமைகளுக்கும் துயர்களுக்கும் பொறுப்பு ஜீவனேயன்றி வேறு வெளிக் காரணம் எதுவுமில்லை. அவித்தை அல்லது அறியாமை காரணமாக, அது தன்னைப் பிரகிருதியுடனும் ஒன்று படுத்திக் கொள்கிறது; காமம் (ஆசை) காரணமாக, அது புலனின்பங் களை நாடி மிருக வாழ்க்கையின் துன்பங்களை அநுபவிக்கிறது; கர்மம் (வினை) காரணமாக அது முடிவில்லாத பிறப்பு இறப்புச் சுழற்சிக்கு உள்ளாகிறது. ஆனுல் ஜீவன் 'முதற்பாவம்' அல்லது 'தகாத துன்பம்' என்பதனுல் வருந்துகிறதில்லை; அதாவது, தான் செய்யும் கர்மம் (வினை) காரணமாகவே அதற்குப் பாவம் ஏற்பட்டு, அதன் விளைவாகத் துன்பம் உண்டாகிறது. அவித்தை அல்லது சம்சாரம் என்பதன் தோற்றத்தை, அதாவது, அது எவ்வாறு ஏற்பட்டது என்பதைப் புரிந்து கொள்ள முடியாது எனினும், ஞானத்தினுல் அதை அழித்துவிட முடியும்; ஜீவனும் இறைவனிடம் சேர்ந்து, மீண்டும் சம்சாரத்திற்கு வராமலிருக்க முடியும். ஆயினும், ஜீவனின் மெய்யான இயல்பு அவித்தை யினுல் (அறியாமையினுல்) மறைக்கப்பட்டிருக்கும் வரை அது காமத்துக்கோ, வினைக்கோ உட்பட்டு, பிறப்பு இறப்புச் சுழற் சிக்கு இலக்காகிறது.

**கர்மம்** அல்லது **வினை:** இந்து சமயத்தின் அறவியலில் கர்மம் அல்லது வினை என்பதைப்பற்றிய விதியானது முக்கியமான தோர் இடம் பெற்றுள்ளது. வாழ்க்கையின் ஏற்றத்தாழ்வு களையும் 'தகாத துயரம்' எனப்படுவதையும் விளக்குவது அது ஒன்று தான். தீயவன் ஏன் வளமுடன் வாழ்கிருன்? நல்லவன் ஏன் உடல் தொல்லை, மனவருத்தம், சமூகத் துன்பம் போன்ற எல்லாவகைத் துயரங்களினுலும் வருந்துகிருன்? புதிதாகப்

பிறக்கும் குழந்தை ஒன்று தன்னுடைய பெற்றோர்களின் தீவினைகளுக்காகவும் சொல்லொணுத் தீமைகளினின்றும் ஏன் துயருறுகிறது? கடவுள் ஒருவர் இருக்கிறார் என்றால், தீமையும் துயரமும் ஏன் இருக்கவேண்டும்? இப்பிரச்னைகள் யாவும் மனித குலம் தோன்றியதிலிருந்தே இருந்து வருகின்றன. ஆனால் இதுகாறும் எடுத்துரைக்கப்பட்டுள்ள, இப்பிரச்சனைகளுக்கான எல்லாத் தீர்வுகளிலும் கர்மம் அல்லது வினை என்னும் கொள்கையே மிகவும் குறைந்த ஆட்சேபணையுடன் கூடியதாயுள்ளது. தீமையும் துயரமும் இருக்கின்றன என்பது உண்மையே; ஆனால் ஒவ்வொரு மனிதனும் அநுபவிக்கும் வாழ்க்கைத் துன்பங்களுக்கான பொறுப்பு அவன்தானேயன்றி, கடவுளோ, பேயோ அன்று. காரண காரிய விதி அறவாழ்வினில் செயல்படுதலே கர்மம் அல்லது வினை என்னும் கொள்கையாகும். வினை விதைத்தவன் வினை அறுக்கிறான். மனம் (எண்ணம்). வாக்கு (மொழி) காயம் (உடல்) ஆகியவற்றால் புரியும் வினையின் விளைவு ஒரு போதும் அழிந்து போவதில்லை; அது ‘மனம்-உடல்’ அல்லது சரீரம் என்பதில் தங்கி நின்று விடுகிறது. இன்றைய வினை கடந்த காலத்தின் விளைவு; அதுவே எதிர்காலத்தின் காரணமாகிறது. இவ்வாறாக, எல்லா வினைகளும் காரணம், விளைவு ஆகியவற்றால் இணைந்திருப்பவை; முதல் அல்லது ஆரம்பம் எதுவும் இல்லாத ஒரு தொடராக அவை அமைந்துள்ளன. காரண காரிய விதியானது விதிவிலக்கு எதுவுமின்றி ஒரே சீராகச் செயல்படுகிறது; அது பிரதிபலன் அல்லது தெய்விக தண்டனை எனப்படும் ஒழுக்க விதியாகும். ஒருவன் நல்வினைகளைச் செய்தால், அவன், அவை காரணமாக உடல்நலம், நீடாயுள், செல்வம், அதிகாரம், புகழ் ஆகியவை போன்ற அவற்றின் பயனை நுகர்கிறான்; ஆனால், அவன் தீச்செயல்கள் புரிந்தால் அவன் தண்டிக்கப்பட்டு, தனது தீவினைகளுக்காக வருந்துகிறான்; அவற்றால் நோய், வறுமை, துன்பம் ஆகியவை அவனுக்கு உண்டாகின்றன. இங்ஙனம், நல்வினையும் தீவினையும் முறையே இன்பத்தையும் துன்பத்தையும் உண்டாக்குகின்றன; நற்செயலுக்கும் மகிழ்ச்சிக்கும், தீவினைக்கும் துயரத்திற்கும் ஒரு கணிதவியல் விகிதம் இருக்கின்றது; அதாவது, நற்செயல்கள் மிகுதியாக இருந்தால் மகிழ்ச்சியின் அளவு அதிகமாகவும், தீவினைகள் அதிகமாயிருந்தால், துயரத்தின் அளவு மிகுதியாகவும் இருக்கின்றது. இவ்வாறு, ஒவ்வொருவனும் தனது நற்செயல்களுக்கும் தீவினைகளுக்கும் தானே காரணமாகின்றான்.

**ஆன்மா வேறு உடலினுள் புகுதல் :** ஜீவன்களின் மறுபிறப்பு, ஜீவன்கள் வேறு உடலினுள் புகுதல் இவை பற்றிய விதிகள், கர்மம் அல்லது வினையிலிருந்து தொடரும் பின்விளைவுகளே. எந்தக் குழந்தையும் ஒன்றுமில்லாததிலிருந்து பிறப்பதில்லை; ஒன்றுமில்லாத மனத்துடனும் அது பிறப்பதில்லை. பெற்றோரிடமிருந்தே அது பரிணமித்து விடுவதில்லை; வெறும் பாரம்பரியத்தின் விதிகளை அது பின்பற்றுவதுமில்லை. எந்தச் செயலின் விளைவும் அழிந்து விடுவதில்லை யாதலால், சூட்சுமசரீரத்தில் அல்லது நுண்ணுடலில் தங்கியுள்ள, குறிப்பிட்ட சில முந்தைய பற்றுக்களுடனேயே அல்லது வாசனைகளுடனேயே ஒவ்வொரு குழந்தையும் பிறக்கின்றது. ஒருவன் இறக்கும் போது பருவுடல் மட்டுமே அழிந்து போகிறது. ஜீவனின் நுண்ணுடல், அதன் கர்மத்தின் விளைவுகள் அனைத்தையும் தன்னுள் வைத்துக்கொண்டு எஞ்சுகிறது; பின்னர் ஜீவன் தனது முன்வினைக்கேற்ப ஒரு புதிய உடலை ஏற்று மீண்டும் பிறக்கின்றது. இங்ஙனம், ஒவ்வொரு பிறப்பும் பழவினையின் விளைவாக ஏற்படுவதோடு கூட, மீண்டும் ஒரு புதிய உடலுக்கும் ஒரு புதிய பிறப்பிற்கும் காரணமாகிறது. எங்ஙனம் ஒருவன் தனது நைந்துபோன உடைகளைக் களைந்துவிட்டு, புதிய உடைகளை அணிந்து கொள்கிறானோ, அங்ஙனமே ஜீவனும் தனது நைந்துபோன உடல்களை நீக்கி விட்டுப் புதிய உடல்களை ஏற்கின்றது. எவ்வாறு ஒருவனின் வாழ்வில் குழந்தைப்பருவம் முதல் முதுமைப்பருவம் ஈறாகத் தொடர்ச்சியும் அவனுக்கே உரித்தான தனித் தன்மையும் உள்ளனவோ, அவ்வாறே ஜீவனின் பிறப்பு இறப்புத் தொடரிலும் அதன் தொடர்ச்சியும் அதற்கே உரித்தான தனித்தன்மையும் இருக்கின்றன. பல்வேறு பிறப்புகள் ஏற்பட்டாலும், தனித்தன்மை இருப்பதற்குக் காரணம், ஜீவன் அழிவற்றதாக அல்லது நித்தியமானதாக இருப்பதே யாகும்.

சம்சாரத்தில் ஜீவன் புரியும் செயல்கள் அல்லது அலுவல்கள் இப்பூவுலகில் மட்டுமே நிகழ்பவை அல்ல; மேலே பிரம்ம லோகம் அல்லது சத்தியலோகம் எனப்படுவதிலிருந்து கீழே பாதாளலோகம் எனப்படுவது வரையுள்ள மூவுலகுகள் என்றழைக்கப்படும் அண்ட உலகுகளில் ஜீவன் தனது வினைக்கேற்ப ஒருடலிலிருந்து மற்றோர் உடலினுள் புகுகின்றது. சுவர்க்கம் எனப்படுவதிலிருந்து தொடங்கும் வானுலகுகளில் சத்துவ குணம் மேலோங்கியுள்ளது; இங்கு ஜீவன் இன்பத்தைத் துய்க்கின்றது. அதலம் எனப்படுவதிலிருந்து ஆரம்பமாகும் கீழுலகுகளில் தாமஸகுணம் மேலோங்கியிருக்கிறது ; பாதாளம் என்பதே இருள் நிறைந்த பிரதேசம்; இங்கு ஜீவன் துன்பத்தி

ஞல் வருந்துகிறது. ஆனல், கர்மபூமி அல்லது வினை நிலம் எனப்படும் இடைப்பிரதேசம் ராஜஸ குணத்தினுல் பாதிக்கப் படுவதாகும். இதுவே மனிதனின் ஒழுக்க உலகு; இங்குதான் அவன் நல்வினைகளையோ தீவினைகளையோ செய்கின்றுன். அவற் றின் பயன், மேலும் கீழும் இருக்கும் உலகுகளில் பெறப்படு கிறது. இத்தகைய வேறு பிரம்மாண்டங்களும் உள்ளன; நட்சத்திரங்களைப்போல் அவை எண்ணற்றவை. ஜீவன்களின் வினைக்கேற்ப அவை ஈசுவரனுல் ஆளப்படுகின்றன. இடம் அல்லது வெளி என்னும் நோக்கில் இவற்றுக்குப் பொருள் எதுவும் கிடையாது; அதாவது, இவ்வாருன உலகுகள் பௌதிகக் கருத்தில் இல்லை. ஆனல், அவை ஒழுக்க நோக்கில் படிப்படியான மதிப்புக்களைக் கொண்டு அமைந்திருப்பவை யாகும். நல்லோர் தங்கள் நல்வினைக்கேற்ப மேலுலகுகளுக்குச் சென்று வானுலக இன்பங்களைத் துய்க்கின்றனர். நல்வினைப் பயன் முடிவுற்றவுடன் அவர்கள் மீண்டும் கீழே வந்து, வெவ் வேருன, மனிதனுக்கும் கீழ்ப்பட்ட (புழு, பூச்சி, மிருகம் போன்ற) உடல்களுடனும் மனித உடல்களுடனும் பிறக்கின் றனர். அவ்வாறே, கெட்ட ஜீவன்கள் துயரத்தை அனுபவித்து, அது முடிவடைந்த பிறகு, புதியதொரு வாய்ப்பினைப் பெற்று இந்த ஒழுக்க உலகில் மறுபடியும் பிறக்கின்றனர்.

**ஆன்மாவின் சுதந்திரம்:** காரணம், விளைவு என்னும் கூறு பாடுகளின் வாயிலாக அறிவியல் (அதாவது, விஞ்ஞான) வகை யில் வினைக்கொள்கையானது, அனைத்துமே ஊழின் பாற் பட்டது, எல்லாமே கெட்டது அல்லது நன்மையில் நம்பிக்கை இல்லாதிருப்பது என்னும் கருத்துக்களுக்கு வழிவகுப்பதனுலும் எதிர்கால வாழ்வை மேம்படுத்திக் கொள்வதற்கு யாதொரு விதமான நம்பிக்கையும் அது அளிக்காமலிருப்பதனுலும் அது ஆட்சேபணைக்குரியதாகிறது. ஒவ்வொருவனும் அவன் செய்த வினையின் பயனை அநுபவிப்பதால், ஒழுக்கவியற் சுதந்திரம் ஏது மின்றி, எது நடந்தாலும் அதற்கு உட்பட்டே ஆகவேண்டி யிருக்கிறது. தன்னுல் மாற்ற முடியாத ஒன்றை அவன் சகித்துக் கொண்டு, சந்தர்ப்பங்களின் அடிமையாக இருக்க வேண்டியதா யுள்ளது. ஆனல், இந்த அறிவியல் (அதாவது, விஞ்ஞான) நோக்கு என்பது வினைக்கொள்கையின் ஒரே ஒரு பகுதிதான்; மேலும் முக்கியமான அதன் அம்சம் யாதெனில், அது ஒழுக்க வியற் சுதந்திரம் அல்லது விருப்பத்துடன் செயல்படும் சுதந் திரம் என்பதாகும். ஒவ்வொருவனும் சினம், அச்சம், காமம், வெறுப்பு, பொருமை போன்ற தனது இயல்பூக்கங்களை அடக்க முடியும் என்றும், தனது எதிர்காலத்தைக் கட்டுப்படுத்தித் தன் விருப்பப்படி அமைத்துக் கொள்ளமுடியும் என்றும் அது

கூறுகிறது. வினைக்கொள்கையின் அறிவியல் (அதாவது, விஞ்ஞான) நோக்கு என்பது பிராரப்த வினைக்குதான் பொருந்துமேயன்றி சஞ்சித வினைக்குப் பொருந்தாது. முந்தையது, அதாவது, பிராரப்தவினை, ஒருவனது பிறப்பு போன்ற, ஏற்கனவேயே நிகழ்ந்துபோன, மாற்ற முடியாத ஒன்றைக் குறிக்கின்றது; ஆனால், சஞ்சித வினையோ நமது சக்திக்குட்பட்ட, நமது கைகளில் இருக்கும் எதிர்காலத்தைக் குறிப்பதாகும். ஒவ்வொருவனும் தனது ஊழ்வினையை அமைத்துக்கொள்ளும் வல்லமையுடையவன்; கடவுள் கூட அதை மாற்றமுடியாது. ஒருவனுக்கு, எந்தத் தொழிலைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது என்பதைப் போன்ற, விருப்பங்களிடையே வேறுபாடு ஏதாவது ஏற்பட்டால், தான் எந்தத் தொழிலைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டும் என்பதைத் தீர்மானிப்பதற்கான ஒழுக்கவியற் சுதந்திரத்தை அவனே பெற்றிருக்கிறான். அங்ஙனமே கோபத்தை அல்லது வெறுப்பைக் கட்டுப்படுத்தி அவனால் ஒழுக்கவியல் பற்றிய வெற்றியை அடைய முடியும். ஆனால், மிருக வாழ்வை அவன் தேர்ந்தெடுத்துக் கொண்டால் அவன் மறுபடியும் சம்சார சக்கரத்தில் கட்டுண்டவனாகின்றான். எனினும், அவனும் மிருக வாழ்வு முறையினால் உண்டாகும் பயனின்மையையும் துயரத்தையும் ஒரு நாள் உணரத் தொடங்கி, தன்னடக்கம் அல்லது சுய கட்டுப்பாடு மூலமாக மேன்மை வாய்ந்த சுதந்திரமான பாதைக்குத் திரும்புவான். எவ்வாறாயினும் ஒவ்வோர் ஆன்மாவினுள்ளும் மேலானதையோ கீழானதையோ தேர்ந்தெடுத்துக் கொள்ளும் சுதந்திரம் இயல்பாக அமைந்துள்ளது. ஆன்மாவிற்கு தேர்ந்தெடுத்துக் கொள்ளும் சுதந்திரம் மட்டுந்தான் உண்டேயன்றி, தான் தேர்ந்தெடுத்துக் கொண்டதன் விளைவுகளைத் தன் விருப்பப்படி பெறுவதற்கான ஆற்றல் அதற்குக் கிடையாது. விளைவுகள் என்னவோ முற்றிலும் கர்ம விதிகளைப் பொறுத்திருப்பவையாகும்.

---

## அத்தியாயம் - 4

# பிரகிருதி

இயற்கை, ஆன்மா, கடவுள் என்னும் மூன்று இறுதிப் பொருள்களின் இயல்பையும் அலுவலையும் பற்றி ஒவ்வொரு மதமும் ஆராய்கிறது. ஆனால், அவற்றை அசித்து, சித்து, ஈசுவரன் என்றோ அல்லது பிரகிருதி, புருஷன், புருஷோத்தமன் என்றோ அல்லது பசு, பதி, பாசம் என்றோ வரையறுத்துக் குறிப்பிட்டு, அவ்வாராய்ச்சியைத் திட்டமானதாக ஆக்குவது இந்துமதம் ஒன்றேயாகும். இயற்கை அல்லது பிரகிருதி என்பதன் இயல்பையும் மதிப்பையும் மட்டும் இப்போது கவனிக்கலாம். இயற்கை என்பது வீடுகள், மரங்கள், ஆறுகள், கடல்கள் மற்றும் மலைகள் ஆகியவை போன்ற உலகிலுள்ள பொருள்களைக் குறிப்பிடுவதாகும். வானம், சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் ஆகியனவும் அதில் அடங்கியவையே. விஞ்ஞானி, இயற்கைத் தோற்றங்கள் அனைத்தையும் நுணுகி ஆராய்வதில் ஈடுபாடு கொண்டிருக்கிறான். ரசாயனி, உலகை ஆக்கும் உலோகங்களையும் உலோகங்களல்லாதனவற்றையும் அறிய முற்படுகின்றான். வானவியலறிஞனோ சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் போன்ற விண்பொருள்களின் இயல்பை ஆராய்கின்றான். உயிரியலறிஞன் உடலின் இயல்பையும் அலுவலையும் புரிந்து கொள்ள விழைகின்றான். விஞ்ஞானி இயற்கைத் தோற்றங்களைக் கவனித்து, அவற்றை ஆளும்பொதுவிதிகளைத் தெரிந்துகொள்ள முயல்கிறான்; சமயவாதியோ, ஜீவனிலிருந்தும் கடவுளினின்றும் இயற்கை எங்ஙனம் மாறுபட்டது என்பதை அறிய ஆர்வம் கொள்கிறான். அவனது அடிப்படையான நோக்கம் உலகைப் படைத்த கடவுளைப் பற்றிய அறிவை அடைவதே ஆகும்; மனம், படைக்கப்பட்டனவற்றிலிருந்து படைத்தவன்பால் செல்கிறது.

நம்மைச் சுற்றிலுமுள்ள உலகை கண், செவி, மூக்கு, நாக்கு, கை என்னும் பொறிகளின் வாயிலாக நாம் தெரிந்து கொள்கிறோம். எடுத்துக்காட்டாக, ஒரு ரோஜா மலரைப் பற்றிய புலப்பாட்டைப் பெறும்போது, அதன் சிவப்பு நிறத்தைக் கண்ணினால் பார்க்கிறோம்; செடியிலிருந்து அதைக் கையினால் பறிக்கிறோம்; அதன் மணத்தை மூக்கினால் முகர்கிறோம்;

அதன் இனிப்பை நாவினுல் சுவைக்கிறோம். அவ்வாறே, இயற்கையில் இருக்கும் மரங்கள்,வீடுகள், ஏரிகள், ஆறுகள், மலைகள் போன்ற ஏனையவை குறித்துத் தெரிந்துகொள்கிறோம். மேலேயுள்ள உலகானது வானம், சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் இவற்ருல் ஆகியிருப்பதாகும். பூகோளவியலிலிருந்து, நாம் வாழும் பூமி நாடுகள்,கண்டங்கள், கடல்கள் மற்றும் சமுத்திரங்கள் ஆகியவற்ருலானது என்றும், பூமி சூரியனைச் சுற்றி இயங்கும் ஒரு கிரகம் அல்லது கோள் என்றும் நாம் அறிகிறோம். நாம் வசிக்கும் நாடான இந்தியா, கங்கையைப்போன்ற பெரும் நதிகளுடனும், இமயம் போன்ற மலைகளுடனும் ஆல் போன்ற மரங்களுடனும் கூடிய தேசம்; அது ஆன்மிகச் சிறப்பு வாய்ந்த நாடாதலால், நமக்கு நிரம்பவும் புனிதமானதாகும். அனலுக்கும் ஒளிக்கும் இருப்பிடமாக விளங்கும் சூரியனைச் சுற்றி வியாழன், சனி, போன்ற ஆறு வேறு கிரகங்கள் சுற்றி வருகின்றன. இவை எல்லாம் சேர்ந்து சூரிய மண்டலம் என்றழைக்கப்படுகிறது. ஒவ்வொரு நட்சத்திரமும் அதனதன் கிரகங்களுடனும் துணைக்கிரகங்களுடனும் கூடிய ஒரு சூரியனுகும் என்று சொல்லப்படுகிறது.

வானவியலைப் பற்றிப் படிக்கும் போது சூரியமண்டலம் மற்றும் நட்சத்திர மண்டலங்கள் ஆகியவற்றின் விரிவும் பெரும் அளவும் நமது சிறிய அளவும் நமக்குப் புலனுகின்றன. ஒளி விஞடிக்கு 1,82,000 மைல் வேகத்துடன் செல்கிறது; நமக்கு வெகு அண்மையில் இருக்கும் நட்சத்திரத்தின் ஒளி நம்மை வந்தடைவதற்கு $3\frac{1}{2}$ ஆண்டுகள் ஆகின்றன. மாபெரும் மர்மத்தை இவற்றிலிருந்து நாம் ஒருவாறு உணர்கிறும்; அண்ட வெளியின் எல்லையின்மையைக் கண்டு நாம் திகைப்புறுகிறோம். வெளியை அல்லது இடத்தைப் பொறுத்ததைப் போன்று காலத்தைப் பொறுத்ததும் உண்மையாகவே உள்ளது. பொருள்கள் ஒரே வெளியில் இருப்பதைக் குறிப்பது வெளி அல்லது இடம். அதாவது வெளி எனப்படுவது பொருள்கள் இருக்கும் ஒரு கட்டுக்கோப்பு. காலம் என்பது நிகழ்ச்சிகளின் தொடர்; அதாவது, நிகழ்ச்சிகள் அல்லது சம்பவங்கள் அமையும் கட்டுக்கோப்பு.

பிரகிருதி அல்லது அசித்து என்பதைப் பற்றிப் படிப்பதன் நோக்கம், நமது உடல் பிரகிருதியினுல் ஆகியுள்ளது என்றும், நாம் அதிலிருந்து தனிப்பட்டவர்கள் என்றும் அறிந்து கொள்வதுதான். நிலம், தீ, நீர், வளி, விசும்பு ஆகியவற்ருலானது உடல்; அதற்கு ஐந்து உணர் பொறிகள் உள்ளன; அது தூலசரீரம் அல்லது பருவுடல் எனப்படுகிறது.

சூட்சும சரீரம் அல்லது நுண்ணுடல் ஒன்று உள்ளது. அது மனம், புத்தி, சித்தம் அகங்காரம் என்பனவற்றாலாகியிருப்பது. மேலைநாட்டு உளவியலில், அவை பொருளினாலான உடலிலிருந்து வேறுபட்டதான மனம் என்று பாகுபடுத்தபட்டிருப்பினும் இந்துமதம் அவற்றை நுண்ணிய உருவிலுள்ள பௌதிகவியல் மாறுபாடுகளாகவே கருதுகிறது. அகங்காரம் என்பது தான் என்னும் செருக்கு; புத்தி என்பது ஆராய்ந்தறியும் உறுதி; மனமும் சித்தமும் உள்ளத்தில் உண்டாகும், அறியக்கூடிய குறிப்பிட்ட மாறுதல்கள். ஆகவே, சரீரம் என்பது நுண்ணுடலினாலும் பருவுடலினாலும் ஆகியது; அதை 'மனம்–உடல்' அல்லது உள்ளமும் பௌதிக உடலும் கொண்டது எனக் கூறலாம். உண்மையில், எதுவுமே அழிவதில்லை; ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கான மாறுதல் என்பது தான் உண்டாகிறது.

சாங்கியக் கொள்கை கூறுவது போல், பிரகிருதி இருபத்து நான்கு தத்துவங்களினால் அல்லது கூறுகளினால் ஆகியிருப்பதாகும்; அவை ஆவன: உடலை ஆக்கியிருக்கும் மகத்து (புத்தி, சித்தம்), அகங்காரம் மெய், வாய், கண், மூக்கு செவி என்னும் ஐந்து ஞானேந்திரியங்கள், வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம் என்னும் ஐந்து கருமேந்திரியங்கள், உடலையும் உலகையும் ஆக்கியுள்ள நிலம், தீ, நீர், வளி, விசும்பு என்னும் ஐம்பூதங்கள், சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்து தன்மாத்திரைகள் என்றழைக்கப்படும் அவற்றின் முந்திய நுண்ணிலைகள் ஆகியன. பிரகிருதிக்கு சத்துவகுணம், அதாவது, இறைத்தன்மை அல்லது தூய்மை, ரஜோ குணம் அல்லது செயல்தன்மை, தமோ குணம் அல்லது சடத்துவம் எனப்படும் மூன்று குணங்களும் இருபத்து நான்கு தத்துவங்கள் அனைத்திலும் வெவ்வேறு விகிதங்களில் அமைந்திருக்கின்றன.

## அத்தியாயம் - 5

# தரிசனங்கள்

மதத்திற்கும் தத்துவவியலுக்கும், சிறப்பாக, நமது மதத்திற்கும் நமது தத்துவவியலுக்கு மிடையேயுள்ள நுண்ணிய வேறுபாட்டை வரையறுத்துக் குறிப்பிடுவது நிரம்பவும் கடினமாகும். மதம் அல்லது சமயம் என்பது கோட்பாடு களையும் சடங்குகளையும் பற்றிய ஒன்ருகும். தத்துவவியலோ உலகின் இயல்பு, ஆன்மா, கடவுள் ஆகியவற்றுக்கிடையே யுள்ள தொடர்புகள் என்பவை போன்ற, வாழ்வின் இறுதிப் பிரச்னைகளைப் பற்றியதாகும். ஒன்று, நடை முறை பற்றியது; மற்ருென்று சித்தாந்தம் அல்லது கொள்கை குறித்தது. ஆனுல், நமது முன்னேர்கள் தொடக்கத்திலிருந்தே சித்தாந்த மனப்பான்மை கொண்டவர்கள்; கொள்கையை நடை முறையில் கொணர்ந்தவர்கள் அவர்கள். நமது மதமும் தத்து வியற்கொள்கையும் ஒன்ருேடொன்று பின்னிப் பிணைந்தவை; சமயத்தைப் பற்றிய விளக்கத்தில் தத்துவவியலும் இடம் பெறு வது நியாயமேயாகும். தத்துவவியலினது இறுதி மெய்ப்பொரு ளும் மதத்தினுடைய மிக உயர்ந்த கடவுளும் ஒன்றே என்று நம்மவர்கள் கருதி, தத்துவவியற் கொள்கையில் கடவுள் தன்மை என்பதனையும் இணைக்கின்றனர். எனவே, நமது மதம் நமது மக்களின் ஆன்மிகத் தேவைகளைக் கவனித்துக் கொள்வ தோடு கூட மிக உயர்ந்த உளவியற்தேவைகளையும் நிறைவு செய்கிறது. ஒரே ஒரு தனிப்பட்ட தத்துவவியற் கொள்கையில் மட்டும் இந்த வேறுபாடு அப்படியே வைத்துக் கொள்ளப்படு கிறது; எனவே, பெரும்பாலான மக்களுக்கு அது பிடிக்காமல் இருப்பதில் வியப்பு ஏதுமில்லை. ஆதலால், அவர்களது வாழ்வு முறைக்கும் அவர்களின் சிந்தனைகளுக்கும் பெருத்த முரண்பாடு உள்ளது. நிரம்பவும் அறிவாளியாக விளங்குவோருக்கு அது சரியானதாயிருக்கலாம்; ஆனுல், சாதாரண மனிதனுக்கு அதனுல் பயன் எதுவும் கிடையாது.

நாம் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல், பொருள், ஆன்மா, கடவுள் ஆகிய மூன்று இறுதித் தத்துவங்களின் இயல்பையும் அவற்றினிடையேயுள்ள உறவுகளையும் தத்துவவியல் ஆராய் கின்றது. அது, ஆன்மாவிற்கும் கடவுளுக்குமுள்ள உறவுடன்

நெருங்கிய தொடர்பு கொண்ட பிறிதொரு பிரச்னையையும், அதாவது, சாவுக்குப் பிற்பட்ட வாழ்க்கை அல்லது சடப்பொருளினாலான உடலிலிருந்து ஆன்மா பிரிந்தபின் அதன் நிலைமை என்பதையும், அதாவது, மோட்சத்தின் இயல்பையையும் ஆராய்கின்றது. இவ்வுலகிலிருந்து பிறிதோர் உலகிற்கு ஆன்மா செல்லுகிறது என்றால், அது செல்லும் பாதையும் தத்துவவியலின் ஆராய்ச்சியின் கீழ் வருவதேயாகும். இதிலிருந்து, 'மறுபிறப்பும் (அதாவது, மறு உடலினுள் புகுதல் என்பதும்) அதன் காரணமான கர்மமும்' என்னும் பிரச்னையும் எழுகிறது. இவையும் இவற்றுடன் தொடர்புள்ள சிலவும் தத்துவவியலில் ஆராயப்படுகின்றன. இப்பிரச்னைகளுக்கு வெவ்வேறு விதமாகத் தீர்வு கண்டுள்ளனர். இங்ஙனம், நமது நாட்டில் வெவ்வேறு தத்துவவியற்கொள்கைகள் தோன்றியுள்ளன. அவற்றுள் முக்கியமானவை ஆறு 'தரிசனங்கள்' அல்லது 'தத்துவவியற் கொள்கைகள்' ஆகும்.

கடவுள் உண்டு என்பதற்கு முக்கியமான பிரமாணம் வேதம்; ஏனெனில், கடவுளைப் புலன்களால் அறிந்து கொள்ள இயலாது; தெரிந்த விவரங்கள் எவற்றைக் கொண்டும் அவர் இருப்பதை உய்த்தறியவும் முடியாது. வேதத்தின் பிரமாணத்தை ஏற்றுக்கொள்ளாது, புலப்பாடு அல்லது நுனிப்பு, அனுமானம் அல்லது உய்த்தறிவு ஆகியவற்றையே பெரிதும் ஆதாரமாகக் கொண்ட சில தத்துவவியற்கொள்கைகளும் உள்ளன. வேதத்தை அவை ஏற்றுக்கொள்வதில்லையாதலால், அவற்றின் கொள்கைகளில் கடவுளுக்கு இடம் இருக்கமுடியாது. அவை சார்வாகம், பௌத்தம், ஜைனம் என்னும் நாத்திகக் கொள்கைகளாகும். அவற்றைச் சேர்ந்தவர்கள் நாத்திகர்கள் (கடவுள் என்று ஒன்று இல்லை என்பவர்கள்) என்றழைக்கப் பெறுகின்றனர். அக்கொள்கைகளைப் பற்றி இங்கு நாம் ஆராய வேண்டியது அவசியமில்லை.

**பண்டைய தத்துவவியற் கொள்கைகள் :** ஆத்திக (அதாவது கடவுள் உண்டு என்னும்) தரிசனங்கள் அல்லது மெய் விளக்கக் கோட்பாடுகள் ஆறு; அவை ஆவன; 1. சாங்கியம்; 2. யோகம் 3. வைசேஷிகம்; 4. நியாயம்; 5. பூர்வமீமாம்சை; 6. உத்தர மீமாம்சை அல்லது வேதாந்தம்.

சாங்கியம், யோகம் இரண்டும் மையக் கருத்தைப் பொறுத்தவரை ஒத்திருப்பவைவேயாகும்; எனவே, அவை ஒரே தொகுதியாகக் கருதப்படுகின்றன. இவ்வுலகிற்குக் காரணமாகும் பிரகிருதி அல்லது மூலப்பிரகிருதி, புருஷன் அல்லது ஆன்மா எனப்படுவதினின்றும் தனிப்பட்டது. புருஷன் அல்லது

ஆன்மா நிரந்தரமானது; அது சைதன்யம் அல்லது அறிவாகும். பிரகிருதி சத்துவகுணம், ரஜோகுணம், தமோகுணம் என்னும் மூன்று குணங்களினால் ஆகியது. பிரளய நிலையில் அவை சம நிலையில் இருக்கின்றன; சிருஷ்டியில் அல்லது படைப்பு நிலையில் அவை சமமற்று இருக்கின்றன. புருஷனுக்கு அருகில் இருக்கும் போது பிரகிருதியிடமிருந்து தோன்றுவது புத்தி; அது மகத்து எனவும் அந்தக்கரணம் எனவும் அழைக்கப்படுகிறது. புத்தியின் செயலைத் தன்னுடையதே என்று புருஷன் கற்பனை செய்து கொண்டு ஆன்மாவாக மாறுகின்றது. இச்சாத்துதலே சம்சாரம் எனப்படுகிறது. புத்தியிலிருந்து அகங்காரத்தின் வாயிலாகப் பத்துப் புலன்களும் அவற்றின் பொருள்களான (ஐந்து) பூதங்களும் (ஐந்து) தன் மாத்திரைகளும் உண்டாகின்றன. சைதன்யத்தைத் தவிர வேறு எவையும் புருஷனுக்கு இல்லை. நித்தியமாக இருப்பது புருஷன். புருஷர்களின் எண்ணிக்கை கணக்கற்றது. பிரகிருதிக்கும் புருஷனுக்குமுள்ள வேறுபாட்டினை உணரும்போது சம்சாரத்திற்கு முடிவு உண்டாகிறது; இதுவே முக்தி எனப்படுகிறது. சாங்கிய தத்துவவியற் கொள்கையானது கடவுள் (அல்லது, ஈசுவரன்) என்பதை ஏற்பதில்லை. யோகம் கடவுள் என்பதை ஏற்கிறது. ஆனால், படைப்புத்திறன் முதலிய சக்திகள் கடவுளுக்கு உண்டு என்பதை அது ஏற்றுக் கொள்வதில்லை. முக்தி என்பது கைவல்ய நிலை அல்லது இயற்கையிலிருந்து (அதாவது, பிரகிருதியிலிருந்து) விடுதலை பெறுவதாகும்.

பிரகிருதிக்கும் புருஷனுக்குமிடையேயுள்ள வித்தியாசத்தைப் புரிந்து கொள்வதற்குக் காரணமாகும் மனத்தை அடக்கும் குறிப்பிட்ட பயிற்சிகளை யோகம் எடுத்துரைக்கிறது. அவை ஆவன: யமம் (புலனடக்கம் அல்லது ஆசையடக்கல்), நியமம் (மனத்தைப் பற்றற்ற சமநிலையில் வைத்தல்), ஆசனம் (ஆசனங்களின் மூலம் உடற்கட்டுப்பாடு), பிராணாயாமம் (சுவாசத்தை அடக்கி யாளுதல் அல்லது மூச்சுக் கட்டுப்பாடு), பிரத்தியாகாரம் (மனக்கட்டுப்பாடு), தாரணம் (மனத்தை ஒருவழி நிறுத்தல்), தியானம் (பரம்பொருள் பற்றிய ஒருமித்த சிந்தனை அல்லது இடையறாத நினைவு), சமாதி (உணர்வுநிலை கடந்த ஓர் அமைதி நிலையில் கடவுளினிடம் ஒன்றியிணைதல்).

அங்ஙனமே, நியாயமும் வைசேஷிகமும் அடிப்படைக் கருத்துக்களைப் பொறுத்தவரை ஒற்றுமையுடையனவாயிருப்பதால் அவற்றையும் ஒருசேரவே கவனிக்கலாம். உலகம் அணுக்களினால் ஆகியது. உலகம் ஈசுவரனால் படைக்கப் பட்டது; மெய்யானது. ஆன்மாக்கள் எண்ணிக்கையில் கணக்

தில்லாதன. ஈசுவரன் இருப்பதை நியாயவாதிகள் உய்த்தறிவி ணுல், அதாவது, அனுமானத்திஞல் நிலைநிறுத்துகின்றனர். உலகம் பகுதிகளிஞல் ஆகியது; பானை ஒன்றைப் போன்றே அதுவும் ஒரு காரணத்தின் விளைவே யாகும். படைக்கப்பட்ட ஒவ்வொன்றிற்கும் அதைப் படைத்தவன் ஒருவன் உண்டு; அதன் காரணங்களையும் அதன் பயன்களையும் அவன் அறிந்தவ ஞயிருப்பான். ஆகவே, இவ்வுலகைப் படைத்தவர் ஒருவர் இருக்கவேண்டும். மேலும், வரம்புக்குட்பட்ட அறிவுடையன வும் கர்மத்திஞல் கட்டுண்டனவுமான ஆன்மாக்களை விட அவர் மிக்க உயர்ந்தவராயிருக்கவேண்டும். ஆன்மாக்கள் கர்ம விதிப்படி சம்சாரத்தின் இன்பங்களையும் துன்பங்களையும் அனுப வித்துக் கொண்டிருக்கின்றன. எந்த விதமான நோக்கமு மின்றிக் கடவுளை மகிழ்விப்பதற்காகவே, விதிக்கப்பட்ட கடமை களைச் செய்யும் ஆன்மாக்கள் சில, கடவுளின் அருளிஞல் யோகம் புரிவதற்கான வல்லமையைப் பெற்று, அதன் உதவியி ஞல் துயரத்திலிருந்து நிரந்தரமான விடுதலையை - அதாவது, இத்தத்துவவியற்கொள்கைகளுக்கேற்ப மோட்சம் என்பதை அடைகின்றன. அந்நிலையில் இன்பமோ, துன்பமோ, அறிவோ இராது. ஆகவே, இத்தகைய முக்தியை பாஷாணமுக்தி என்று சிலர் குறிப்பிடுகின்றனர்.

நியாய சித்தாந்தத்தின் உண்மையான மதிப்பு என்ன வெனில், தற்காலத்து நியாயக் கொள்கையில் அபிவிருத்தி செய்யப் பட்டிருக்கும் அசாதாரணமான நுண்ணிய ஆய்வு முறையாகும். தற்காலத்தில் நியாயக் கொள்கையானது. இறுதிப் பொருள்களின் பிரச்னையைப் பற்றிய ஆராய்ச்சியைப் பின்னணிக்குத் தள்ளிவிட்டு, திட்டமான அறிவை அடைய முற்படும் ஓர் அறிவியல் முறையாக வளர்ச்சி யடைந்துள்ளது. அதில், பிரமாணங்கள் அல்லது அளவைகள், அதாவது திட்ட மான அறிவைப் பெறுவதற்கான சாதனங்கள் பற்றிய ஆராய்ச்சி முதலிடம் பெற்றுள்ளது. இங்கு கூட, அனுமானம் அல்லது உய்த்தறிவு மிக்க நுட்பமாகவும் நிரம்பவும் விரிவான முறையிலும் ஆராயப்படுகிறது. நியாயவாதிக்கு வேதம் பிரமாணமானது; ஆஞல், அது நித்தியமானது என்பதஞல் அல்ல, அது ஈசுவரனின் சொல் என்பதஞலும், அது தவறற் றது என்பதஞலும்தான்.

பூர்வமீமாம்சைக் கொள்கை தர்மத்தை, அதாவது, வேதம் விதித்திருக்கும் கர்மங்களைச் செய்வதை வலியுறுத்து கிறது. கர்ம விதி அல்லது வினை விதி என்பது நிரந்தரமாக இருக்கும் ஒன்று ஆதலால், சம்சாரம் என்பதும் எப்போதும்

இருந்து வரும் ஒன்ருகும். படைப்பும் இல்லை; அழிவும் இல்லை. வேதம் தவிர்த்திருக்கும் கர்மங்களைச் செய்பவர்கள் புழுக்க ளாகவும் பூச்சிகளாகவும் பிறக்கின்றனர்; அல்லது, நரகத் திற்குச் செல்கின்றனர். ஏதாவதோர் ஆசையை நிறைவேற் றும் பொருட்டு கர்மங்களைச் செய்பவர்கள் மீண்டும் மீண்டும் பிறப்பெடுக்கின்றனர். எந்தவிதமான பயனையும் விரும்பாது, வேதத்தில் விதிக்கப் பட்டிருக்கும் அறத்தைச் செய்தால், கர்மத்துடன் உள்ள தொடர்பினை அழித்து, ஆன்மா தனது இலட்சியத்தை அடையும்படி செய்யும் 'அபூர்வம்' எனப்படு வதை அது உண்டாக்குகிறது; இக்கொள்கையின்படி இதுவே மோட்சமாகும். அப்போது ஆன்மா நிரந்தரமான இன்பத்தை நுகர்கிறது. செயல்களின் பலன்களை வழங்கும் தனிப்பட்ட கடவுள் அல்லது ஈச்வரன் என்பதை இக்கொள்கை ஏற்பதில்லை.

சாங்கியம், யோகம், பூர்வமீமாம்சை ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள், 'நித்தியமாகவும் ஒவ்வொன்றிலும் இருக்கும் கணக்கற்ற ஜீவன்கள் உள்ளன' என்றும் கருத்துடையவர்கள்; ஆனல், அந்த ஜீவன்களின் விருப்பங்களை நிறைவேற்றும் வல்லமை பெற்ற ஈசுவரன் என்று ஒருவர் இருக்கின்ருர் என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. பூர்வமீமாம்சை யைச் சேர்ந்தவர்கள், வேதங்கள் நித்தியமானவை என்றும், ஈசுவரன் என்று ஒருவருடன் அவை சம்பந்தப் பட்டனவல்ல என்றும் கருதுபவர்கள். விதிக்கப்பட்ட கர்மாக்களை அல்லது கடமைகளைச் செய்யாவிட்டால் பாவம் ஏற்படுகிறது.

தரிசனங்களுள் அல்லது மெய் விளக்கக் கோட்பாடுகளுள் நிரம்பவும் மிகுதியான அளவிற்குப் புழக்கத்தில் இருப்பது உத்தரமீமாம்சைதான்; வேதாந்தம் எனவும் அது அழைக்கப் படுகின்றது. ஏனையவை ஐந்தும்கூட இதன் அளவிற்கு தரிச னங்களே யாயினும், அதாவது தத்துவவியற்கொள்கைகளே யாயினும் அவை வெறும் ஆராய்ச்சியளவிலேயே நின்று விட்டன; அவற்றுள் ஏதாவதொன்றைத் தங்கள் அன்ருட வாழ்வில் கடைப்பிடிக்கும் குறிப்பிட்ட தொகுதியினர் என்று எவரும் இப்போது இல்லை. எனவே, உத்தரமீமாம்சை அல்லது வேதாந்தமெனப்படுவதை இன்றைய நடைமுறைத் தத்துவ வியற்கொள்கை என்று குறிப்பிடலாம்; இந்தியத் தத்துவ வியல் என்று சொல்லும்போது, சாதாரணமாக வேதாந்தத் தத்தின் வெவ்வேறு வகைகளைப் பற்றியே நாம் கருத்திற் கொள்ளுகிருேம்; வேறு எந்தக்கொள்கையும் நமது நினைவிற்கு வருவதில்லை. வேதாந்தம் (அல்லது, வேதத்தின் இறுதிப்பகுதி) என்னும் பெயரே சுட்டுவது போல் அதன் போதனைகள்,

வேதங்களின் இறுதிப்பகுதியாக விளங்கும் உபநிஷத்துக்களை அடிப்படையாகக் கொண்டிருப்பவையாகும். தர்மத்தை (அதாவது கர்மங்களைச் செய்வதை) வலியுறுத்தும் பூர்வமீமாம்சையானது, பிராம்மணம் எனப்பெறும் வேதத்தின் முற்பகுதியை ஆதாரமாகக் கொண்டது: ஆனால், வேதாந்தமோ வேதத்தின் பிற்பகுதியை ஆதாரமாகக் கொண்டிருக்கிறது. **பூர்வ** மீமாம்சை, **உத்தர** மீமாம்சை என்னும் பெயர்களுக்குக் காரணம் இதுவேயாகும். இவை இரண்டும் ஒன்றையொன்று நிறைவுபடுத்திக் கொள்பவையே என்றும், உண்மையில், இவை இரண்டும் ஒரே தத்துவவியற் கொள்கையே என்றும் கூறுவதும் உண்டு. அவ்வாறாயின் வேதம் நித்தியமானதென்றும், ஈசுவரன் என்பவருடன் அது சம்பந்தமுடையதன்று என்றும், அதில் விளக்கப்பட்டிருக்கும் தர்மத்தை நடைமுறையில் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் கருதினால் அதில் வியப்பு ஒன்றுமில்லை. மகாபாரதத்திலுள்ள பகவத் கீதையில் உபநிஷத்துக்களின் போதனைகள், அவற்றின் விளக்கக் கதைகளோ ரகசியத் தத்துவ முறைகளோ இல்லாது, மிகச் சுருக்கமாகவும் நிரம்பவும் எளிமையான மொழியிலும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. எல்லோரும் விரும்பும்-சிறப்பாக—உபநிஷத்துக்களின் கருத்துக்களை அறிந்து தெளிந்து கொள்ள இயலாத சாமானிய மக்களும் விரும்பும், நமது மதத்தின் சாரத்தைத் தரும் நூலாக அது கருதப்படுவதற்குக் காரணம் இதுதான். உலகின் பேரொளியான ஸ்ரீ கிருஷ்ணன் குருக்ஷேத்திரப் போர்க்களத்தில் அர்ஜுனனுக்கு கர்மயோகம், ஞானயோகம், பக்தியோகம், பிரபத்தியோகம் (சரணடைதல்) ஆகியவற்றை உபதேசித்து, பற்றோ வெறுப்போ இல்லாது, வாழ்க்கை என்னும் போராட்டத்தை நிகழ்த்தி, பிரபத்தி முறையினால் தம்மை அடையும்படி செய்கிறார்.

வியாஸர் அல்லது பாதராயணர் என்பவர் தமது பிரம்ம சூத்திரங்களில், உபநிஷத்துக்களில் அடங்கியுள்ள அறிவுரைகளை முறைப்படுத்தி, சுருக்கமான சூத்திரங்களின் வடிவில் வழங்கியிருக்கின்றார். வேதாந்தத்தின் முக்கியமான பாட நூலாகும் இது. இதை வெவ்வேறு உரையாசிரியர்கள் வெவ்வேறு வகைகளில் விளக்கிக் கூறியிருக்கின்றனர்; இவ்வாறு தான் வேதாந்தத்தில் பல பிரிவுகள் உண்டாயின. இவற்றுள் நிரம்பவும் முக்கியமானவை விசிஷ்டாத்துவைதம், அத்துவைதம், துவைதம், பாசுபதம் என்பவையாகும். அத்துவைதத்தின் பிரதான ஆசாரியர் சங்கராசாரியரும் விசிஷ்டாத்துவைதத்தின் முக்கிய ஆசாரியர் ராமானுஜரும், துவைதத்தின் பிரதான ஆசாரியர் பூர்ணபிரஞ்ஞாசாரியரும், பாசுபதக்கொள்கையின் முக்கிய ஆசாரியர் ஸ்ரீகண்டரும் ஆவர்.

அத்துவைத் தத்துவக் கொள்கையின் படி, பிரம்மம் ஒன்றுதான் மெய்யானது; அறியும் ஜீவன் அல்லது ஆன்மா, ஈச்வரன், அறியப்படும் உலகு, அறிவு போன்ற மற்றவை யாவும் பொய்; பிரம்மம் என்பது நிர் விசேஷமான, அதாவது, விசேஷம் எதுவுமில்லாத, அல்லது, வேறுபடுத்தப் படாத தூய உணர்வு ஆகும். வேறுபாடுகள் மூவகையாக இருக்கக்கூடும்; ஒரே வகுப்பைச் சேர்ந்தவற்றைப் போன்ற ஒத்த பொருள் களிடையேயுள்ள வேறுபாடு; வெவ்வேறுவகைப் பொருளினி டையே இருக்கும் வேறுபாடு; பொருளிலேயே இருக்கும் அதாவது, பொருளுக்கும் அதன் பண்புகளுக்குமிடையேயுள்ள வேறுபாடு. சித்து (அறிவு) என்பதனுலான பிரம்மத்திற்கும் ஜீவன்களுக்குமிடையே வேறுபாடு எதுவும் கிடையாது. ஈச்வரன் என்பது மாயையில், அதாவது, பிரப்ஞ்சத்தின் மாயத் தோற்றத்தில் பிரதிபலிக்கப் பெறும் பிரம்மம் ஆகும்; ஜீவனே அவித்தையில் அல்லது அறியாமையில், அதாவது, தனி மனி தனைச் சார்ந்த தனிப்பட்ட மாயத் தோற்றத்தில் பிரதிபலிக் கப்படும் பிரம்மம் ஆகும். பிரம்மம் நித்தியமானது; என்றும் இருப்பது. பிரம்மமானது தனக்கிருக்கும் மறைக்கும் ஆற்ற லினுலும் திகைக்க வைக்கும் சக்தியினுலும் ஜீவன்களைத் தங்களது உண்மையான இயல்பை உணரமுடியாற் செய்து, அவற்றில் வெவ்வேறுவகை மாயத் தோற்றங்களை உண்டாக்கு கிறது. இருப்பினும், அது பொய்யானது; ஆகையால், அதற் கும் பிரம்மத்திற்கும் இடையே வேறுபாடு என்பதற்கே இட மில்லை. பிரம்மமே உணர்வு, களிப்பு மற்றும் உண்மை என் பனவாதலால், உணர்வு, களிப்பு உண்மை போன்ற குணங்கள் பிரம்மத்தினின்றும் தனித்திருப்பது என்பது முடியாது. பிரம் மத்திற்கும் அதன் குணங்களுக்குமிடையேயும் வித்தியாசம் இருக்கமுடியாது. சம்சாரம் என்பது அவித்தையின் அல்லது அறியாமையின் விளைவாக ஜீவன்களினிடம் ஏற்படும் மாயத் தோற்றமே யாகும். உபநிஷத்துக்களின் பேருரைகளிலிருந்து கிடைக்கும் ஞானத்தினுல் அவித்தை அல்லது அறியாமை மறைதலே மோட்சமாகும். அஞ்ஞானத்தினுல் ஜீவன்களினிடம் உண்டாகும் மாயத் தோற்றத்திற்கு வழக்கமான எடுத்துக் காட்டு, கயிற்றையோ தரையின் மீதுள்ள விரிசலையோ பாம்பு என எண்ணி மயங்குவதாகும். பொய்யான பாம்பு என் னும் கருத்தினை நிஜமான கயிற்றின்மீது பொருத்திப் பார்க்கும் போது, மெய்யாக இருப்பது கயிறே (அல்லது, விரிசலே) என்பது புலப்படுகிறது; மாயத் தோற்றமும் மறைந்து போகிறது. மோட்சத்தை அடைய விரும்புபவனுக்கு விவேகம் (கூரறிவு), வைராக்கியம் (பற்றின்மை), சமம் (சாந்தம்

அல்லது வேறுபாடில்லாத மனநிலை), தமம் (கரணங்களை அடக்குதல்) முதலிய குணங்களைப் பெற்றிருத்தல், மோட்சத்தைப் பெறுவதில் மெய்யான விருப்பம் ஆகிய நான்கு தகுதிகள் இருக்கவேண்டும். அதாவது, பிரம்மம் ஒன்றே மெய் என்றும், உலகமே பொய் என்றும் அவன் அறிந்து கொண்டு அனைத்தையும் துறந்து, சுய கட்டுப்பாடும் மோட்சத்தைப் பெறுவதற்கான வேட்கையும் அவன் பெற்றிருக்கவேண்டும். மோட்சத்தைப் பெறுவதற்கான ஒரேவழி ஞானம் (அறிவு) ஒன்றே; கர்மமும் பக்தியும் ஞானத்திற்குத் துணையாக இருப்பவையே. ஞானம் வந்துவிடும்போது அவன் இந்த உடலிலேயே மோட்சம் அடைந்து, ஜீவன்முக்தன் என்று அழைக்கப்படுகிறான். இது அத்துவைதத்தின் தனிச்சிறப்பாகும். பிற கொள்கைகளோ ஜீவன்முக்தி என்னும் கருத்தை ஏற்றுக் கொள்ளாது, கர்மத்தின் விளைவாகவே ஏற்பட்டுள்ள இந்த நிலையற்ற உடல்களைக் களைந்த பிறகே ஜீவன்கள் முக்தி பெறுகின்றன என்பதாகக் கூறுகின்றன.

பாஸ்கரர் வகுத்த பாஸ்கர தத்துவக் கொள்கை, யாதவப் பிரகாசர் நிறுவிய யாதவப் பிரகாசரின் மெய் விளக்கக் கோட்பாடு என்னும் வேறு கொள்கைகள் இரண்டும் உள்ளன. பாஸ்கரரின் கொள்கையின்படி, பிரம்மம் சகுணமானது. அதாவது, குணத்துடன் கூடியது. மேலும், மெய்யான ஜீவன்கள், உலகு என்பனவும் உள்ளன. பிரம்மம் தனது சக்தியை வரம்புக்கு உட்படுத்திக்கொள்வதனால் வேறானதாக ஆகி புத்தி, புலன்கள், உடல் முதலியவை போன்ற வடிவங்களைப் பெறுகிறது. இந்த வரம்புகளுடனும் கட்டுப்பாடுகளுடனும் கூடிய பிரம்மத்தின் பகுதிகள் ஜீவன்கள் என்றழைக்கப்படுகின்றன. வெளியை அல்லது ஆகாசத்தைப் போன்றே பிரம்மமும் பிரிக்கப்பட முடியாததாயினும், எங்ஙனம் ஒரு குடத்திற்குள் இருக்கும் ஆகாசம் அல்லது வெளி குடவெளி என்று பெயர் பெறுகின்றதோ, அங்ஙனமே மேற்கூறிய வரம்புகளுடன் கூடிய பிரம்மம் ஒரு தனி ஜீவன் எனக் குறிப்பிடப்படுகிறது. சம்சாரம் என்பது பிரம்மத்தைக் கட்டுப்படுத்தும் உபாதிகளினால் ஏற்படுத்தப்படும் குறையெனச் சொல்லலாம். வேதத்தில் விதிக்கப்பட்டுள்ள கர்மங்கள், ஞானம் ஆகியவை இரண்டிலும் பிரம்மமும் ஜீவனும் ஒன்றே என்று அறிந்த பிறகு, பிரம்மத்தைப் பற்றிய இடையறாத தியானத்தினால் கிடைக்கும் மெய்யறிவினால் இந்த உபாதிகள் அகற்றப்படுகின்றன. வரம்புகள் அல்லது கட்டுப்பாடுகள் மறைந்தவுடன் உண்டாகும் பிரம்மம், ஜீவன் ஆகியவற்றின் ஐக்கியமே மோட்சமாகும்.

யாதவப் பிரகாசரின் கோட்பாடு வருமாறு: பிரம்மம் நிஜமான பரிணாமத்தின் வாயிலாக சித்து, அசித்து, ஈசுவரன் என்று தன்னை மாற்றிக் கொள்கிறது. சித்து என்பது ஜீவன்; உடல், புலன்கள் முதலியவை அசித்து; ஈசுவரனே எதையும் நிகழுமாறு கட்டளையிடுகிருர். பிரம்மத்துடன் தனக்குள்ள ஐக்கியத்தை ஜீவன் அறிவதில்லை; இந்த வேற்றுமை உணர்ச்சியே (அல்லது வேறுபாட்டுணர்ச்சியே) சம்சாரம் ஆகும். நல்வினைகளைச் செய்வதனாலும் கடவுளின் அருளினாலும் சம்சாரத் தளைகளைத் தகர்த்து விடமுடியும். மெய்யறிவினின்றும் பிரம்மத்துடன் ஐக்கியமும் முக்தியும் கிடைக்கின்றன. அந்நிலையிலும் கூட பிரம்மம், ஜீவன், உலகு ஆகியவற்றினிடை ஒற்றுமை, வேற்றுமை இரண்டுமே உள்ளன.

விசிஷ்டாத்துவைதக் கொள்கையின்படி ஆன்மா (சித்து), பொருள் (அசித்து), கடவுள் (ஈசுவரன்) ஆகியன மெய்யானவையாகும். இவற்றுள் சித்தும் அசித்தும் ஈசுவரனின் சிறப்புப் பண்புகள் அல்லது பிரகாரங்கள்; ஈசுவரன் இப்பண்புகளை அல்லது முறைகளை உடையவர், அதாவது, பிரகாரி. பிரகாரம் எனப்படுவது, அதன் அடிப்படையினைக் கண்டு கொள்வதற்குப் பயன்படுவதாகும். பிரகாரி இல்லாமல் பிரகாரம் இருக்கமுடியாது. எனவே, சித்து, அசித்து இரண்டும் உள்ள பிரம்மம் ஒன்றாகக் குறிப்பிடப்படுகிறது. பிரகாரியும் பிரகாரமும் அடிப்படையில் வேறுபாடுள்ளனவாதலால், அவற்றின் இயல்பில் வித்தியாசம் உள்ளது. சுத்த சத்துவம், மிச்ர சத்துவம், சத்துவ சூனியம் என அசித்து மூவகைப்படும். சுத்த சத்துவம் சுயஒளியுள்ளது, அதுபரமபதம் எனப்படுகிறது. காலம் சத்துவசூன்யமானது. ஆனால், வெளியை (அல்லது, இடத்தை)ப் போல் நித்தியமானது. சத்துவம், ரஜஸ், தமஸ் ஆகியவற்றுக்குட்பட்ட மிச்ர தத்துவமானது பிரகிருதி, மகத்து, அகங்காரம், சூட்சுமப் பொருள்கள், புலன்கள் முதலிய இருபத்து நான்கு தத்துவங்களின் வடிவங்களாகப் பரிணமிக்கிறது; ஜீவன்களின் முன்வினைகளுக்கேற்ப அவற்றின் உடல், அகங்காரம் ஆகியனவாகவும் அமைகிறது. மமகாரம் (என்னுடையது என்னும் பற்று), அறியாமை (அஞ்ஞானம்) ஆகியவற்றால் உடலுடன் கூடிய ஆன்மாக்களுக்கு ஏற்படும், மீண்டும் மீண்டும் நிகழும் பிறப்பு இறப்புச் சுழற்சியே சம்சாரம் ஆகும். கர்மம், அவித்தை இவற்றின் சுழற்சியில் சிலருடைய பாவங்கள் அவர்களின் நல்வினைகளினால் அழிக்கப்பட்டு விடுகின்றன. அப்போது அவர்கள் மீட்புக்காகக் கடவுளை வேண்டுகின்றனர். நற்குருவின் உபதேசத்தின் வாயிலாகக் கடவுளின் அன்பினால் அல்லது அருளினால் கிடைக்கும் சாத்திரங்களின் மெய்யறிவை உணர்

கின்றனர். அவர்கள் தத்தம் வாழ்க்கை நிலைக்கேற்ப தவிர்க்க முடியாத கடமைகளையும், விருப்பமிருந்தால் செய்யக் கூடிய கடமைகளையும் முறையாக நிறைவேற்றி, சமம், தமம் (கரணங்களை அடக்குதல்), தவம், சௌசம் (தூய்மை), க்ஷமை (பொறுமை), ஆர்ஜவம், பயம் (அச்சம்), அபயம், ஸ்தானம், விவேகம், அகிம்சை, தயை (இரக்கம்) முதலிய, மனிதனை உயர்த்தும் ஆன்மிகப் பண்புகளைப் பெறுகின்றனர். கடவுளையே புகல் எனச் சரணடைந்தும், பக்தி காரணமாக சாத்திரத்தை நினைவு கூர்ந்தும் சிந்தித்தும் கடவுளின் குணங்களை எப்போதும் நினைவிலிருத்தியும் கடவுளின் அருளினால் அஞ்ஞானத்திலிருந்து விடுபடுகின்றனர். அவர்கள் பக்தியோகத்தைக் கடைப் பிடித்து, உடலை விட்டு ஏகும்போது பிரபத்தி, அதாவது, சரணாகதி முறையினாலும் கடவுளின் அருளினாலும் முக்தியடைகின்றனர். முக்தியானது கைவல்யம், ஈசுவரனை அடைதல் என்று இருவகைப்பட்டதாகும். கைவல்யம் என்பது ஆன்மாவை அறிந்துணர்ந்து கொள்வதிலிருந்து உண்டாகும் மகிழ்வின் நுகர்வு; மற்றையதோ பரமபதத்தில் ஈசுவரனை அடைந்து, அவரது மெய்வடிவினையும் நிரந்தரமான இன்பத்தினையும் நுகர்ந்து துய்ப்பதாகும். ஈசுவரன் பரம்பதத்தில் தமக்கே உரிய தெய்விக எழிலார்ந்த வடிவம் கொண்டிருக்கின்றார். இறைவனின் பிரத்தியட்சமான கருணையின் வடிவமாகிய சீதேவி, பூதேவி, நீளாதேவி ஆகியோருடனும், எப்போதும் சுதந்திரமாயிருக்கும் அனந்தன், கருடன், விஷ்வக்ஸேனர் போன்ற நித்ய சூரிகளுடனும் முக்தர்களுடனும் (அதாவது, விடுதலை யடைந்த ஆன்மாக்களுடனும்) ஒன்றியிருக்கின்றார். அவரது முக்கியமான விளையாட்டு, பிற ஜீவன்களையும் கர்மத்தி லிருந்து விடுவித்துத் தம்மை யொத்தவர்களாகச் செய்வதே யாகும்.

தூய அல்லது இறுதியான பிரம்மம் என்பதும் விஷ்ணு, நாராயணன், வாசுதேவன் அல்லது வேங்கடேசுவரர் எனப் படுவதும் ஒன்றேயாகும் என்று விசிஷ்டாத்துவைதம் கூறுகிறது. மனித குலத்தை மீட்கும் பொருட்டு மிக முக்கிய மான அல்லது வரலாற்றுச் சிறப்பு மிக்க சந்தர்ப்பங்களில் கடவுள் வெவ்வேறு வடிவங்களில் அவதரிக்கின்றார். பக்தர் களின் அல்லது அடியார்களின் வேண்டுகோளுக்கிணங்கி எல்லை யில்லாத அன்பு காரணமாக அவர் அர்ச்சை வடிவங்களில் அல்லது விக்கிரக வடிவங்களில் நிரந்தரமாக அவதாரம் எடுக் கின்றார். எனவே, விசிஷ்டாத்துவைதக் கொள்கையின்படி, வாசுதேவன் அல்லது விஷ்ணு என்பவரே திருமலையில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கின்றார். கலியுகத்தில் தவறு

செய்யும் மாந்தர்கள்பால் உள்ள எல்லையற்ற பேரன்பினுல், முடிவில்லாத பரம்பொருள் திருமலையில் நிரந்தரமாக அவதாரம் செய்திருக்கின்ருர்; நிலையற்ற மனிதன் அவரது அருளுக்குத் தன்னை முழுவதும் ஒப்படைத்துக் கொள்வதனுல் அழிவற்ற அமரனுகின்ருன். ஆகவே, திருப்பதியானது கலியுக வைகுண்டமே என்னும் கூற்றுனது சற்றும் மிகையேயாகாது. ஜீவனுக்கும் ஈசுவரனுக்குமுள்ள தொடர்பு, உடலுக்கும் (சரீரத்திற்கும்) உடலையுடைய ஆன்மாவிற்கும் (சரீரிக்கும்) இருக்கும் தொடர்பைப் போன்றதேயாகும். எனவே, ஈசுவரன் இவ்வுலகிலுள்ள ஒவ்வொன்றினுடைய அக ஆன்மாவாக அல்லது உள்ளான்மாவாக இருக்கின்ருர்; ஒவ்வொரு பெயரும் உருவமும் இறுதியில் ஆன்மாக்களுக்கெல்லாம் பேரான்மாவாக விளங்கும் ஸ்ரீ நிவாஸனுக்கே அல்லது பிரம்மத்திற்கே உரியதாகும்.

துவைத சித்தாந்தத்தின்படி, ஜீவன் (சித்து), உலகு (அசித்து), கடவுள் (ஈசுவரன்) ஆகியவை வெவ்வேருன தத்துவங்களாகும். கடவுள் உலகின் சாதாரண காரணமாக மட்டுமே ஆகின்ருர். விஷ்ணுவே அவர். நற்குணங்கள் அனைத்தும் கொண்டவர் அவர்; ஞானம் (அறிவு), ஆனந்தம் (களிப்பு) முதலியவற்றுலான எழில்மேனி உடையவர் ஆவார். ஜீவன்களும் உலகும் அவரைச் சார்ந்திருப்பவை. அளவில் மிக மிகச் சிறியனவாயிருக்கும் ஜீவன்கள் ஒன்றிலிருந்து ஒன்று வேருனவை. அவை தத்தம் குணங்களுக்கேற்ப தமோயோக்யர்கள், நித்ய சம்சாரிகள், முக்தியோக்யர்கள் என்று மூவகைப்படும். முதல்வகை ஜீவன்கள் எப்போதும் நரகத்தில் உழலுகின்றன. மூன்ருவது வகை ஜீவன்கள் என்றைக்கும் சுதந்திரமாயிருந்துகொண்டு விஷ்ணுலோகத்தில் வசிக்கின்றன. இரண்டாவது வகையைச் சேர்ந்த ஜீவன்கள் செய்கைகளின் பலன்களைத் துறப்பது என்பதிலிருந்து விஷ்ணுவின் தியானம் என்பது வரை உள்ள பயிற்சிகளினுல் கடவுளை நேரடியாக உணர்ந்தறிந்து, அவற்றின் இயல்பிற்கேற்ப முக்தர்களுக்குரிய (அதாவது, விடுதலை பெற்றவர்களுக்குரிய) இன்பங்களைத் துய்க்கின்றன. வெறுப்பு முதலிய வாசனைகள் அல்லது பற்றுக்கள் இல்லாமலிருந்தால் அவை முக்தி அல்லது விடுதலை பெற்று, மிக உயரிய இன்பத்தை நுகர்கின்றன. கடவுளுக்கும். ஜீவனுக்குமுள்ள உறவு ஆண்டைக்கும் அடிமைக்குமுள்ள உறவைப் போன்றதாகும். எனவே, இக்கோட்பாட்டின்படி, வாழ்வின் பெருநலம் என்னவென்ருல், இம்மையிலும் மறுமையிலும் இறைவனுக்குத் தொண்டுபுரிவதே யாகும்

பாசுபதக் கொள்கையின்படி, கடவுள் (பதி), ஜீவன் (பசு,) இயற்கை (பாசம்) என்று மூன்று நிரந்தரமான தத்துவங்கள் உள்ளன. கடவுள்தாம் மிக உயரிய பதி அல்லது பரமேசுவரன். அவரே உலகின் சாதன காரணம், அதாவது, அதை ஆக்கும் காரணம் ஆவார்; அணுக்கள் பொருட்காரணமாக இருக்கின்றன. ஜீவன் ஈசுவரனிடமிருந்தும் பொருளிலிருந்தும் வேறானது; ஆனால், தன்னுணர்வுடையது. எதனெதனுடன் சம்பந்தம் உண்டாகின்றதோ அதனதன் வடிவத்தை ஏற்கும் பளிங்கைப் போன்றது அது. ஆணவம், மாயை, காமியம் (அறியாமை, சடத்துவம், ஆசை) என்பவற்றாலான பாசத்தில் சிக்கிக் கொள்ளும் போது, அது பாசம் என்னும் சம்சாரத்தை அநுபவிக்கிறது. ஜீவன் பதியுடன் தொடர்பு கொள்ளும் போது பதியைப்போல ஆகின்றது. தனது அறியாமை முதலியவற்றை அகற்றும் குறிப்பிட்ட சில பயிற்சிகளைக் கடைப் பிடிப்பதால் ஜீவனானது முக்தி அல்லது விடுதலை பெறுகிறது. இக்கொள்கையின்படி, முக்தி எனப்படுவது சிவசாரூப்யம், அதாவது சிவனை யொத்த உருவத்தை அடைதலே அல்லாது, சிவ –ஐக்கியம், அதாவது, சிவனுடன் ஒன்றிணைதல் அன்று. அன்பே சிவன்; தமது அருளினால் ஜீவனிடமிருந்து அதன் மலங்களை அல்லது அழுக்குகளை அவர் நீக்குகிறார். ஞானத்தின் மிக உயரிய நிலையாதெனின், சிவனுக்கும் சிவனடியார்களுக்கும் தொண்டாற்றுவதேயாகும்.

சைவம், சாக்தம் இரண்டும் பாசுபதத்தில் சேர்ந்தவையேயாகும். சாக்த மதத்தில் சண்டி என்றழைக்கப் பெறும் சக்தி அல்லது தேவியே உயர்வான தெய்வம். காளி, லட்சுமி, சரஸ்வதி என்னும் மூன்று வடிவங்களில் அவளை வழிபடுகின்றனர். சக்தியின் அன்பு காரணமாக உலகம் சிவனிடமிருந்து தோன்றி, அவரிடமே ஒடுங்கி விடுகிறது. ஞானத்தினாலும் பக்தியினாலும் ஜீவன் விடுதலையடைந்து சிவனுடன் ஒன்றி விடுகிறது. சாக்தர்களில் சில பிரிவினர், கள்குடத்தில் கடவுளை வழிபடுவது, சுடலையின் சாம்பலைப் பூசிக்கொள்வது போன்ற, வேதத்திற்குப் புறம்பான ஆசாரங்களைப் பின்பற்றுகின்றனர்.

**இடைக்காலத்திய சித்தாந்தங்கள்** : விசிஷ்டாத்துவைதம், பக்தியையும் பிரபத்தி அல்லது சரணாகதி என்பதனையும் கொள்கைகளாகக் கொண்டிருந்ததோடு கூட, பக்தி செய்வோர், பிரபத்தி செய்வோர் அனைவரும் எந்த ஜாதியைச் சேர்ந்தவராயிருந்தாலும் சரி, ஆணாகவோ பெண்ணாகவோ இருந்தாலும் சரி, அவர்கள் சரி சமானமானவர்களே என்னும் கருத்திற்கும் முக்கியத்துவம் அளித்ததால், அது எல்லா மக்களின் மனத்தை

யும் கவர்ந்தது; எனவே, விரைவில் நாடு முழுவதும் பரவியது. பக்திமான்கள் பலர் வடஇந்தியாவில் இச்சித்தாந்தத்தைப் பரப்புவதற்கு முன்வந்தனர். ஆனால், அவர்களின் போதனைகள் அவரவர்களது மனப்பாங்கின் தன்மைக்கேற்ப அமைந்திருந்தன. பிரம்மம் (அல்லது, பரமாத்மா) என்பதும், நாராயணன் (அல்லது, விஷ்ணு) என்பதும் ஒன்றே என்னும் கருத்தினைக் கொண்ட விசிஷ்டாத்துவைதத்தின் போக்கு இம்மெய்யடியார்களின் உள்ளத்தை ஈர்த்ததனால், தம்தம் மனத்திற்குகந்த நாராயணனின் சிறப்பு உருவங்களில் மட்டும் கடவுள் இருப்பதாகக் கொண்டனர் இவர்கள். எந்த உருவத்தில் கடவுளை வழிபட்டாலும், அந்த உருவத்திலேயே அவர் தோன்றி, பக்தியை ஏற்றுக் கொள்கிறார்.

இத்தகைய போதகர்களுள் முதன்மையானவர் ராமானந்தர். 'ஈசுவரன் ஒவ்வொரு ஜீவனினுள்ளும் வசிக்கிறார், நேர்மை நிறைந்த ராமனே அவர்' என்பது அவரது கொள்கை. முஸ்லீம்கள் கூட ராமானந்தரின் சீடர்களாயினர் என்பதிலிருந்து அவரது பெருமையின் தனிக்கவர்ச்சிக்கும் அவருடைய போதனைகளுக்கு மிருந்த வலுவை நாம் மதிப்பிட்டுக் கொள்ள முடியும். அவருடைய போதனைகளை கபீர் பின்பற்றி, இஸ்லாமிய மதத்துடன் தக்க முறையில் இணைத்து 'கபீர்பந்த்' அல்லது 'கபீர்வழி' என்பதனை நிறுவினார்.

ஸ்ரீ கிருஷ்ணனே பிரம்மம் என்று போதித்தவர் வல்லபர். அவரது கொள்கையின்படி கடவுளின் வடிவம் ஆன்மிகக் காதலினாலான ராதாகிருஷ்ண உருவமாகும். கடவுள் ஜீவன்களுடன் கோகுலத்தில் விளையாடுகின்றார். படைப்பு என்பது கிருஷ்ணனின் லீலை அல்லது திருவிளையாடல் ஆகும். கிருஷ்ணனை அடைவதற்கான ஒரே சாதனம் பக்திதான். புஷ்டி அல்லது அடக்க முடியாத காதல் என்பதே பக்தி. உடலிலிருந்து விடுதலையடைந்தவுடன் பக்தன் வைகுண்டத்திற்கும் அப்பாலுள்ள கோகுலத்திற்குச் சென்று, கிருஷ்ணனோடு ஒன்றி விடுவதனால் உண்டாகும் பேரானந்தத்தை அனுபவிக்கிறான்.

ராதாகிருஷ்ண வழிபாட்டுக் கொள்கையினைப் போதித்தவர் சைதன்யர். தூய அல்லது இறுதி மெய்ப்பொருளான

பிரம்மம் எனப்படுவது, தமது அன்பு நிறைந்த 'மற்றொன்று' ஆகிய ராதாவுடன் விளையாடும் ஸ்ரீ கிருஷ்ணனே ஆகும். கிறங்கவைக்கும் மோகன எழில் வடிவம் அவருடையது. அவர் தமது மயக்கும் பேரழகினால் ஜீவன்களைத் தம்மிடம் ஈர்க்கின்றார். பக்தி அல்லது பிரேமையே கிருஷ்ண இன்பத்தை அடைவதற்கான ஒரே வழியாகும். கிருஷ்ணனின் பால் காட்டும் அன்பில், பல்வேறு மனப்பாங்குகளை-கடவுளை எசமானனாகவும், தோழனாகவும், இன்னும் பலவாறாகவும் அணுகி வழிபடும் முறைகளை - சைதன்யர் எடுத்துக் கூறினார். இவற்றுள் கிருஷ்ணனை ஆன்மிகக் காதற்கணவனாகக் கருதுதல் மிகச் சிறந்ததாகும். கிருஷ்ணனின் காதல் அல்லது அன்பு என்பது வைகுண்டத்தின் இன்பங்களையும் விஞ்சியதாகும்.

**நவீன சமய இயக்கங்கள் :-** பிரம்ம சமாஜம், ஆர்ய சமாஜம், ராமகிருஷ்ண இயக்கம் ஆகியவை அந்நிய சமயங்களின் மத மாற்ற அலுவல்களுக்கு எதிராகத் தோன்றிய வலுவான இயக்கங்களாகும். அவை, இன்றைய காலத்தின் தேவைகளுக்கேற்ற கருத்துக்களின் அவசியம் காரணமாகத் தோன்றிய இயக்கங்களாகும்.

———

## அத்தியாயம் - 6

# சமய இலக்கியங்கள்

நமது மதத்தின் அடிப்படையான ஆதாரம் வேதங்களாகும். பிரம்மத்தின் சொற்களாகிய அவை பிரம்மமே யாகும் என்று சொல்லப்படுகிறது. மகான்களான ரிஷிகளினுல் எடுத்துரைக்கப்பட்டவை அவை. உலகின் மிகப் பழைய இலக்கியத்தின் மாதிரிகள் அவைதாம். அவற்றின் மொழி சம்ஸ்கிருதத்தின் ஒரு பண்டைய வடிவாகும். வேதங்கள் நான்கு: ரிக்வேதம் யஜுர்வேதம், சாமவேதம், அதர்வவேதம். ஒவ்வொரு வேதமும், செய்கைகளை அல்லது கர்மங்களை விவரிக்கும் கர்மபாகம் அல்லது செயல்பகுதி, தத்துவத்தை அல்லது மெய்ப் பொருளை ஆராயும் தத்துவப் பகுதி என்னும் இரு பகுதிகளினுல் ஆகியது. முற்பகுதியில், புண்ணியம் சேர்ப்பதை விரும்புவோர் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறையும், பிற்பகுதியில் வாழ்வின் நிரந்தர உண்மைகளும் விரிவாக விளக்கப் பெற்றுள்ளன. எதை அறிந்து கொண்டால் எல்லாவற்றையும் அறிந்து கொள்ள முடியுமோ அதுவே பிரம்மம்; எனவே, பிரம்மத்தைக் குறித்து ஆராயும் வேதப்பகுதியே மிக முக்கியமான பகுதியாகும். அது வேதாந்தம் அல்லது உபநிஷத்து எனப்படுகிறது. வேதத்தின் முற்பகுதியையே மந்திரம், பிராம்மணம் என்னும் இருபகுதிகளாக மேலும் பிரிக்கலாம். பிராம்மணம் என்பது மதக்கிரியையின் அல்லது சடங்கின் விவரங்களைப்பற்றிக் குறிப்பிடுவதோடு கூட, ஒவ்வொரு சடங்கின் போதும் சொல்ல வேண்டிய குறிப்பிட்ட மந்திரத்தையும் கூறுகிறது; மந்திரப்பகுதியில் மந்திரங்களின் வாக்கியங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இரு பகுதிகளும் கிருஷ்ணயஜுர் வேதத்தில் மட்டும் பின்னிப் பிணைந்துள்ளன. ஏனைய வேதங்கள் அனைத்திலும் அவை தனித்தனியே காணப்படுகின்றன.

முதன் முதலில் வேதங்களை ரிஷிகள் எடுத்துரைத்திருப்பினும், அவற்றை இயற்றியவர்கள் அவர்களே என்று எண்ணி விடக்கூடாது. இந்து மதத்தின்படி, வேதங்கள் நிரந்தரமானவை. காலம் நெடுகிலும் இருந்து வருபவை அவை; காலத்திற்கு அப்பாற்பட்டவை கூட. வேதங்களுக்கிணங்கவேதான்

பிரம்மத்திஞல் உலகம் உண்டாக்கப்பட்டது என்று சொல்லப் படுகிறது. வேதங்கள் கடவுளிஞலேயோ அல்லது கடவுளிஞல் ஊக்குவிக்கப்பட்டவர்களிஞலேயோ வெவ்வேறு யுகங்களில் மானிடர்களுக்கு வழங்கப்படுகின்றன. ஆகவே, முனிவர்கள் கடவுளின் அருளிஞல் வேதங்களை மனத்தில் கண்டு நமக்கு அளித்திருக்கின்றனர்; அவை மானிடர்களிஞல் இயற்றப்பட வில்லை யாதலால், அவை தவருகப் போக முடியாது; மனிதர் களின் மனங்கள் தவறு செய்யக் கூடியவை; எனவே, மனிதன் செய்யும் எதுவும் தவருகப் போகக்கூடும். ஆஞல், வேதங்கள் அப்படியில்லை. அவற்றில் பிழையே இருக்கமுடியாது; ஆகவே, அவற்றை ஏற்றுக்கொள்ளும்படியாகவே உள்ளது. அவை, ஆன்மிக நோக்கில் கீழ்ப்படிந்தாக வேண்டிய, நிரந்தரமான, ஆன்மிகக் கட்டளைகளாகும். இக்கருத்திற்கிணங்க, வேதங் களின் மொழி தேவபாஷை அல்லது தேவ மொழி எனப்படு கிறது. வேதங்களின் தொன்மையினையும் அவற்றின் நித்திய மான தூய்மையினையும் வலியுறுத்தும் வகையிலேயே மொழி யியற் சான்றுகளும் அமைந்துள்ளன. வேதங்கள் வரலாற்றுக்கு அப்பாற்பட்டவை யாகவும், வெறும் வரலாற்றுக்கு முற்பட் டவையாகவும் மட்டுமல்லாது வரலாற்றுக்கே புறம்பானவை யாயும் இருப்பதால், அவற்றின் காலத்தை வரலாற்று நோக்கில் கணிக்க முடியாது.

ஒவ்வொரு வேதத்தின் இறுதிப்பகுதியும் உபநிஷத்து அல்லது வேதாந்தம் என்றிருந்தாலும்கூட, எல்லா உபநிஷத் துக்களுமே வேதங்களுள் இணைந்தவையல்ல. பெரும்பான்மை யான உபநிஷத்துக்கள் வேதாந்தத்தை மாதிரியாகக் கொண்டு ஏற்பட்டவையாகும். ஐதரேய உபநிஷத்து, கௌஷீதகி உப நிஷத்து, கடோபநிஷத்து, சாந்தோக்ய உபநிஷத்து, ஈசோப நிஷத்து, தைத்திரிய உபநிஷத்து ஆகியவை அவ்வவற்றுக்குரிய வேதங்களின் கடைசிப் பகுதிகளாகும். இவை தவிர, மேற் குறிப்பிட்டனவற்றைப் போன்றே முக்கியத்துவமும் பிரமாண பலமும் வாய்ந்த இன்னும் சில உபநிஷத்துக்களும் உள்ளன. அவை பிருஹதாரண்யக உபநிஷத்து, சுவேதாச்வதர உப நிஷத்து, முண்டோநிபஷத்து, மாண்டூக்ய உபநிஷத்து, மைத்ரா யணீய உபநிஷத்து, கேஞேபநிஷத்து ஆகியனவாம். இவற்றுள் பிருஹதாரண்யக உபநிஷத்து சுக்ல யஜுர் வேதத்தையும், சுவேதாச்வதர உபநிஷத்தும் மைத்ராயணீய உபநிஷத்தும் கிருஷ்ண யஜுர் வேதத்தையும், கேஞேபநிஷத்து சாமவேதத் தையும், முண்டோபநிஷத்தும் மாண்டூக்ய உபநிஷத்தும் அதர்வ வேதத்தையும் சேர்ந்தவையாகும். சுவேதாச்வதர உபநிஷத் தையும் மைத்ராயணீய உபநிஷத்தையும் தவிர்த்த பிற உப

நிஷத்துக்கள் பொதுவாக 'பத்து உபநிஷத்துக்கள்' எனப்படு கின்றன. நமது வேதாந்தக் கோட்பாட்டிற்கு அவையே ஆதாரம்; நமது ஆசாரியர்களினுல் அவரவர் கொள் கைகளுக்கு ஆதரவாக அவற்றிலிருந்து அடிக்கடி மேற்கோள் கள் எடுத்துரைக்கப்படுகின்றன. இவற்றையன்றி, நமது மதத் தின் பல்வேறு பிரிவினரின் அனுஷ்டானங்களுக்கும் அடை யாளங்களுக்கும் அடிப்படையாயுள்ள ஏறக்குறைய நூறு வேறு உபநிஷத்துக்களும் இருக்கின்றன.

உபநிஷத்து ஒவ்வொன்றும் குறிப்பிட்டதொரு தத்துவக் கொள்கையின் சுருக்கமான சாராம்சத்தை எடுத்துரைப்பதாக எண்ணி விடக்கூடாது. ஒரு வகையில் அவை மெய் விளக்கக் கோட்பாடுகளில் காணப்படும் வெவ்வேறு விஷயங்களைப் பற்றிய விவாதங்களே ஆகும். பாதராயணர் அல்லது வியாசர் என்பவர் உபநிஷத்து இலக்கியம் முழுவதையும் பயின்று, அவற்றின் உள்ளுறைக் கருத்துக்களை வகைப்படுத்தி, தமது உத்தரமீமாம்சைச் சூத்திரம் என்னும் தரிசனத்தில் விளக்கி யிருக்கின்ருர். சூத்திரங்களும் உபநிஷத்துக் கூற்றுக்களும் அல்லது அவற்றுக்கு ஆதாரமாக விளங்கும் சுருதிகளும் வெவ் வேறு ஆசாரியர்களினுல் அவரவர் தத்துவக் கொள்கைக்கேற்ப வெவ்வேறு வகையில் விளக்கப்படுகின்றன. இவ்வாறு தான், அத்துவைதம், விசிஷ்டாத்துவைதம், துவைதம், சைவம் முதலிய வெவ்வேறு வேதாந்தக் கோட்பாடுகள் தோன்றின. பெரும் பாலான ஆசாரியர்கள் தத்தம் தத்துவவியற் கோட்பாட்டிற் கிணங்கவே உபநிஷத்துக்களின் விரிவுரைகளை எழுதினுர்கள்.

அடுத்தபடியாக நமது மதத்திற்கு ஆதாரமாக இருப்பது தர்ம சாஸ்திரங்கள் அல்லது அறநூல்கள் ஆகும். அவை சூத்திரங்கள், ஸ்மிருதிகள் என்று இருவகைப்படும். சூத்திரங் கள் என்பவை, அவற்றின் பெயரே குறிப்பிடுவதுபோல், சிறு வாக்கியங்களாக அல்லது சுருக்கமான சொற்றொடர்களாக இருப்பவை. ஸ்மிருதிகளோவெனில் செய்யுள் வடிவில் அமைந் திருப்பவை. முனிவர்களுக்கு நேரடியாகத் தெரிவிக்கப்பட்டது சுருதி; ஸ்மிருதி என்பது அவர்களினுல் நினைவு கூறப்பட்டுப் பின்னர் குறித்து வைக்கப்பட்டதாகும். சமுதாயத்தின் ஒவ் வொரு பகுதிக்கும், சமுதாயம் முழுவதற்குமான நெறிமுறை களை அறநூல்கள் கூறுகின்றன. அடிப்படை அறவியல் உண்மை களை எடுத்துச் சொல்லும் வேதங்களிலிருந்து எடுக்கப்பட்ட வையே தர்ம சாஸ்திரங்களில் இருப்பவை அனைத்தும்; தர்ம சாஸ்திரங்கள் புதிதாக எதையும் எடுத்துரைப்பதில்லை. வேதங் களில் இருப்பதற்கும் அறநூல்களில் அறிவுறுத்தப்படுவதற்கு

மிடையே வெளிப்படையான முரண்பாடு எதுவும் இருக்குமே யானல், வேதங்களில் சொல்லப்பட்டிருப்பதையே பின்பற்ற வேண்டும்; ஏனெனில், வேதங்கள் எல்லாவற்றிற்கும் மேலாகவும் முழுமையான அளவிற்கும் உண்மையானவையாகும். தர்ம சாஸ்திரங்களில் ஏதாவது புதியதாக இருந்து அதற்குச் சரியானதான எதுவும் வேதங்களில் இல்லை என்றல், அதற்குச் சரியான வேதத்தின் பகுதி இப்போது மறைந்து போய்விட்டது என்றும், தர்ம சாஸ்திரங்களை எழுதிய ஆசிரியரின் காலத்தில் அது இருந்தது என்றுமே நாம் கொள்ள வேண்டுமே யல்லாது, தர்ம சாஸ்திரங்களில் இருப்பதை நாம் புறக்கணித்து விடக் கூடாது. ஆனல் ஒரே பொருளைக் குறித்து இரு முனிவர்களின் தர்மசாஸ்திரங்கள் வெவ்வேறு நெறி முறைகளைக் குறிப்பிட்டால், அவற்றுள் ஏதாவதொன்றையோ அல்லது இரண்டையுமோ தவறு எனத் தள்ளிவிடக்கூடாது: அவற்றுள் ஏதாவதொரு நெறிமுறையை நமது விருப்பம் போல் நாம் பின்பற்றலாம் என்றே நாம் புரிந்து கொள்ளவேண்டும். ஆயினும், அவற்றுள் ஏதாவதொரு நெறிமுறையையே பின்பற்றும் மரபு நமது குடும்பத்தில் இருந்து வந்தால், அம்மரபைத்தான் நாமும் பின்பற்ற வேண்டும்; ஏனெனில், ஏனையோரால் கடைப்பிடிக்கப் பட்டு வந்த ஒரு பண்டைய தர்மத்தினை அது நிலைநிறுத்தியதாக ஆகும்.

தர்ம சாஸ்திரங்கள் கல்பசூத்திரங்களின் இறுதிப்பகுதிகளாகும். கல்பம் வேதங்களின் ஆறு அங்கங்களுள் ஒன்று. ஆறு அங்கங்களாவன; சிக்ஷை அல்லது உச்சரிப்பு இயல்: வியாகரணம் அல்லது இலக்கணவியல்; சந்தஸ் அல்லது யாப்பியல்; நிருக்தம் அல்லது சொல்லியல்; சோதிடம் அல்லது வானவியல்; கல்பம் அல்லது செய்முறையியல். வேதத்தில் விதிக்கப்பட்டுள்ள கர்மங்கள், வீட்டில் செய்ய வேண்டிய கர்மங்கள், பொதுவாக மனித சமுதாயத்திற்கு ஆற்ற வேண்டிய கடமைகள் ஆகியவை அனைத்தையும் சொல்வது கல்பம். நமக்குக் கிடைத்திருக்கும் தர்ம சாஸ்திரங்கள் கல்பசூத்திரங்களின் கடைசிப் பகுதிகள் அல்ல. சில ரிஷிகள் முழு கல்ப சூத்திரங்களையும் வேறு சிலர் குறிப்பிட்ட பகுதிகளை மட்டுமே எழுதியுள்ளனர். ஆபஸ்தம்பர், ஹிரண்யகேசி, போதாயனர், விகனஸர் ஆகியோர் எழுதியுள்ள கல்பசூத்திரங்கள் முழு கல்ப சூத்திரங்களாகும். கௌதமர், வசிஷ்டர் ஆகியோர் எழுதிய தர்ம சாஸ்திரங்கள் தனிப்பட்ட நூல்கள்; அவர்கள் எழுதிய கல்பசூத்திரங்கள் எவையும் கிடைக்கவில்லை.

ஸ்மிருதிகள் அல்லது சட்ட நூல்கள் பதினெட்டு; அவை யாவன: 1. மனுஸ்மிருதி; 2. பராசரஸ்மிருதி; 3. வசிஷ்ட ஸ்மிருதி; 4. சங்கஸ்மிருதி; 5. லிகிதஸ்மிருதி; 6. அத்ரி ஸ்மிருதி; 7. விஷ்ணுஸ்மிருதி; 8. ஹாரீதஸ்மிருதி; 9. யம ஸ்மிருதி; 10. அங்கிரஸஸ்மிருதி; 11. உசனஸ்மிருதி; 12. சம் வர்த்தஸ்மிருதி; 13. பிருஹஸ்பதிஸ்மிருதி; 14. காத்யாயன ஸ்மிருதி; 15. தட்சஸ்மிருதி; 16. வியாஸஸ்மிருதி; 17. யாக்ஞவல்க்யஸ்மிருதி; 18. சாதாதபஸ்மிருதி. இந்த ஸ்மிருதி கள் எல்லாமே பிரமாணமானவை தாம்; ஆனால், மனுஸ்மிருதி நிரம்பவும் விரிவானதாகவும் தெளிவானதாகவும் இருப்பதால், அது ஏனைய ஸ்மிருதிகளின் ஆசிரியர்களினாலும் இதிகாசங்கள், புராணங்கள் ஆகியவற்றின் ஆசிரியர்களினாலும் பெரிதும் மதிக்கப்பட்டு வந்திருக்கிறது; பராசரஸ்மிருதி கலியுகத்திற் கான திட்டமான ஸ்மிருதியாகக் கருதப்படுகிறது. கலியுகத் திற்கான சிறப்பான விதிகளைப்பற்றி அது விரிவாகக் கூறு கிறது. மனுவின் விதிகள் கிருத யுகத்திற்கும், கௌதமரின் விதிகள் திரேதாயுகத்திற்கும், சங்கஸ்மிருதி, லிகிதஸ்மிருதி ஆகியவற்றின் விதிகள் துவாபர யுகத்திற்கும், பராசரரின் விதிகள் கலியுகத்திற்கும் பொருந்துமென மனுஸ்மிருதியிலேயே கூறப்பட்டுள்ளது.

ரிஷிகளால் எழுதப்பட்டவையும் தர்ம சாஸ்திரங்களைப் போன்றே பிரமாண நூல்களாகக் கருதப்படுபவையும், ஆனால், தர்ம சாஸ்திரங்கள் என்னும் தொகுப்பினுள் திட்டமாக அடங் காதவையுமான வேறு சில நூல்களும் உள்ளன. அவை இதி காசங்கள், புராணங்கள், ஆகமங்கள், தந்திரங்கள் என்பன வாம். நமது ஸ்மிருதிகளில் விதிக்கப்பட்டுள்ள கடமைகளை எங்ஙனம் வெவ்வேறு ஆட்கள் செய்கின்றனர் என்பதையும், கடமைகளினிடையே ஒருவகை முரண்பாடு மாதிரி தோன்றும் போது மக்கள் எப்படிச் செயல்படவேண்டும் என்பதையும். அப்படிச் செய்வதனால் மக்களுடைய மனத்தில் அதர்மதத்தைப் புறக்கணித்து தர்மத்தைக் கடைப்பிடிக்கும் விருப்பத்தை எவ்வாறு ஏற்படுத்த வேண்டும் என்பதையும் இதிகாசங்கள் விவரிக்கின்றன. ராமாவதாரம், கிருஷ்ணாவதாரம் போன்ற கட வுளின் அவதாரங்கள் மனிதனை இறை நிலைக்கு உயர்த்தும் பொ ருட்டுஅவன் நிலைக்குத்தாழ்ந்துவந்து,படைத்தல்,காத்தல்அழித் தல் ஆகியவற்றின் வழிவகைகளையும் மக்களை நல்லமுறையிலோ தவறான முறையிலோ ஆளும் முறையினையும் கூறுவதன் வாயி லாகக் கடவுளின் மாபெரும் சக்தியை நமக்குத் தெரியப்படுத்து வதைப் புராணங்கள் விவரிக்கின்றன. கோவில்கள் கட்டுவதற் கும் விக்கிரகங்களை அமைப்பதற்கும் அவற்றைப் புனிதமாக்கி

வழிபடுவதற்குமான விதிகள் ஆகமங்களில் உள்ளன. எளிய முறையில் தெய்வங்களை மகிழ்வித்து அதன் மூலமாக, இவ்வுலகிலும் மறு உலகு ஆகிய சுவர்க்கத்திலும் வசதிகளைப் பெறுவதற்கும், யோகமுறையைப் பின்பற்றி இறுதியில் மோட்சத்தை அடைவதற்குமான வழி தந்திரங்களில் விவரிக்கப்பட்டுள்ளது.

ராமாயணமும் மகாபாரதமும் இதிகாசங்களாகும். வெவ்வேறு ஆட்களுடன் பழகும்போது ஒவ்வொருவர் விஷயத்திலும் கடைப்பிடிக்கவேண்டிய முறையை எங்ஙனம் ஒழுங்குடன் வகுத்துக் கொள்ளவேண்டும் என்பதை ராமன், சீதை ஆகியோரின் கதையின் வாயிலாக ராமாயணம் போதிக்கிறது. எந்த அளவிற்கு ராமனின் கதையாகுமோ அந்த அளவிற்கு சீதையின் கதையுமாகிய ராமாயணம் ஸ்திரீ தர்மத்தையும் எடுத்துக் கூறுகிறது. எப்படி மகன் தந்தைக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும், எங்ஙனம் சகோதரர்கள் ஒருவரையொருவர் அன்புடன் நேசிக்கவேண்டும், எவ்வாறு மனைவி கணவனுக்கு அடங்கி நடந்து கொள்ளவேண்டும், வேலையாள் எசமானனுக்குக் காட்டவேண்டிய விசுவாசத்தின் தன்மை, எங்ஙனம் நண்பர்கள் ஒருவரிடம் ஒருவர் சிநேகம் கொண்டு பரஸ்பர நலத்திற்கு உழைக்க வேண்டும், ஆண்களும் பெண்களும் ஒருவர்க்கொருவர் எப்படி நடந்து கொள்ள வேண்டும், மென்மை, அன்பு என்னும் மகளிர் நல்லியல்புகள், மற்றும் நமது மதத்தின் வேறு பல கொள்கைகள் ஆகியவை ராமன், சீதை இவர்களின் வாழ்க்கையின் வாயிலாகவும் அவர்களது தைரியமான செயல்களின் மூலமாகவும் போதிக்கப்படுகின்றன. பிறப்புக்காக மட்டுமே இல்லாது ஒழுக்க மேன்மைக்காகவே மக்களை கௌரவிக்கவேண்டும் என்பதையும், பக்தியுடன் கூடிய பிராணிகளையும் கூட மதித்து அவற்றுக்குத் தொண்டு செய்ய வேண்டும் என்பதையும் ராமாயணம் வலியுறுத்துகிறது. அனைத்திற்கும் மேலாக ராமாயணம் ஒரு சரணாகதி சாத்திரம் என்பது குறிப்பிடத்தக்கது. பாதுகாப்பின் பொருட்டு உண்மையுடன் நம்மை நாடுபவனைக் கைவிடக்கூடாது என்னும் நமது மதத்தின் அடிப்படைக் கொள்கையினை ராமாயணம் அறிவுறுத்துகிறது. கடவுளின் கருணையை வேண்டி மக்கள் ஒரு தடவையாவது அவரைப் பிரார்த்தித்தால் கூட, மீட்பருளாளனாகிய கடவுள் அவர்களைக் காப்பாற்றுவதற்கு ஆவலுடன் இருக்கின்றார். உலகில் கெடுதல் மலிந்து நிறைந்துவிடும் போது, நல்லோரைக் காப்பாற்றவும் தீயோரை ஒழிக்கவும் கடவுள் வெவ்வேறு வடிவங்களில் அவதாரம் செய்கிறார் என்னும் கருத்தையும் ராமாயணம் விளக்குகிறது. தீயவர்களை அவர்களின்

தவறான வழியிலிருந்து நல்ல பாதைக்குத் திருப்புவதே தண்டனை யின் நோக்கமாதலால், தண்டனையும் ஓர் அருட்செயலே ஆகும். இக்கொள்கை மற்றோர் இதிகாசமாகிய மகாபாரதத்தினால் மேலும் சிறப்பாக விளக்கப்படுகிறது. உண்மையுடன் இருத்தல், தெய்வத்தினிடம் நம்பிக்கை, மகளிர் கற்பு, இரந்து வேண்டுப வனிடம் கருணை, பொறுமை, தவம் முதலியவை போன்ற நமது மதத்தின் பிற கருத்துக்கள் பலவும் இந்நூலில் போதிக்கப் படுகின்றன. நமது சமயத்தின் கொள்கைகள் ஏராளமான அளவில் இந்நூலில் விளக்கப்படுவதனால், இதுவும் ஒரு தர்ம சாஸ்திரமே என்றும், ஐந்தாவது வேதம் என்றும் கூடச் சொல்லப்படுகிறது. அதில் கதையின் போக்கில் ஆங்காங்கே தர்மத்தைப் போதிப்பதற்கென முழு அத்தியாயங்களே எழுதப் பட்டுள்ளன. மோட்ச தர்மம், விதுரநீதி, சனத்சுஜாதீயம், அனுகீதை ஆகியவை அத்தகைய முக்கியமான பகுதிகளாகும். ஆனால், இவற்றுள் ஞாலம் முழுதும் புகழ் பெற்றிருப்பது பதினெட்டு அத்தியாயங்களில் சுமார் எழுநூறு சுலோகங் களில் அமைந்திருக்கும் பகவத்கீதை யாகும். மகாபாரதக் காப்பியத்தில் அது ஓர் அத்தியாயமே ஆயினும், அதில் பொதிந் திருக்கும் மிக உயர்ந்த போதனை காரணமாக அதற்கு ஒரு தனிப்பெருமை சேர்ந்துள்ளது. மாபெரும் பாரதப் போரின் துவக்கத்தில், தான் பின்பற்ற வேண்டிய வழிகுறித்து அர்ஜுன னுக்கு ஐயம் எழுகிறது; அச்சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொண்டு, மனிதன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதைப்பற்றி அவனுக்கும் அவன் மூலமாக உலகத்திற்கும் போதிக்கப்படுகிறது. முதல் ஆறு அத்தியாயங்களில் கர்ம யோகமும், இரண்டாவது ஆறு அத்தியாயங்களில் ஞான யோகமும் கடைசி ஆறு அத்தியாயங்களில் பக்தியோகமும் விரிவாக எடுத்துரைக்கப்படுகின்றன. உலகம் முழுவதும் ஏற்றுக்கொள்ளும், நமது மதத்தின் அடிப்படைக் கொள்கை கள் இந்நூலில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. எத்தகைய கடினமான நிலையிலும் எவரும் கடமையிலிருந்து வழுவுதல் கூடாது, எந்த வடிவத்திலும் சரி கடவுளை அகத் தூய்மையுடன் வழிபடுவோர் நிச்சயமாகக் காப்பாற்றப்படுவர், கடவுளின் அருளே மாந்தரை அவர்களின் பாவங்களிலிருந்து காப்பாற்ற வல்லது என்பன போன்ற கீதையின் உபதேசங்கள் காரணமாக எல்லாச் சமயத்தினருக்குமுரிய பொது நூலாக அது கருதப் படுவதோடு கூட, உலக முழுவதும் ஏற்றுக்கொள்ளும் பெரு மையும் அதற்குக்கிடைத்திருக்கிறது. நம்மவர்கள் நமது மதம், தத்துவம் ஆகியவற்றின் பிரஸ்தான த்ரயம் எனப்படும் மூன்று பிரமாண நூல்களுள் ஒன்றாக அதை ஏற்றுக் கொண்டிருக்கின்

றனர். அதற்குக் கணக்கற்ற உரைகளும் மொழி பெயர்ப்புக்ளும் உள்ளன. ஒவ்வொருவரும் அதைப் படித்து, அதில் கூறப்பட்டுள்ள கொள்கைகளை நடைமுறையில் கடைப்பிடிக்க வேண்டும்.

உலகின் வரலாற்றை விவரிப்பவை புராணங்கள். அது எவ்வாறு படைக்கப்பட்டது. எங்ஙனம் அது காக்கப்பட்டு ஆளப்படுகிறது, கடைசியில், அது எப்படி அவ்வப்போது அழிக்கப்படுகிறது, ஆகியவற்றை அவை எடுத்துரைக்கின்றன. சித்து, அசித்து இவற்ருலான உலகு நித்தியமானது; பிரளய சமயத்தில் அது கரந்து சூட்சுமமாகவும், படைப்பின்போது அது வெளிப்படையாகத் தூலமாகவும் உள்ளது. உலகின் ஒழுக்கமுறை கடவுளிஞல் எங்ஙனம் காக்கப்படுகிறது என்பதையும், எவ்வாறு தீயோர் தண்டிக்கப்பட்டு, பின்னர், மீட்கப்படுகின்றனர் என்பதையும், எப்படி நல்லோர் காப்பாற்றப்படுகின்றனர் என்பதையும் அவை நன்கு தெளிவாக்குகின்றன. உலகின் நெருக்கடியான கட்டங்களில் ஒழுக்கக்கட்டுப்பாட்டினையும் ஆன்மிக நிலையினையும் நிலை நிறுத்தும் பொருட்டு கடவுள் எடுக்கும் வெவ்வேறு அவதாரங்களையும் அவர் கையாளும் வெவ்வேறு வழிவகைகளையும் அவை விரித்துக் கூறுகின்றன. புராணங்கள் அவற்றில் வரும் கதை நிகழ்ச்சிகளின் வாயிலாக நமது மதத்தின் சித்தாந்தங்களைப் போதிக்கின்றன. பல்வேறு புண்ணியத்தலங்களின் மகிமை குறித்து விரிவாகக் கூறுவதன் மூலமாகக் கடவுளினுடைய அர்ச்சாவதாரத்தின் விபூதியை அல்லது பெருமையை வெளிப்படுத்துவதோடு கூட, நமது தேசத்திலுள்ள புண்ணிய தீர்த்தங்களைப்பற்றியும் அவை சொல்லுகின்றன. மோட்சத்தை அடையும் பொருட்டுச் செய்யப்படும் தவ வழிகளையும் பக்தி முறைகளையும் அவை எடுத்துக் கூறுகின்றன. எனவே அவை நமது சமய நூல்களின் முக்கிய பகுதிகளுள் ஒன்ருகும்: அவற்றுள் மிகச் சிறப்பானவை பதினெட்டு. விஷ்ணு, பிரம்மா, சிவன் ஆகியோருள் எவருடைய பெருமையை அவை சொல்லுகின்றன என்பதையொட்டி அவை சாத்துவிகம், ராஜஸம், தாமஸம் என்று மூன்று வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

பெரும்பாலும் பல்வேறு தெய்வங்களின் பெருமைகளைப் பற்றிக் கூறும் பதினெட்டு உபபுராணங்களும் உள்ளன.

மதத்தின் செய்முறைப் பகுதியைப்பற்றி முனிவர்கள் எழுதிய நூல்கள் ஆகமங்கள் எனப்படுகின்றன. கோவில்கள் கட்டுவது, அர்ச்சை (விக்கிரக) வடிவங்களை அமைப்பது, கோவில்களையும் விக்கிரகங்களையும் புனிதப்படுத்தி வழிபாட்டுக்

குரியனவாகச் செய்வது, செய்யத் தவறியதற்கும், தவருகச் செய்ய நேர்ந்ததற்குமான பிராயச்சித்த அல்லது கழுவாய்ச் சடங்குகள் - இவற்றுக்கான விதிகள் ஆகமங்களில் உள்ளன. நிற்க, திட்டமிடப்பட்ட ஊர் ஒன்றில் கோவில் இருக்க வேண்டிய இடத்தைக் குறிப்பிடும் வகையில் ஊரமைப்பு பற்றியும் வழிபாடு நடத்துபவனின் தகுதிகள் குறித்தும் அவை விவரிக்கின்றன. கடவுளின் வெவ்வேறு அவதாரங்களும் அர்ச்சை (விக்கிரக) வடிவில் அமைக்கப்படுகின்றன. வெவ்வேறு அர்ச்சை வடிவங்கள் வெவ்வேறு நோக்கங்களுக்காக வழிபாட்டுக்குரியனவாய்ச் செய்யப்படுகின்றன. இந்த ஆகமங்கள், விஷ்ணுவின் வெவ்வேறு வடிவங்கள், அவற்றின் கோவில்கள், அவற்றின் வழிபாடு ஆகியவைபற்றிச் சொல்லும் வைஷ்ணவ ஆகமங்கள் என்றும், சிவனின் வெவ்வேறு வடிவங்கள், அவற்றின் கோவில்கள், அவற்றின் வழிபாடு ஆகியவை பற்றிக் கூறும் சைவ ஆகமங்கள் என்றும் இருவகைப்படும். பாஞ்சராத்ரமும் வைகானஸமும் வைஷ்ணவ ஆகமங்கள்; பாஞ்சராத்ர ஆகமத்தை பகவான் நாராயணனே அருளியதாகவும், வைகானஸ ஆகமத்தை விகனஸாசாரியர் எடுத்துக் கூறியதாகவும் சொல்லப்படுகிறது. ஆகமங்களைப்பற்றிக் கூறும் நூல்கள் சம்ஹிதைகள் எனப்படுகின்றன. அவை ஆவன: பத்மசம்ஹிதை, பரம சம்ஹிதை, சாத்வத சம்ஹிதை; பிஞ்சல சம்ஹிதை, ஈச்வர சம்ஹிதை, பராசர சம்ஹிதை, பாரத்வாஜ சம்ஹிதை, அஹிர்புத்ன்ய சம்ஹிதை, விஷ்ணுதிலகம். வைகானஸ சம்ஹிதைகள் நான்கு: அத்ரி, மரீசி, காச்யபர், பிருகு ஆகிய நான்கு முனிவர்களால் செய்யப்பட்டவை. இவர்கள் எழுதிய நூல்கள் யாவும் இன்று நமக்குக் கிடைக்கவில்லை. சைவ ஆகமங்கள் இருபத்தெட்டு என்று கூறப்படுகிறது.

ஒவ்வோர் ஆகமத்திலும் 1. சரியை, 2. கிரியை, 3. யோகம், 4. ஞானம் என்று நான்கு பிரிவுகள் உள்ளன. முதலாவது, நாள்தோறும் செய்ய வேண்டிய கடமைகளையும், இரண்டாவது கடவுள் வழிபாட்டினையும், மூன்ருவது புலனடக்கம், கடவுள் தியானம் ஆகியவற்றுக்கான பயிற்சிகளையும், நான்காவது கடவுளின் தன்மை, உடலின் அமைப்பு, முக்தி ஆகியவை பற்றியும் கூறுகிறது.

தந்திரங்கள் எனப்படுபவை சமயத்தின் செய்முறையினை விவரிக்கும் நூல்களாகும். அர்ச்சை வடிவங்களையும் (விக்கிரகங்களையும்) யந்திரங்களையும் வழிபடுவது, மந்திரங்களை ஜபிப்பது, உபாசனைகள் புரிவது ஆகியவை மூலமாக மனிதனிடம் மறைந்து கிடக்கும் ஆற்றலை வெளிப்படுத்தி அபிவிருத்தி

செய்து கடவுளை உணர்ந்தறிவதற்கான வழிவகைகளைத் தந்திர நூல்கள் எடுத்துரைக்கின்றன. இம்மையின் விருப்பங்களை அடைவதற்கும் அவை பயன் படுத்தப்படுகின்றன.

மேலே குறிப்பிட்டவை யாவும் சம்ஸ்கிருதத்தில் இருப்பவை யாகும். ஆனால், இவை தவிர, சைவ, வைணவ சித்தாந்தங்கள் இரண்டிலும் அதே அளவிற்குப் பிரமாண நூல்களாகக் கருதப்படும் சமய நூல்கள் தமிழிலும் இருக்கின்றன. அவை வைணவ ஆழ்வார்களும், சைவ சமய நாயன்மார்களும் இயற்றியவையாகும். அவர்கள், அறிவினாலும், ஒழுக்கத்தினாலும் கடவுளைக் கண்டறிந்து, அவருடன் உறவாடி மகிழ்ந்து, மாபெரும் சக்திகள் பெற்ற சித்தர்களாவர். அவர்களின் நூல்கள் அவர்களது சமய உணர்வின் சுயேச்சையான எழுச்சிகளின் வெளிப்பாடுகளாக அமைந்துள்ளன. வைணவ சமயப் பாசுரங்கள் நாலாயிரம் செய்யுள்களினால் ஆகியவை; அவை நாலாயிர திவ்யப் பிரபந்தம் என்றழைக்கப்படுகின்றன. வைஷ்ணவ ஆசாரியர்கள் அல்லது ஆழ்வார்கள் பன்னிருவர். அவர்களுடைய நூல்கள் பின் வருமாறு: பொய்கை ஆழ்வார், பூதத் தாழ்வார், பேயாழ்வார் என்னும் மூன்று முதலாழ்வார்களுள் ஒவ்வொருவரும் செய்த இயற்பாச் செய்யுள்கள் நூறு; முதலாயிரத்திலுள்ள திருமழிசை ஆழ்வார் இயற்றிய இயற்பாச் செய்யுள்கள் தொண்ணூற்று ஆறும் திருச்சந்த விருத்தச் செய்யுள்கள் நூற்றிருபதும்; ஆழ்வார்களுள் மிகச் சிறந்தவரான நம்மாழ்வார் இயற்றியுள்ள இயற்பாவில் அமைந்த நான்கு நூல்களான திருவிருத்தம் (நூறு செய்யுள்கள்) திருவாசிரியம் (ஏழு செய்யுள்கள்), பெரிய திருவந்தாதி (எண்பத்தேழு செய்யுள்கள்) ஆகியவையும், ஆயிரத்து நூற்றிரண்டு செய்யுள்களினாலான திருவாய் மொழியும்; இந்நான்கு கவிதைகளும் முறையே ரிக்வேதம், யஜுர்வேதம், அதர்வவேதம், சாமவேதம் என்னும் நான்கு வேதங்களுக்கு நிகராகக் கருதப்படுகின்றன. தமிழிலே உள்ள சமய கவிதைகளுள் மிகச் சிறந்ததாய்க் கருதப்படும் கடைசியில் குறிப்பிடப்பட்டுள்ள திருவாய் மொழி வைஷ்ணவ மதத்தின் சாரத்தைத் தருவதும் பெருமளவில் உரை எழுதப் பெற்றிருப்பதுமாகும். குலசேகராழ்வார் முதலாயிரத்தில் இருக்கும் நூற்றைந்து செய்யுள்களினாலான பெருமாள் திருமொழியை இயற்றினார். முதலாயிரத்தில் சேர்க்கப்பட்டிருக்கும் பிரசித்தியான திருப்பல்லாண்டு (பன்னிரண்டு பாடல்கள்), திருமொழி (நானூற்று அறுபத்தொன்று பாடல்கள்) ஆகிய இரண்டையும் இயற்றியவர் பெரியாழ்வார். முதலாயிரத்தில் இருக்கும் திருமாலை (நாற்பத்தைந்து செய்யுள்கள்), திருப்பள்ளியெழுச்சி (பத்து பாடல்கள்) ஆகியவற்றை தொண்டரப்பொடி

யாழ்வார் இயற்றினர். முதலாயிரத்திலுள்ள அமலனாதிபிரான் என்னும் பத்து செய்யுள்களை திருப்பாணாழ்வார் செய்தருளினர். பிரபந்தத்தில் திருமங்கையாழ்வார் செய்தருளியது நிறைய உள்ளது. பெரிய திருமொழி (ஆயிரத்து எண்பத்து நான்கு செய்யுள்கள்), திருக்குறுந்தாண்டகம் (இருபது செய்யுள்கள்), திருநெடுந்தாண்டகம் (முப்பது செய்யுள்கள்), திருவெழுக்குற்றிருக்கை (ஒரு செய்யுள்), சிறிய திருமடல், பெரிய திருமடல் ஆகியவற்றின் ஆசிரியர் திருமங்கையாழ்வார். சிறிய திருமடல், பெரிய திருமடல் ஆகியவற்றிலுள்ள செய்யுள்களின் எண்ணிக்கை வெவ்வேறு அறிஞர்களினல் வெவ்வேறு அளவினதாகக் கணக்கிடப்படுகிறது. மதுரகவி ஆழ்வாரின் கண்ணினும் சிறு தாம்பு, ஆண்டாளின் நாச்சியார் திருமொழி (நூற்றுநாற்பத்து மூன்று பாடல்கள்), திருப்பாவை (முப்பது செய்யுள்கள்) ஆகியவையும் முதலாயிரத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. இவையும் திருவரங்கத்தமுதனர் என்பவரின் ராமானுஜ நூற்றந்தாதியும் சேர்ந்தது நாலாயிர திவ்யப்பிரபந்தமாகும். திருவருள் பெற்ற ஆழ்வார்களின் இத்தமிழ்ப் பாசுரங்களில் மிகவும் உயர்ந்த தத்துவவியல் உண்மைகள் பொதிந்துள்ளன; எனவே, இவையும் உபநிஷத்துக்களைப் போன்றே நிரம்பவும் முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. தமிழில் இருக்கும் திவ்யப் பிரபந்தம், சம்ஸ்கிருதத்திலுள்ள உபநிஷத்துக்கள் இவை இரண்டும் சேர்ந்து உபய வேதாந்தம் என்றழைக்கப்படுகிறது. ஆயினும், தமிழில் இருக்கும் இந்த சமய இலக்கியத்தின் மிகச்சிறப்பான அம்சம் என்னவென்ருல், அர்ச்சாவதாரம் அல்லது விக்கிரக வழிபாடு எனப்படுவதன் பெருமையை அது தெளிவாக எடுத்துக் காட்டுவதாகும். வெவ்வேறு கோவில்களில் ஆழ்வார்களுக்கு ஏற்பட்ட ஆன்மிக அநுபவங்கள் அடங்கியதாகும் அது. இவ்வகையில் ஸ்ரீநிவாஸருக்கு ஒன்பது ஆழ்வார்கள் பாமாலை தொகுத்துப் பாடியிருக்கின்றனர். அவர்கள் பேயாழ்வார், பூதத்தாழ்வார், பொய்கை ஆழ்வார், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், பெரியாழ்வார், குலசேகராழ்வார், திருமழிசை ஆழ்வார், திருப்பாணாழ்வார் ஆகியோர் ஆவர். ஆண்டாளையும் சேர்த்தால், பதின்மர் ஆவர்.

தமிழிலுள்ள சைவ சமயப் பாசுரங்கள் திருமுறைகள் என்று மொத்தமாகக் குறிப்பிடப்படுகின்றன. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் (அப்பர்), சுந்தரமூர்த்தி ஆகியோரின் தேவாரம் முதல் ஏழு திருமுறைகளாகும். மாணிக்கவாசகரின் திருவாசகமும் திருக்கோவையாரும் எட்டாவது திருமுறை. பல்வேறு அடியார்களின் திருவிசைப்பாவும், திருப்

பல்லாண்டும் ஒன்பதாவது திருமுறையில் இடம் பெறுகின்றன. பத்தாவது திருமுறை திருமூலரின் திருமந்திரம். பன்னிருவர் இயற்றிய நாற்பது பாடல்கள் கொண்டது பதினேராவது திரு முறை. பன்னிரண்டாவது திருமுறை சேக்கிழாரின் பெரிய புராணம் அல்லது திருத்தொண்டர் புராணம். இவற்றிலும் சிவனின் அர்ச்சாவதாரத்தின் மகிமையே முக்கியமாக விவரிக் கப்படுகிறது. தமிழ்ப் பாசுரங்கள் மதிப்பு வாய்ந்த அரிய பல தத்துவ உண்மைகளை எடுத்து விளக்குவதோடுகூட, இறைவன் பால் அன்பு உணர்ச்சியையும் தூண்டும் வகையிலும் அமைந் துள்ளன. தாயுமானவர், பட்டினத்தார் ஆகியோரின் பக்திப் பாடல்களும் நாயன்மார்களின் பாசுரங்களைப் போன்றே சைவ சமயத்தினரால் பெரிதும் போற்றப்படுகின்றன.

சைவசித்தாந்தம் எனப்படும் மெய் விளக்கக் கோட்பாட் டில் விளக்கப்படுவது சைவ சமயமேயாகும்; எனவே, சைவ சித்தாந்தம் சைவ சமயத்தின் தத்துவவியல் என்றழைக்கப்படு கிறது. வைஷ்ணவ சித்தாந்தத்தைப் போன்றே அதற்கும் உபநிஷத்துக்களே மூலமாக விளங்குகின்றன. மெய்கண்டார் சிவஞான சித்தியார் இயற்றியுள்ள சிவஞான போதம் என்னும் நூலில் சைவ சித்தாந்தம் சிறப்புற விளக்கப்பட்டுள்ளது.

ஸம்ஸ்கிருத மொழியிலும் அத்தகைய சமயப் பாடல்கள் ஏராளமாக உள்ளன. அவை துதி இலக்கியத்தைச் சேர்ந்தவை யாகும். அவை, பக்தன் ஒருவன் குறிப்பிட்ட ஒரு தெய்வத் தினிடம் முழுமையாகப் புகலடைந்து, தனது பாவங்களை ஏற்றுக் கொண்டு, அத்தெய்வம் தமது இயற்கையான அள வில்லாக் கருணையினுல் தனது (பக்தனின்) நிலைக்கு இரங்கி, பாவ வாழ்விலிருந்து தன்னை (பக்தனை) மீட்டால் ஒழிய முக்தி யடைவதற்குத் தன்னுல் (பக்தனுல்) முற்றிலுமாகாது என்று முறையிட்டு, அத்தெய்வத்தைப் போற்றிப் பாடும், ஒன்றி லிருந்து நூறு செய்யுள்கள் வரை அடங்கிய தோத்திரங் களாகும். பக்தனின் பக்தியையும் கடவுளுடன் ஒன்றிப் போவதற்கு அவனுக்கு இருக்கும் தீவிர ஆர்வத்தையும் அவை வெளிப்படுத்துகின்றன. இத்தகைய தோத்திரங்கள் அல்லது துதிப்பாடல்கள் நிரம்பவும் மிகுதியாய் இருக்கின்றன; அவற்றுள் முக்கியமானவையும் காலத்தால் முற்பட்டனவுமான ஒரு சிலவே எடுத்துக் காட்டின் பொருட்டு இங்கு குறிப்பிடப் படுகின்றன. சங்கராசாரியரின் தோத்திரங்கள் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவையாகும்; ஏன்எனில், அவை, பிரம்மம் உருவமில்லாதது, குணமோ குற்றமோ அற்றது என்று கூறிய தத்துவவியலறிஞரால் இயற்றப்பட்டவை யாகும். அறுபத்

தைந்து செய்யுள்களினுலான யாமுனுசாரியரின் ஸ்தோத்திர ரத்னம் உயர்ந்த தத்துவ உண்மைகளைக் கொண்டிருப்பதாகும். ராமானுஜரின் '**கத்யத்ரயம்**' என்பதும் அத்துணை முக்கியமானதேயாகும். முதலாவது கத்யத்தில் அவர் கடவுளின் அருளையும் பாதுகாப்பையும் நாடுகிறுர் (சரணுகதி); இரண்டாவதில் ஸ்ரீரங்கத்திலுள்ள ஸ்ரீரங்கநாதரைப் போற்றி இறைஞ்சுகிறுர்; மூன்றுவதில் தம்மை ஏற்றுக்கொண்டு ஆட்கொண்டருளும்படி இறைவனிடம் வேண்டுகிறுர். நாற்பது பாசுரங்களைக் கொண்ட குலசேகராழ்வாரின் முகுந்தமாலை மற்ருெரு பிரசித்தி வாய்ந்த தோத்திரமாகும்; பக்தியின் சிறப்பையும் பகவானின் கருணையையும் நன்கு விளக்குவது இது. அறுபத்தொன்று செய்யுள்களைக் கொண்ட ஸ்ரீகுணரத்னகோசம் பிறிதொரு முக்கியமான தோத்திரமாகும். மேலும், பல்வேறு அர்ச்சாவதாரங்களைப் போற்றிப்பாடும் ஸ்ரீரங்கராஜ ஸ்தவம், ஸ்ரீவரதராஜ ஸ்தவம் முதலியவை போன்ற பாடல்களும் உள்ளன. நாமாவளிகளைப் பற்றி இங்கு குறிப்பிடுவதும் பொருத்தமானதே. ஏனெனில், இறைவனின் பல்வேறு நாமங்களை அல்லது பெயர்களைத் திரும்பத்திரும்பச் சொல்வதன் வாயிலாக கடவுளைத் தியானம் செய்வதற்கு அவை நமக்கு உதவுகின்றன.

தியாகராஜர் ராமபிரான்மீது இயற்றியுள்ள கீர்த்தனைகள் பற்றியும் இவ்விடம் குறிப்பிடுவது அவசியம். அங்ஙனமே, வேங்கடேசுவரர் மீது அன்னமாசார்யலு பாடியுள்ள பாடல்களும் பக்திமிகுந்து விளங்குகின்றன.

---

## அத்தியாயம் - 7

# வர்ணங்களும் ஆச்ரமங்களும்

நமது மதமும் தத்துவமும் மோட்சம் அல்லது வீடு பெறு தலேயே நமது அடிப்படைப் புருஷார்த்தமாக அல்லது மானுடப் பேறாகக் கருதுகின்றன; எனினும், அதற்கு முரண் படாத வேறு மூன்று பேறுகளேப் பற்றியும் அவை குறிப் பிடுகின்றன. இவை அறம் (தர்மம்), பொருள் (அர்த்தம்), இன்பம் (காமம்) என்பனவாகும். இவை மூன்றும் சேர்ந்து 'த்ரிவர்க்கம்' எனவும், இவையும் மோட்சம் (வீடு) என்பதும் சேர்ந்து 'சதுர் வர்க்கம்' எனவும் அழைக்கப் பெறுகின்றன. இவை தம் வரையில் லட்சியங்களாக மட்டுமில்லாது அடிப் படைப் பேறாகிய மோட்சத்தை அடைவதற்கான ஸாதனங் களாகவும் அமைந்துள்ளன. மோட்சத்தை அடைவதற்கான நடைமுறை வழிவகையே அறம் அல்லது தர்மம் எனப்படு வதாகும். அது மோட்சத்தைப் பெறும் குறிக்கோள் உடை யவனின் ஒழுக்கத்தை நெறிப்படுத்துகிறது. அதை ஓர் அற வியல் கோட்பாடு எனச் சொல்லலாம். நமது அறவியல் கோட் பாட்டின் அடிப்படைக் கொள்கை என்னவென்ருல், இனியதை அல்லது இன்பம் தருவதைவிட (பிரேயஸைவிட) நல்லதை அல்லது புண்ணியமானதையே (சிரேயஸையே) தெரிந்தெடுக்க வேண்டும் என்பதுதான். முந்தையதை நாடுபவன் அறிவிலி எனவும், பிந்தையதை விரும்புபவன் விவேகி அல்லது அறிவாளி எனவும் அழைக்கப்படுகிருன். உலகின் இன்பங்கள் தாற்காலி கமானவை, அழியும் தன்மையுள்ளவை என்பதும், நித்திய மான இன்பம் மோட்சம் ஒன்றே என்பதும் அறிவாளிக்குத் தெரியும். வேள்விகளினுலும் தவத்தினுலும் கிடைக்கப்பெறும் பிரும்மலோகத்தின் சுகங்களும் சுவர்க்கத்தின் இன்பங்களும் கூடத் தாற்காலிகமானவையே. எனவே, என்றும் இருக்கக் கூடிய சுகத்தை ஒருவன் அடையவேண்டும் என்ருல், அவன் தனது புலன்களேக் கட்டுப்படுத்தி, தன்னே உணர்ந்தறிய வேண் டும். தர்மத்தைப் பின்பற்றுவதால் இது சாத்தியமாகிறது. தர்மத்தைக் கடைப்பிடிக்கும்போது நாம் குறிக்கோள் அல்லது நோக்கம் எதுவுமில்லாது, அதாவது, அதற்காகவே அதை இறைவனுக்கு அர்ப்பணம் செய்து, அதை அநுசரிக்கவேண்டும்.

அப்போதுதான் அது நமது நன்மைக்கு உதவும். மேலும், அறம் என்பது ஒழுக்க விதிகளையே மட்டுமின்றிப் பண்புக் கொள்கைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. முந்தியன வற்றை விடப் பிந்தியனவே முக்கியமானவை, சிறந்த பயனைத் தருபவை. பண்புக் கொள்கைகள் இல்லாவிட்டால், ஒழுக்க விதிகளினால் பயன் ஏதுமில்லை.

தர்மம் அல்லது அறம் வாழ்க்கையின் சமய, சமூக, அரசியல் மற்றும் ஆரோக்கியக் கூறுபாடுகள் அனைத்திலும் மனிதனின் ஒழுக்கத்தைக் கட்டுப்படுத்துகிறது. அது வர்ண தர்மம், ஆச்ரம தர்மம் என இருவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. நமது சமயம் சமூகத்தை அதன் உறுப்பினர்களின் இயல்புகளுக்கும் விருப்பங்களுக்கும் ஏற்ப நான்கு வர்ணங்களாக அல்லது வகுப்புகளாகப் பிரித்து ஒவ்வொரு வகுப்புக்கும் உரிய அறநெறியை வகுத்திருக்கின்றது. மேலும், அது மனிதனின் வாழ்க்கையையும் நான்கு ஆச்ரமங்களாக அல்லது நிலைகளாகப் பிரித்து, ஒவ்வோர் ஆச்ரமத்திற்கும் உரிய தருமத்தை விதித்திருக்கின்றது. சமூகத்தை நான்கு வர்ணங்களாகப் பிரித்திருப்பது நமது நாட்டிற்கே சிறப்பான ஓர் அமைப்பு ஆகும். அது காரணமாக அதை விட்டு விடவோ, அதன் மதிப்பைக் குறைக்க முற்படவோ வேண்டியதில்லை. சமூகப் பொருளாதார அமைப்பை அடிப்படையாகக் கொண்டு அது அமைக்கப்பட்டுள்ளது. எனவே தான், வர்ணத்தையும் ஆச்ரமத்தையும் பாதுகாப்பது அரசனின் கடமைகளுள் ஒன்றாக விதிக்கப்பட்டுள்ளது. தர்மத்தை முறையாகப் பராமரிக்க முடியாத அரசன் தகுதியற்ற அரசன் எனப்படுகிறான். சமூகத்தில் தத்தம் வகுப்பு, நிலை ஆகியவற்றின் தருமத்தைக் கடைப்பிடிக்காதவர்களைத் தண்டிக்கும் அதிகாரம் அரசனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

வர்ண தர்மங்கள், ஆச்ரம தர்மங்கள் எல்லாவற்றையும் கூறுவதற்கு இங்கு இயலாது. ஆயினும், முக்கியமான சிலவற்றை மட்டும் கவனிக்கலாம். வேதத்தைப் பயிலுவதும் பயிற்றுவதும், தனக்காகவும் பிறருக்காகவும் யக்ஞங்களை அல்லது வேள்விகளைச் செய்வது, பரிசுகளை வழங்குவதும் ஏற்பதும் பிராம்மணனின் கடமைகள். மேற்கூறப்பெற்ற கடமைகள் ஒவ்வொன்றிலும் முதலாவதாகக்கூறப்பட்டவை, அதாவது வேதத்தைப் பயிலுவது, தமக்காக வேள்விகள் செய்வது, பரிசுகளை வழங்குவது ஆகியவை க்ஷத்திரியர்களுக்கும் வைசியர்களுக்கும் கூட விதிக்கப்பெற்றவையாகும். சூத்திரர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள ஒரே கடமை பிறசாதியினர் தத்தம் கடமைகளை நிறைவேற்றுவதில் உதவி புரிதலாகும். இவ்வாறாக

வர்ணங்கள் அல்லது வகுப்புகள் சமயம், அரசியல், பொருளாதாரம், உழைப்பு ஆகியவை ஒவ்வொன்றிலும் வாழ்க்கையில் அவரவர்களுக்குள்ள நிலைக்கேற்ப அது எத்தகையதாய் இருந்தாலும் சிறப்பாகக் கவனமும் நாட்டமும் செலுத்துவதற்கு உதவுகின்றன.

மேற்குறிப்பிட்ட சமூகக் கடமைகளோடுகூட சில சமயக் கடமைகளும் விதிக்கப்பட்டுள்ளன; இவற்றுள் பெரும்பாலானவை எல்லாச் சாதியினருக்கும் பொதுவானவை. இவை மொத்தமாக சம்ஸ்காரங்கள் எனப்படுகின்றன. இவையாவன: கர்ப்பாதானம் அல்லது கருத்தரிக்கச் செய்தல் என்னும் சடங்கு; பும்ஸவனம் அல்லது ஆண்மகவு கோரும் சடங்கு; சீமந்தோன்னயனம் அல்லது தலைமயிரை முறைப்படி வகிடு பிரிக்கும் சடங்கு; ஜாதகர்மம் அல்லது பிறப்புச் சடங்குகள்; நாமகரணம் அல்லது பெயர் சூட்டுதல்; அன்னப் பிராசனம் அல்லது குழந்தைக்கு இறுகிய உணவு ஊட்டுதல்; சௌளம் அல்லது குடுமி வைத்தல்; உபநயனம் அல்லது புனிதமான பூணூல் அணிவித்தல்; விவாகம் அல்லது திருமணம். உபநயனத்திற்குப் பிறகு வேதம் பயிலவேண்டும். அதன் இறுதியில் மேலும் ஐந்து சம்ஸ்காரங்கள் விதிக்கப்பட்டுள்ளன. ஆக, இந்துக்களுக்கு பிறப்பிலிருந்து இறப்பு வரை அல்லது கருவிலிருந்து கருமாந்தரம் வரை வாழ்க்கையே ஒரு புனிதமான மதச் சடங்காக அமைந்திருக்கிறது. பிறப்பு, உணவு, கல்வி, குடும்பக் கடமைகள் பற்றிய நுண்ணிய விவரங்கள் உள்பட ஒவ்வொரு செய்கையுமே கடவுள் வழிபாடாக இருக்கிறது.

வாழ்க்கையில் ஒரு முறை மட்டுமே செய்யவேண்டிய மேற்கூறப்பட்ட சம்ஸ்காரங்கள் தவிர, நாள்தோறும் அல்லது ஒழுங்கான இடைக்காலங்களில் செய்யவேண்டிய வேறு சில சம்ஸ்காரங்களும் உள்ளன. தின்சரிக் கடமைகள் பிரம்மயக்ஞம் அல்லது வேதம் ஓதுதல், பித்ருயக்ஞம் அல்லது மூதாதையருக்கு பலி அல்லது உணவு இடுதல், தேவயக்ஞம் அல்லது கடவுள் வழிபாடு, பூதயக்ஞம் அல்லது எல்லாப் பிராணிகளுக்கும் பலி அல்லது உணவு இடுதல், மனுஷ்ய யக்ஞம் அல்லது விருந்தோம்பல் எனப்படும் ஐந்து மகாயக்ஞங்கள் எனப்படும் ஐம்பெரும் வேள்விகளைச் செய்வதாகும். இந்த யக்ஞங்களின் நோக்கம் மனித உயிர்கள், மனிதனைவிட உயர்ந்த உயிர்கள், மனிதனைவிடத் தாழ்ந்த உயிர்கள் உட்பட்ட உயிர்ப் பொருள்கள் அனைத்தின் ஒருமைப் பாட்டையும் ஒற்றுமையையும் வெளிப்படுத்துவதும், பொதுவாக, இல்லறத்தில் இருப்பவனுக்கு வாழ்க்கையில் அவனது பிறப்பிற்கும் நிலைக்கும் ஏற்ப உலகத்

தின்பால் இருக்கும் கடமைகளைப் புலப்படுத்துவது மாகும். இவை தவிர, பாக யக்ஞங்கள் ஏழு, ஹவிர்யக்ஞங்கள் ஏழு, ஸோம யக்ஞங்கள் ஏழு எனப்படும் யக்ஞங்கள் இருபத்தொன்றும் உள்ளன. இவற்றுள் சிலவற்றைக் குறிப்பிட்ட காலங்களிலும் வேறு சிலவற்றை வசதியான சமயங்களிலும் செய்பவனின் விருப்பப்படி செய்யலாம். ஆனால், பாக யக்ஞங்களுள் ஒன்றான சிராத்தம் மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது; அதைச் செய்யாது புறக்கணிப்பவன் பதிதனாக அல்லது நெறியிலிருந்து வழுவியவனாகக் கருதப்படுகிறான்; ஏன்எனில், ஒவ்வொருவனும் தனது வாழ்க்கையில் பெற்றோர்களுக்கும் மூதாதையர்களுக்கும் கடமைப்பட்டிருக்கின்றான்.

இந்த சம்ஸ்காரங்களின் குறிக்கோள் மனிதனின் வாழ்வை ஆன்மிகத் தன்மை வாய்ந்ததாகச் செய்வதேயாகும். மனிதன் வெறும் மிருக நிலையிலுள்ளவன் இல்லை என்பதும், தற்காப்பு, இனப்பெருக்கம் ஆகிய விலங்கியல் இயல்பூக்கங்களினாலும் சினம், அச்சம், பொறாமை ஆகிய மிருக உணர்ச்சிகளினாலும் ஆளப்படுபவன் இல்லை என்பதும் நமதுஆன்றோர்களின் கருத்து. மனிதனுக்கு மனமும் விவேகமும் இருப்பதால் அவன் விலங்கு நிலைக்கு மேல் உயர்ந்து, தான் கடவுளிடமிருந்து வந்திருப்பதையும் கடவுளினிடத்திலேயே சேரவேண்டும் என்பதையும் அதற்காகத் தன்னைத் தகுதியுள்ளவனாக ஆக்கிக்கொள்ளவேண்டும் என்பதையும் அவன் உணரவேண்டும். ஒழுக்க நோக்கில் அவன் சுதந்திரமானவன், விலங்குகளைப் போல் இயல்பூக்கங்களினால் கட்டுப்பட்டவன் இல்லை. எனவே, அவன் ஆன்மிக உலகில் இயங்கி வாழவேண்டும். அவனுடைய உடை, உணவு, செய்கைகள் அனைத்திற்கும் ஓர் ஆன்மிகப் பொருள் இருக்க வேண்டும். ஒவ்வொரு சம்ஸ்காரமும் ஆன்மாவைக் கடவுளை அணுகுவதற்கு மேன்மேலும் தகுதியுடையதாகச் செய்து தூய்மைப்படுத்தும் செயலாகக் கருதப்படுவதாகும். ஆகவே, உபநயனம் என்பது மிக முக்கியமான சடங்காக எண்ணப்படுகிறது; ஏன்எனில், அதில் வேதமந்திரங்களைக் கொண்டு கடவுளை வழிபடுவதில் அவன் அறிமுகப்படுத்தப்பட்டு, அதன் அறிகுறியாகப் பூணூலும் அணிவிக்கப்படுகிறான். சமய வாழ்வின் சாரம் இறை வழிபாடேயாகும். ஆன்மிக நோக்கில் மனிதனை உயர்த்தும் வேதச் சடங்குகளைச் செய்யவும் மூதாதையர்பால் உள்ள கடனிலிருந்து மீட்கும் இனப்பெருக்கத்தைச் செய்யவும் உதவுகின்ற திருமணமும் ஓர் ஆன்மிக அலுவலேயாகும். இந்த சம்ஸ்காரங்களினால் ஒருவனது வாழ்வு கடவுளுக்காகவும் கடவுளினிடத்திலும் வாழ்வது என்னும் மேன்மையைப் பெறுகிறது.

இதன் பொருட்டு, மேற்குறிப்பிட்ட சம்ஸ்காரங்களை மட்டுமின்றி, ஆன்மிகத்திற்கு உதவும் அறவியல் சாதனங்களாகிய விரிவான ஒழுக்க விதிகளையும் நமது மதம் வகுத்திருக்கின்றது. அவற்றுள் சிலவற்றின் வரையறுப்புகள் வருமாறு; 1. சௌசம் அல்லது சுத்தி, அதாவது மனம், வாக்கு, காயம் (உள்ளம், சொல், உடல்), ஆகியவற்றைத் தூய்மையாக வைத்துக் கொள்வது. உள்ளத் தூய்மை என்பது அதை சத்துவ குணத்திலிருந்து ரஜோகுணத்திற்கோ தமோ குணத்திற்கோ செல்லாமல் தடுப்பது. சொல் தூய்மை என்பது பொய்களையும் பிறருக்கு துன்பம் தரும் சொற்களையும் சொல்லாமலிருப்பது. உடல் தூய்மை என்பது உடலினால் எந்த விதமான தவறான அல்லது ஒழுக்கத்திற்குப் புறம்பான செயலையும் செய்யாமலிருப்பது. 2. விவேகம், அதாவது, நல்லதற்கும் தீயதற்கும், உடலுக்கும் ஆன்மாவுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டைப் பகுத்து உணர்வது. 3. ஆர்ஜவம், அதாவது உள்ளம், உடல், சொல் ஆகியவற்றினிடை இலட்சிய அல்லது குறிக்கோள் ஒற்றுமை. 4. சமத்துவம், அதாவது பிறருடைய இன்ப துன்பங்களைத் தன்னுடையனவாய் உணர்தல். 5. துஷ்டி, அதாவது,இருப்பதைக்கொண்டு நிறைவு பெறுதல். 6, 7. சமம், தமம்; அதாவது, நடுநிலையும், விரும்பத் தகாத பண்டங்களினால் மனமும் புலன்களும் கவரப்படுவதைத் தடுத்து அவற்றைக் கட்டுப்படுத்துதலும். 8. தானம், அதாவது, தன்னிடமிருப்பதைப் பிறருக்கு வழங்குதல். 9. தியாகம், அதாவது, தனக்கு நல்லது அல்லாததைத் துறத்தல். 10. தயை அல்லது இரக்கம் அதாவது, பிறரின் துயருக்காக இரங்குவது. 11. மார்தவம், அல்லது மென்மை, அதாவது, நல்லதோடு இணைதல். 12. கூச்சம் (லஜ்ஜை), அதாவது, ஒழுக்க உணர்ச்சியுடன் இருப்பது. 13. பொறுமை (க்ஷமை) அல்லது ஓர்ப்பு, அதாவது பொறுத்துக் கொள்ளும் திறன் அல்லது பிறரால் ஏற்படும் துன்பத்தையோ, கடுங்குளிரையும் கடும் வெப்பத்தையுமோ சகித்துக் கொள்ளும் ஆற்றல். க்ஷாந்தி, திதீக்ஷ என்பவையும் இதையே குறிப்பவையாகும். 14. தைரியம் அல்லது துணிவு, அதாவது, பேராபத்தினிடையிலும் தனது கடமைகளைச் செய்வதற்கான மனத்திட்பம். 15. சிரத்தை, அதாவது, பெரியோரிடம் நன் மதிப்பு அல்லது மரியாதை. இது ஆஸ்திக்யம் என்றும் சொல்லப்படுகிறது. 16. தவம், அதாவது, சமயச் சடங்குகளுக்கு உடலை ஏற்றதாகச் செய்வதற்கான உடற்பயிற்சி. 17. ஸ்தைர்யம் அல்லது உறுதி, அதாவது, கடமையைச் செய்வதற்கான உறுதியான விருப்பம். 18. வைராக்கியம், அதாவது, புலன்களின் போக்குகளைத் துறத்தல். சற்று முன் எடுத்துரைக்

கப்பட்ட சம்ஸ்காரங்களை விட இந்த நன்னெறிகளைக் கடைப் பிடிப்பதற்குச் சிறப்பு அளிக்கப்பட்டுள்ளது. ஒருவன் எல்லா சம்ஸ்காரங்களையும் செய்தாலும், அவனிடம் இந்த நல்லொழுக் கள் இல்லாவிட்டால், பயன் எதுவும் இல்லை; மாறாக, இந்த சம்ஸ்காரங்களை அவன் செய்யாது போயிருந்தாலும் கூடக் கெடுதல் ஒன்றும் இல்லை.

இந்து மதம் இந்த நன்னெறிகளைப் பின்பற்றுவதை மட்டு மல்லாது, தீயவொழுக்களைப் புறக்கணிப்பதையும் வலியுறுத்து கிறது. புறக்கணிப்பட வேண்டிய தீயவொழுக்கங்களுள் முக்கிய மானவை வருமாறு: 1. காமம், அதாவது, புலனின்பங்களுக் கான விருப்பம், 2. குரோதம், அதாவது, பிறருக்குத் துன்பம் தரும் கோபம். 3. லோபம், அதாவது, பற்றுணர்வு. 4. மோகம், அதாவது, மாயை அல்லது ஒன்றை மற்றொன்றாகத் தவறாக எண்ணுதல், 5. மதம், அதாவது, தான் என்னும் நினைப்புடன் துய்ப்பதனால் ஏற்படும், ஒழுக்கக் குழப்பத்தை உண்டாக்கும் அகந்தை. 6. மாத்சரியம், அதாவது, பிறருக்குள்ள செழுமை காரணமாக உண்டாகும் பொறாமை. 7. டம்பம், அதாவது, சுய விளம்பரம். 8. மானம், அதாவது, உயர்வுணர்ச்சி காரணமாகப் பிறரை இழிவு படுத்தல். 9. பாருஷ்யம், அதாவது, பிறருக்கு அதிருப்தியை விளைவிக்கும் கடுமையான நடத்தை. 10. அஞ் ஞானம், அதாவது, நல்லது எது தீயது எது என்பதைப் புரிந்து கொள்ளாமைக்குக் காரணமான அறியாமை. 11. அகங்காரம், அதாவது, தற்புகழ்ச்சி, தற்பெருமை மற்றும் உயர்வுணர்ச்சி ஆகியவற்றின் வாயிலாக வெளிப்படும் நான் என்னும் செருக்கு. 12. மமகாரம், அதாவது, என்னுடையது என்னும் பற்றுணர்வு. 13. பிரமாதம், அதாவது, அறியாமையின் விளைவாக உண்டாகும் நெறிப் பிறழ்ச்சி. 14. ஈர்ஷ்யை, அதாவது, அழுக்காறு. 15. அசூயை, அதாவது, நல்லோருக்குத் தீய எண்ணங்களைச் சாட்டுதல். இவை எல்லாவற்றிலும் காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாத்சரியம் எனப்படும் முதல் ஆறும் முக்கியமானவை; அரிஷ்ட வர்க்கம் அல்லது ஆன்மிகத்தின் ஆறு அகப்பகைகள் எனப்படுபவை. இவற் றிலும்கூட காமம், குரோதம், லோபம் எனப்படும் முதல் மூன்றும் ஏனையவற்றைவிட நிரம்பவும் தீங்கானவையாகக் கருதப்படுகின்றன. இறுதியில், இப்பகைகள் அனைத்துள்ளும் காமமே பிற தீயவொழுக்கங்கள் எல்லாவற்றுக்கும் மூலமா யிருப்பதால் மிகவும் மோசமானதாகக் கருதப்படுகிறது.

மனிதனின் வாழ்க்கை நான்கு பகுதிகளாக அல்லது நிலை களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பகுதியும் ஆச்ரமம்

என்றழைக்கப்படுகிறது. நான்கு ஆச்ரமங்களும் கடவுளை நோக்கிச் செல்லும் பக்தனின் முன்னேற்றத்தின் அல்லது ஆன்மிகப் போக்கின் நிலைகளாகும். அவை உலக வாழ்வில் ஈடுபட்டுள்ள மனிதனின் மனத்தை ஆன்மிக வாழ்வின்பால் திருப்பி, இறுதியில் அவன் பரம்பொருளை அடையும்படி செய்கின்றன. முதலாவது ஆச்ரமம் பிரும்மசரியம். ஏழு அல்லது எட்டு வயதில் ஒருவன் பிரம்மசரிய ஆச்ரமத்தை மேற்கொள்கிறான். அது கல்விக்குரிய காலம்; மாணவனின் முழுக் கவனமும் குருகுலத்தில் அல்லது ஆசிரியனின் இல்லத்தில் படிப்பில் ஈடுபட்டிருக்க வேண்டும். ஆன்ம அறிவின் மூலமாகிய வேதமே பிரம்மம். எனவே, பிரம்மசரியம் எனப்படுவது வேதத்தைப் பயிலுதலேயாகும். எல்லாப் படிப்பிலும் மிக உயர்ந்தது வேதத்தைக் கற்பது. கற்றலின் நோக்கம் விலங்கியல்பினை வென்று அதன்மீது ஆதிக்கம் பெறுவதேயாகும். பிரம்மசாரி முறையான ஒழுக்கத்துடன் வாழவேண்டும்; தன்னடக்கத்துடனும் சிறிதளவு கூடப் புணர்ச்சி நாட்டமின்றியும் இருக்க வேண்டும். பேச்சிலும் நடத்தையிலும் அவன் அளவோடு இருக்கவேண்டும். உணவை இரந்து பெற்று, அதில் தனக்கென குரு ஒதுக்கித்தருவதையே உண்ணவேண்டும். உவர்ப்பு, புளிப்பு மற்றும் உறைப்புச் சுவைகளுள்ள பண்டங்களை மிகுதியாக உட்கொள்வதை அவன் தவிர்க்கவேண்டும். இறைச்சியையும் போதை தரும் பானங்களையும் அவன் புறக்கணிக்க வேண்டும். நறுமணங்களையும் மலர்களையும் அவன் உபயோகிக்கக் கூடாது. பகற்பொழுதில் அவன் உறங்கக் கூடாது. தன்னை அழகு படுத்திக் கொள்வதில் அவன் ஈடுபடக்கூடாது. வண்டிகளிலோ வாகனங்களிலோ அவன் செல்லக்கூடாது. செருப்பு அணியக் கூடாது; காமத்தையோ குரோதத்தையோ, லோபத்தையோ உண்டாக்கும் பொருள்களை அவன் வெறுத்து ஒதுக்கவேண்டும். விவேகத்துடன் அவன் செயல்படவேண்டும். இசையில் அல்லது கூத்தில் அவன் பங்கு கொள்ளக்கூடாது. அவன் பிறரிடம் குற்றங் குறைகள் கண்டுபிடிக்கலாகாது; தானே தவறு எதுவும் செய்யாது இருக்கவும் வேண்டும். அவன் சந்தியாவந்தனத்தை, அதாவது, ஒளிகளுக்கெல்லாம் பேரொளியான சூரியனிடம் இறை வணக்கம் புரிதலை ஒழுங்காகச் செய்ய வேண்டும். தான் பெறும் கல்விக்கு மாணவன் ஊதியம் எதுவும் கொடுக்க வேண்டியதில்லை. குருவின் பராமரிப்பை அரசே மேற்கொள்கிறது; எனவே, கல்வி இலவசமாகிறது. குருவுக்குச் செய்யும் பணிவிடையின் வாயிலாகவும் அவர் பால் காட்டும் பக்தியின் மூலமாகவும் அறிவையும் பண்பையும் அவன் பெறவேண்டும்.

மாணவனின் தலையாய கடமை ஆசிரியரின்பால் அவனுக்கு இருக்க வேண்டிய மரியாதையும் நன்மதிப்புமாகும்.

பின்னர், மாணவன் கார்ஹஸ்த்யம் எனப்படும் மண வாழ்வில் அடியெடுத்து வைக்கிறான். வேறு கோத்திரத்தைச் சேர்ந்த அழகும் தகுதியும் வாய்ந்த மங்கையை அவன் தேர்ந்தெடுக்க வேண்டும். விவாகம் அல்லது திருமணம் என்பது காம வேட்கையையோ, புலன்களின் விருப்பத்தையோ திருப்திப் படுத்திக்கொள்வதன்று; அது ஆன்மிக வாழ்விற்கான ஒரு புனிதமான சடங்கு; அவனுடைய மனைவி தர்மத்தைப் பின்பற்றுவதில் அவனோடு பங்கு கொள்ள வேண்டும். ஒவ்வொரு மனிதனும் சமூக அமைப்பின் ஓர் உறுப்பாக விளங்குகிறான். அவனது உடலும் உள்ளமும், அதாவது, அவனது உளவியற் பௌதிக அமைப்பு அவனுடைய முன்னோர்கள், ரிஷிகள், தேவதைகள் ஆகியோரிடமிருந்து பெறப்படுவதாகும்; எனவே, அவன் அவர்களுக்கு நன்றிக் கடனைச் செலுத்த வேண்டியவனாயிருக்கின்றான். கிருஹஸ்தன் அல்லது இல்லறத்தில் இருப்பவன் தனது கடமைகளைச் செய்யவேண்டுமேயன்றி, தனது உரிமைகளை வலியுறுத்தக் கூடாது. முன்னோர்களுக்குச் செய்ய வேண்டிய கடமை அவர்களுக்கு சிராத்தங்களைச் செய்தலும், இனத்தை விளங்கச் செய்யும் குழந்தைகளைப் பெற்று வம்சத்தைத் தொடர்ச்சியுள்ளதாகச் செய்தலும் ஆகும். ரிஷிகள் கடவுளைக் கண்டறிந்த வேத முனிவர்களாதலால், அவர்களுக்கு ஆற்றவேண்டிய கடமைகள் வேதங்களைப் பயிலுதலும் வேதம் ஓதுதலும் ஆகும். வேதங்களில் விதிக்கப்பட்டுள்ள வேள்விகளினாலும் பூசைனகளினாலும் தேவதைகள் மகிழ்ச்சியடைகின்றனர். முதலாவதையும் மூன்றாவதையும் மனைவியின் துணையுடனேயே செய்ய முடியும். ஆகவே, நமது பெரியோர்களின்படி, திருமணம் என்பது சமய சம்பந்தமான ஒரு புனிதச் சடங்கேயல்லாது, நமது புலன்களின் வேட்கைகளைத் தணித்துக் கொள்வதற்கான ஒரு வெறும் சமூக ஏற்பாடு அன்று. மேற்குறிப்பிட்ட மூன்று அலுவல்களை மட்டுமின்றி, பஞ்ச யக்ஞங்களில் மீதி இரண்டையும் கூட வீட்டைப் பார்த்துக் கொள்ளும் மனைவியின் துணையுடனேயே செய்யமுடியும், எனவேதான், நமது பெரியோர்கள் வீட்டுப் பணியை இல்லத் தலைவியின் முக்கியமான கடமையாக வகுத்தனர். பிரம்மசாரி, உணவு வேண்டி அணுகும் பிற கிருஹஸ்தர்கள், உறைவிடமோ உறவினர்களோ இல்லாத துறவிகள் மற்றும் வானப் பிரஸ்தர்கள் போன்ற உணவு தேவைப்படும் எல்லோருக்கும் உணவு அளிக்கும் கடமையும் கிருஹஸ்தனுடையதே ஆகும். இவ்வாறாக, குழந்தைகள் தாயைச் சார்ந்திருப்பதைப் போன்று, பிற ஆச்ரமம் ஒவ்

வொன்றும் கிருஹஸ்தாச்ரமத்தையே சார்ந்துள்ளது. கிருஹஸ்தன் அல்லது இல்லறத்திலிருப்பவன் பூதபலி, அதாவது, எல்லாப் பிராணிகளுக்கும் உணவு தரவேண்டியிருப்பதால் ப்றவைகளும் பூச்சிகளும் கூட அவனிடமிருந்து உதவி பெறுகின்றன. ஆகவே, இல்லறத்திலிருப்பவன் சமூகத்திற்கு முக்கிய ஆதாரமாயிருக்கிறான்; அவனது ஆச்ரமமே கருணை நிரம்பியதாதலால் ஆச்ரமங்களுக்குள்ளேயே மிகச் சிறந்ததாகும்.

இங்ஙனம், பஞ்ச யக்ஞங்கள் எனப்படுபவை வாழ்க்கை என்பது, தொண்டு புரிவதற்கும் தியாகத்திற்குமான ஒரு வாய்ப்பேயன்றிப் புலன் நுகர்ச்சிக்காகவன்று என்னும் அடிப்படையின் மீது நிறுவப்பட்டிருப்பனவேயாகும். ஒருவன் தனது பராமரிப்பிற்காகப் பிரபஞ்சத்தினிடமிருந்து எடுத்துக் கொள்வதை மீண்டும் அதற்கு வழங்குவதே அது.

அடுத்தது வானப்பிரஸ்த ஆச்ரமம், பேரன் பிறந்த பிறகு, முதுமையும் அதனால் மனப் பலவீனமும் ஏற்படும்போது குடும்பத்தின் நிர்வாகத்தை மகனிடம் ஒப்புவித்து விட்டு, இல்லறத்தினின்றும் நீங்கி, மனைவியுடனோ மனைவியின்றியோ கானகத்திற்குச்சென்று, வாழ்வின் எஞ்சிய பகுதியைக் கடவுள் தியானத்தில், அதாவது, கடவுளைப்பற்றிய இடையறாத நினைவில் செலவிடவேண்டும். கானகத்திற்குச் செல்வது அகத்தின் ஆன்மிக அமைதிக்காகத்தான். வானப்பிரஸ்தனின் உணவு கிழங்குகள், கனிகள் மற்றும் அவை போன்று காட்டில் கிடைப்பவைகளேயாகும். உண்ணா நோன்புகளினாலும் சிரமங்களைப் பொறுத்துக் கொள்வதனாலும் அவன் துறவிக்குரிய தன்னடக்கத்தைக் கடைப்பிடிக்கின்றான். ஐந்து மகாயக்ஞங்களை அவனும் செய்ய வேண்டும். இந்த ஆச்ரமமானது துறவும் தியானமும் நிரம்பிய வாழ்க்கை, நிலையான அடுத்த சந்நியாச ஆச்ரமத்திற்கான பயிற்சிக் காலமேயாகும்.

ஸந்நியாச ஆச்ரமத்தில் இருக்கும் துறவி எல்லாப் புலன் கவர்ச்சிகளையும் புலன்பற்றுக்களையும் - சுவர்க்கத்தின் சுகங்களையும் வானுலக இன்பங்களையும் கூட - நீக்கி விடுகிறான். அவன் தனிமையில் வசித்தாலும், நகரத்திற்குச் சென்று தனது உடல் இருக்க வேண்டியதன் பொருட்டு உணவை இரந்து பெறலாம். அவனுக்குப் பற்றுகளோ வெறுப்புகளோ இல்லை. வெறுப்புக்கு மாற்றாக அவன் அன்பையே வழங்கிப் பிறருக்காக வாழ்கிறான். இறைவனோடு ஒன்றிப்போய், எல்லாப் பொருள்களிலும் கடவுளையும் கடவுளினிடத்தில் எல்லாப் பொருள்களையும் அவன் காண்கிறான். புவி மீதுள்ள ஒரு கடவுளாகவே அவன் இருக்கின்றான். ஏனைய ஆச்ரமங்களின் விளைவுப்

பயனுன இந்த ஆச்ரமம் வாழ்வின் நிறைவு ஆகும். கடமை வாழ்வு கடவுள் வாழ்வில் முடிவுறுகின்றது. பான்மைதான் முக்கியமேயன்றி நுட்பமான விவரங்கள் அல்ல. கீதை கூறுவது போல், ஒருவன் வாழ்வின் எந்த நிலையில் இருந்தாலும் தனக்கு விதிக்கப்பட்ட கடமையைப் பற்றின்றியும் இறைவன்பால் முழு அன்புடனும் செய்வதன் வாயிலாக அவன் முக்தி அல்லது விடுதலை பெற முடியும்.

ஆக, பிரம்மசர்யம் முதல் சந்நியாசம் ஈறுன ஆச்ரமங்கள் மனிதனின் ஆன்மிக வளர்ச்சியிலுள்ள வெவ்வேறு நிலைகளாகத் தோன்றினுலும், ஒரு பரந்த நோக்கிலிருந்து பார்க்கும்போது, ஒவ்வோர் ஆச்ரமும் அதனதன் அளவில் முடிவுடையதாகவே அல்லது குறிக்கோள் கொண்டதாகவே கருதப்படுகிறது. எந்த ஆச்ரமத்திலும் ஒருவன் தனக்கு விதிக்கப் பெற்ற கடமைகளைச் சிறப்பாகவும் பயனை விரும்பாமலும் செய்வதன் மூலமே மோட்சத்தை அடைய முடியும். ஆன்மத் தூய்மை,உலகியல் பொருள்களில் பற்றின்மை, இறைவனிடம் முழு ஈடுபாடு ஆகியவற்றினுல் மட்டுமே எந்த வாழ்க்கை நிலையிலும் ஒருவன் வீடு பெற முடியும். பிறப்பு, பிறப்பிடம், சமூகச் சூழ்நிலை ஆகியவை காரணமாக ஏற்பட்டுள்ள கடமைகளும் உண்டு. இவற்றுக்கும் கட்டாயக் கடமைகள், விருப்பக் கடமைகள் ஆகியவற்றுக்கும் எத்தகைய முரண்பாடும் இருக்கக் கூடாது. ஒவ்வொரு கடமையும் உண்மையான கர்த்தா அல்லது செயலாளன் ஆகிய தேவதையின் வழிபாடேயாகும். செயலும் அவனே; செய்பவனும் அவனே.

இப்போது, மகளிர் உரிமைகளையும் கடமைகளையும் பற்றிக் கவனிக்கலாம். நமது சாஸ்திரங்களில் புருஷ தர்மத்திற்கும் ஸ்திரீ தர்மத்திற்குமிடையே அடிப்படை வேறுபாடு ஒன்று இருக்கின்றது. பெண்கள் எப்போதும் ஆண்களைச் சார்ந்தேயுள்ளனர்; அவர்கள் ஒரு போதும் சுதந்தரமாக, அதாவது, தனியாக இருக்கமுடியாது, மகளிர்க்கு அவர்களுக்கு என்ற கடமைகள் இருக்கின்றன; ஆனுல், அவற்றை சுதந்தரமாகச் செய்வதற்கு அவர்களுக்கு அனுமதியில்லை. பெண்கள் இல்லாமல் ஆண்களும் தர்மத்தை அநுசரிக்க முடியாது. ஆனுல், வித்தியாசம் என்னவெனில், ஆண் ஒரு சடங்கைச் செய்யத் தொடங்கிவிட்டால் அவனுடைய மனைவி அவனுடன் ஒத்துழைத்து அவனுக்கு உதவி செய்தாக வேண்டும்; மாருக, பெண் தனது கணவனின் அநுமதியின்றி எந்தச் சடங்கையும் மேற் கொள்ளக்கூடாது. கணவனின் விருப்பத்திற்கு எதிராக அவள் ஏதேனும் செய்தால் அது பயனற்றதாகி விடும். இவை

அனைத்திலிருந்தும் என்ன ஏற்படுகின்றது என்றால், பதிவிரதையான மனைவியின் தலையாய கடமை தனது கணவனின் விருப்பங்களை அநுசரிப்பதேயாகும். நமது சாஸ்திரங்களின்படி திருமணம் என்பது ஒரு புனிதச்சடங்கு (சம்ஸ்காரம்); அது ஒரு வெறும் சமூக ஏற்பாடு அன்று; எனவே, திருமண இணைப்பு விடுபட முடியாதது. திருமணம் ஆகி விட்டால், கணவன் தீய பழக்கங்களுடையவனாகவோ நற்குணங்கள் இல்லாதவனாகவோ இருந்தாலும் கூட, ஒரு பெண் அவனை ஒதுக்கி விட முடியாது. அங்ஙனமே, ஆணும் தனது மனைவியைப் புறக்கணித்து விட முடியாது; அவ்வாறு செய்தால், அவன் பொது மக்களின் நிந்தனைக்கும் கண்டனத்திற்கும் ஆளாகிறான். கணவனும் மனைவியும் வாழ்க்கை முழுவதும் ஒருவரோடொருவர் இணைந்தும் மன நிறைவுடனும் இருக்க வேண்டும்.

சமயக் கடமைகளில் மகளிர்க்கு சுதந்தரம் அளிக்கப் படாவிடினும் வீட்டின் தலைவி அவள்தான். வீட்டு அலுவல்கள் யாவும் அவளது பொறுப்பில்தான் உள்ளன. குடும்பத்தில் தனது கணவனுக்குச் சரிசமமான—அதைவிட அதிக அளவில் கூட—மதிப்புப் பெற்றிருக்கின்றாள் அவள். குருவை அல்லது ஆசிரியனைவிட நூறு மடங்கு மரியாதை தந்தைக்கும் தந்தையைவிட ஆயிரம் மடங்கு மரியாதை தாய்க்கும் அளிக்க வேண்டும் எனச் சொல்லப்பட்டுள்ளது. ஒருவன் தனது தந்தையைக் கூட ஒதுக்கி விடலாம்;ஆனால், எந்த நிலையிலும் தாயைக் புறக் கணிக்கவே கூடாது. மனைவியும் சம மரியாதைக்கு உரியவளே; ஏன்எனில், மனைவியின் மூலமாக ஒருவன் தனது மகனாகப் பிறக்கிறான் என்று நமது சாஸ்திரங்கள் கூறுகின்றன. அவன் தனது மனைவியிடணிடத்தில் (மகன் உருவில்) பிறப்பதால் அவள் அவனுடைய 'ஜாயா' என்று அழைக்கப்படுகின்றாள். "எங்கே மகளிர் மதிக்கப் படுகின்றனரோ அங்கே கடவுளர் களிப் படைகின்றனர். மாதரை மதிக்காத இடத்தில் செய்யப்படும் சடங்கு பயனற்றதாகிறது; பெண் இல்லத்தின் விளக்கு; சௌபாக்கியத்தின் அல்லது மங்கலத்தின் அவதாரமே ஆவாள்" என்று கூறுகிறது நமது சாஸ்திரம்.

செய்யப்பட வேண்டிய நற்காரியங்கள் என்று இருப்பதைப் போன்றே, தவிர்க்கப் பட வேண்டிய தீச்செயல்களும் உள்ளன. ஆகவே, குறிப்பிட்ட சில கடமைகளை நாம் செய்ய வேண்டும் என்று சாஸ்திரம் கட்டளையிடுவதோடுகூட, குறிப் பிட்ட சில செயல்களை நாம் செய்யக்கூடாது என்றும் அது எடுத்தியம்புகிறது. நல்ல காரியங்கள் புண்ணியத்தை விளைவிப்பதைப் போலவே, தீய செயல்கள் அல்லது விலக்கப்பட்ட

வினைகள் பாவத்தை உண்டாக்குகின்றன. நமது பெரியோர்கள் எவ்வளவு விவேகத்துடன் குறிப்பிட்ட சில ஒழுக்க விதிகளையும் அறநெறிகளையும் நிறுவினார்களோ, அவ்வளவு முன்யோசனையுடனேயே தீய செயல்களைச் செய்வதினின்றும் நம்மை எச்சரித்திருக்கிறார்கள். அத்தீய செயல்கள் நமக்கோ சமூகத்திற்கோ கேடு விளைவிப்பவை. புண்ணியம் பெறுதலை இழந்து விடுவதையோ பாவத்தைத் தேடவோ விரும்பாதவன் இவற்றை ஒதுக்க வேண்டும். இல்லறத்திலிருப்பவன் பிறன் மனைவியை அடைவதற்கு ஆசைப்படக் கூடாது. ஒருவரும் பிறருக்கு இம்சையையோ தீங்கையோ செய்யக் கூடாது. தவிர்க்க முடியாத தேவை ஏற்பட்டால் அன்றி ஒரு சாதியைச் சேர்ந்தவனின் கடமைகளை மற்றொரு சாதியைச் சேர்ந்தவன் மேற்கொள்ளக் கூடாது. உணவு பற்றியும் பல்வேறு தடைகள் உள்ளன. பொதுவாக ரஜோகுணம் அல்லது தமோ குணம் உள்ள உணவு தவிர்க்கப்பட வேண்டும். புலன்களையோ விலங்கியல்புகளையோ தூண்டுவதாக உணவு இருக்கக் கூடாது. சோம்பலுக்கோ அக்கறையின்மைக்கோ அது வழிகோலக் கூடாது. கள்ளும் களவும் நிச்சயமாகத் தவிர்க்கப்படவேண்டும்.

தடைகளும் விலக்குகளும் இருக்கும்போது தவறுதல் மனித இயல்பே ஆதலால், செய்ய வேண்டியவற்றை விட்டு விடுதலும் செய்யக் கூடாதவற்றைச் செய்தலும் இருக்கவே செய்கின்றன. பிராயச்சித்தம் அல்லது கழுவாய், அதாவது, செய்ததற்காக இரங்கி உளம் நைவுற்றுத் தன்னைத் தூய்மைப் படுத்திக் கொள்ளுதல் என்பதனால் இவற்றை ஒருவன் திருத்திக் கொள்ளவேண்டும். இதன் அடிப்படைக் கருத்து என்னவெனில், பாவத்திற்கும் தவற்றுக்கும் உளமார வருந்துதல் ஆகும். செய்த தவற்றுக்காக வருந்தி அந்த அநுபவத்திலிருந்து பயன் பெற வேண்டும். பிராயச்சித்தங்களினால் இது பெறப்படுகின்றது. தூய்மைப் படுத்திக் கொள்வதற்கான மிகச் சாதாரண முறை ஆன்மாவின் பரிசுத்தத்திற்கு வழிகோலும் தவமும் பட்டினியும் அல்லது உடலை வருத்திக் கொள்ளலும் ஆகும். பிராயச்சித்தம் அல்லது கழுவாய் என்பதன் பொருள் நோன்பு அல்லது மீண்டும் தவற்றைச் செய்யாதிருப்பதற்கான உறுதி என்பதாகும். இந்தக் கழுவாய்ச் சடங்குகள் மனிதனின் மனத்தைத் தூய்மைப்படுத்தி, அவன் செய்த தீய செயல்களினாலும் செய்யத் தவறிய நல்ல காரியங்களினாலும் அவனது ஆன்மிகத் தன்மை அழிவுறுவதைத் தடுக்கின்றன. தவறுகளுக்காக அல்லது அறியாத பிழைகளுக்காகவே நோன்புகள் ஏற்பட்டுள்ளனவேயன்றி, வேண்டும் என்றே தெரிந்து செய்யப்படும் தீய செயல்களுக்காக அல்ல. வேண்டும் என்றே

செய்யப்படும் தீய செயல்களுக்குக் கழுவாயே கிடையாது. அவன் தண்டனையடைவது உறுதி. நமது அன்றாட அலுவல்களைச் செய்யும் போது நமக்குத் தெரியாமல் நாம் சிலவற்றைச் செய்யாது விட்டுவிடலாம்; அவ்வாறு விட்டுப்போன செயல்களினால் உண்டாகும் தீயவிளைவுகளைத் தவிர்ப்பதற்குக் கழுவாயாக ஒவ்வொரு சடங்கின் இறுதியிலும் ஒரு காரியத்தைச் செய்வது வழக்கம். அறிவார்ந்த நமது முன்னோர்கள் கடமைகளை ஆற்றுவதில் மிகவும் கவனமுடையவர்கள்; செய்யும் காரியங்களின் நற்பயனை உறுதிப் படுத்துவதற்கு விரும்புபவர்கள். நல்லொழுக்கம் நிறைந்த வாழ்விற்குக் கழுவாய் உணர்வு இன்றியமையாததாகும்.

நமது நோன்புகளும் பண்டிகைகளும் நம்மை தூய்மைப் படுத்திக் கொள்வதிலும் சத்துவகுணத்தைப் பெருக்கிக் கொள்வதிலும் நமக்குத் துணை புரிவதற்கான ஏற்பாடுகளே. சத்துவ குணம் பெருகினால் நாம் அகம்பாவத்திலிருந்து விடுபட்டு, கடவுளின் விருப்பத்திற்கு நம்மை ஒப்படைத்துக் கொண்டு, அவனது அருளினால் மோட்சம் பெறுவோம். சடப் பொருளினாலாகிய உடலின் ஆதிக்கத்தைக் குறைத்து, ஆன்மிக இயல்பு மேலோங்குவதற்கு நோன்பு துணை செய்கிறது. பண்டிகைகள் வெறும் விருந்துகளுக்காக ஏற்பட்டவை அல்ல. அவை கடவுளின் அவதாரங்களை நமக்கு நினைவுபடுத்தவே, நல்லோரைக் காத்தும் தீயோரை அழித்தும் மனித குலத்தை மீட்பதற்காகக் கடவுள் மேற்கொண்ட மாபெரும் செயல்களைக் கொண்டாடவே ஏற்பட்டவையாகும். கடவுளின் நிலையான பெருங் கருணைக்காக நமது நன்றியைத் தெரிவிக்கும் புற வெளிப்பாடுகள் அவை. கடவுளுக்கு நாம் நன்றி செலுத்தாவிட்டால், கடவுள் நம்மைத் தம்பால் அணுகச் செய்வதற்கு எடுத்துக் கொண்ட சிரமத்திற்காக நாம் நன்றி மறந்தவர்களாவோம். எடுத்துக் காட்டாக, தீபாவளித் திருநாள் நரகன் என்னும் கொடிய அரக்கனை கிருஷ்ணன் அதற்கு முந்தைய நாள் மாய்த்து உலகிற்குப் புரிந்த நன்மையை நினைவூட்டி மகிழும் நாளாகும். அங்ஙனமே சங்கராந்திப் பண்டிகை விஷ்ணு தமது வல்லமையினால் பலி என்னும் அசுரனின் தளைகளிலிருந்து உலகை விடுவித்ததைக் கொண்டாடுகிறது;

மேலும், பலி தீயோனுக இருந்தாலும் இரந்து வேண்டிக் கொண்டதால் அவனை மன்னித்தருளி, அவன் உயிருடன் இருக்கும் வரை அவனைப் பாதுகாக்கும் பொறுப்பையும் மேற்கொண்ட இறைவனின் எல்லையில்லாக் கருணையையும் அது புலப்படுத்துகிறது. பிறிதொரு வகைப் பண்டிகைகள் கடவுளின் அவதார தினங்களையும், இவ்வுலகையும் அப்பாலுள்ள உலகங்களையும் பற்றிய அறிவை நமக்கு வழங்கிச் சென்றுள்ள புண்ணிய புருஷர்களின் பிறந்த நாட்களையும் கொண்டாடுகின்றன.

## பெண்மை

இந்து மதத்தில் பெண்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் இடத்தைப்பற்றி இங்கு குறிப்பிடுவது பொருத்தமாயிருக்கும் எனத் தோன்றுகிறது.

இல்லமே இந்து சமூகத்தின் அடிப்படை; அதன் ஆன்மிக, அறவியல் வாழ்வின் நாற்றங்காலும் அதுவே. இந்துப் பெண் இல்லத்தின் மையம்; அதன் மூலமும் ஆதாரமும் அவளே. ஆண் என்பவன் கிருஹஸ்தன் அல்லது இல்லறத்தான் ஆயின், பெண் என்பவள் கிருஹிணி அல்லது இல்லாள் அல்லது இல்லத்தையே ஆக்குபவள் ஆகின்ருள். தாயோ, தாரமோ இல்லாமல் இல்லம் என்பது இருக்கவே முடியாது. ஆணின் தேவைகளைக் கனிவுடன் கவனித்துத் தொண்டு புரியும் தேவதை அவள்; வேறு எந்த சமயமும் செய்யாத வகையில் இந்து மதம் பெண்ணை அன்னையாகவும் மனைவியாகவும் கௌரவித்துப் பாராட்டுகிறது.

திருமணம் என்பது ஒரு புனிதமான சடங்கு; அது ஒரு வெறும் சமூக ஏற்பாடு அன்று. ஆணையும் பெண்ணையும் பதியும் பத்தினியுமாக அல்லது கணவனும் மனைவியுமாகப் பிணைப்பது சிற்றின்ப உணர்ச்சியும் விலங்கியல் வேட்கைகளைத் தணித்துக் கொள்வதுமன்று; அன்பே அவர்களை அங்ஙனம் அணைத்துப் பிணைக்கின்றது. அன்பின் இயற்கைத் தன்மை, பரஸ்பரப் பற்றின் இயல்பு ஆகியவற்ருேடு கூட அதன் நிலையான சுபாவம், மாற்ற முடியாத இயல்பு, ஆன்மிக இணைப்பின் மதிப்பு ஆகியவற்றையும் மணவினை அல்லது திருமணச் சடங்கு

வெளிப்படுத்துகிறது. பெண்ணின் இல்வாழ்க்கை என்பது சுவையற்ற ஒரு தொழும்புப் பணி அன்று; மாறாக, அது கணவனின் தேவைகளை நிறைவேற்றுவதிலிருந்தும் குழந்தைகளை வளர்ப்பதிலிருந்தும் கிடைக்கும் ஓர் அகக்களிப்பு. சகதர்மசாரிணி அல்லது அறநெறியில் உடன் வருபவள் ஆகிய மனைவி பெண்மைக்குரிய இனிமையுடனும் மென்மையுடனும் குடும்பத்தைச் சமுதாயத்தின் கூட்டு வாழ்க்கையின் அடிப்படையாக நடத்துவதில் கணவனுடன் ஒத்துழைக்கிறாள். முன்னோர்களுக்கு நன்றி பாராட்டுதலும் ஏழைகளுக்கும் தேவையுள்ளவர்களுக்கும் விருந்தோம்பலும் உட்பட்ட கணவனின் ஐந்து கடமைகளை நிறைவேற்றுவதில் அவள் கணவனின் பொறுப்புகளை விருப்பத்துடன் பகிர்ந்து கொள்கிறாள். அவளது குடும்ப வாழ்க்கையானது பெண்மையின் ஏற்கும் தன்மை, இரக்கம் ஆகியவை காரணமாக, செயலற்றதும் பிறர் மீது ஆதாரப்பட்டிருப்பதுமான ஒன்றன்று; மாறாக, அவள் இல்லத்தின் அரசி, வீட்டின் தலைவி: அவள் அதன் ஆதாரம், வளம் திருமகளின் அவதாரம். மனைவியாக கணவனின் பிடிவாதமான உள்ளப் பாங்கை இனிக்கச் செய்வதில் அவள் அவனுக்கு வழிகாட்டுகின்றாள்.

தாய்மைப் பேற்றை அடையும் போது அவளது அன்பு வாழ்வு செழுமை பெறுகிறது. கோத்திரத்திற்கும் ஆன்மிகப் பரம்பரைக்கும் பெருமை தரவல்ல குழந்தைகளைப் பெற்று வளர்ப்பதில் அவளது தியாக இயல்பும் சேவை மனப்பான்மையும் முழுதும் வெளிப்படுகின்றன. பாசம் நிறைந்த அக்கறையையும் தன்னல மறுப்பையும் வரம்பில்லாது வெளிக்கொணருவது தாய்மையே யாகும்; அதுவே, உயிரையே தியாகம் செய்யும் அளவிற்கு, முடிவில்லாத துயரங்களையும் பொறுமையையும் மேற்கொண்டு குழந்தைகளைப் பேணுவதில் வெளிப்படுகிறது. இருப்பினும் கூடத் தவறுகள் மிகுதியாவதன் அளவிற்கேற்பத் தாயின் மன்னித்தருளும் தன்மையின் அளவும் பெருகுகிறது.

எனவேதான், இந்து சமயம் மனையாள் நிலையினை இறையன்பின் அடையாளமாகவும் உருவாகவும் போற்றிப் புகழ்கிறது. இறைத்தன்மையின் ஈசுவர - ஈசுவரி உறவு என்பது

பார்வதி - பரமேசுவரன் அல்லது ஸ்ரீபதி எனப்படும் இரண்டு-இரண்டல்லாததன் இணைப்பேயாகும். ஈசுவரன் ஆணையினால் ஆளுகின்றார்; ஈசுவரியோ அன்பினால் ஆளுகின்றாள். இருவரும் ஒன்றாக இணைந்துள்ளனர். இறைமையின் அன்னை நிலைதான் பாவியையும் தீயவழிகளிலிருந்து மீட்டி அவனை மன்னித்தருளும் கடவுளின் அருள் திறமைக்குக் காரணமாகிறது. தாயின் அன்பு இயற்கையானது; இறையன்னை தனது பொங்கி வழியும் அருளினால் பாவங்களை மன்னித்துக் கருணை புரிகிறாள்.

கணவன் மனைவியினிடத்தில் காட்டும் அன்புதான் பெண்ணின் உண்மையான சொத்து; உலகியல் ஆஸ்தியையும் பொருள் நலத்தையும் விட அது வளம் நிறைந்தது, நிலையானது. ஏழைகளுக்கு அன்னமிடுதல், நோயுற்றோருக்குச் சிகிச்சை செய்தல், குழந்தைகளைப் பராமரித்தல், பக்திச் செயல்களில் கலந்துகொண்டு களிப்புறுதல் போன்ற சமூகத் தொண்டுகளில் பெண் அடிக்கடி முக்கியப் பங்கு எடுத்துக் கொள்வதால், பெண்ணின் அலுவல் குடும்ப மகிழ்ச்சியை வளர்ப்பதுடனேயே நின்று விடுவதில்லை. ஆனால், அவளது பெண்மை இயல்பு இல்லத்தை நிறுவுவதற்கு நிரம்பவும் பொருத்தமுடையதாய் இருக்கிறது; அவளுடைய அடிப்படை உரிமை வீட்டையும் சமூகத்தையும் ஆளும், அன்பு உரிமையாக விளங்குகிறது.

அத்தியாயம் - 8

# வழிபாடு

தீவிரமான பக்தி அல்லது இறையன்பு, சிறப்பாக அது பெருமளவில் பெருகி விழிநீர் சோரல், மெய் விதிர்த்தல், சமாதி நிலையில் இருத்தல், நாயகி பாவ அல்லது காதல் முறை அநுபூதி என்பவை வாயிலாகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும்போது. வெறும் மௌனமான தியானத்துடனும் உபாசனையுடனும் நிறைவுற்று இருக்கமுடியாது. வேதங்களில் குறிப்பிட்டுள்ள, கடவுளருக்குச் செய்யவேண்டிய சமர்ப்பணங் கள் என்பவை வேதாந்தத்தில் பிரம்மத்திற்குச் செய்யப்படும் சமர்ப்பணங்களாக விளக்கப்படுகின்றன. பிரம்மம் காலத்திற் கும் இடத்திற்கும் அப்பாற்பட்டது, உருவமில்லாதது. ஆனால், பக்தர்களின் தேவைகளையும் அவர்களின் துதிகளையும் செவி யுற்றுப் பயன் தரும் வகையில் செயல்படும் பொருட்டு அதற்கே உரிய அருவமான உருவம் ஒன்று அதற்கு இருக்கின்றது. பக்திக் காகவே பக்தி என்றாலும், மெய்யடியார்கள் இம்மை, மறுமை நலங்களுக்காக அடிக்கடி வேண்டுவதால், உலகை ரட்சிப்பவன் அல்லது காப்பவன் என்னும் கருத்தில் பகவான் அவர்களின் வேண்டுகோளைச் செவி மடுத்து அருள் புரிகின்றார். அக ஆன் மாவைப் பற்றிய தியானம் என்பது பெரிதும் விரும்பத்தக்கதே; ஆயினும், பொது அறிவுடைய சாதாரண மனிதனுக்கு அது சாத்தியமில்லை. மனத்தைப் பொருத்துவதற்கு நேரடியான திடப்பொருள் ஒன்று அவனுக்குத் தேவைப்படுகிறது. கடவுள் தமது எல்லையில்லாக் கருணையினாலும் அன்பினாலும் அர்ச்சை அல்லது விக்கிரக வடிவில் அவதரிக்கிறார். அதாவது மக்களி டை இறங்கிவருகிறார். அர்ச்சை அல்லது விக்கிரகம் என்பது உலோகத்தினாலோ, கல்லினாலோ ஆகிய ஓர் அடையாளப் பொருள் அன்று; அது கடவுளின் நிரந்தர அவதாரம். அவரது கிருபையின் அல்லது அருளின் தூல வடிவமாகும். கடவுளை அர்ச்சை அல்லது விக்கிரக வடிவில் எல்லோரும் எந்த சமயத்திலும் எந்த இடத்திலும் அணுகலாம். மனிதனை ஈடேறச் செய்வதற்காகக் கடவுளுக்கு இருக்கும் விருப்பம் கடவுளை நாடுவதற்காக மனிதனுக்கு இருக்கும் ஆர்வத்தைவிட மிகுதியானது; அர்ச்சை வடிவிலுள்ள கடவுள் தமது ஆன்மா

வாகவே கருதும் அடியாருடன் ஒன்றியிணைவதைப் பெரிதும் விரும்புகிறார். பக்தி என்பது கடவுளின்பால் மனிதனுக்கு இருக்கும் அன்பின் அகத்தோற்றம்; பூசை அல்லது வழிபாடு என்பது அதன் புறவெளிப்பாடு. கடவுள் தமது பேரருள் காரணமாக இறங்கிவருகிறார். பக்தன் கர்மயோகத்தினாலோ, ஞானயோகத்தினாலோ பக்தியோகத்தினாலோ உயர்ந்து அவரை அடைகிறான். நமது இறையன்பை பூசை அல்லது வழிபாடு வாயிலாக வெளிப்படுத்துவதற்கு நிரம்பவும் எளிதாயிருப்பது அர்ச்சை வடிவம்.

வழிபாட்டை பல வழிகளில் செய்யமுடியும். தியானத்தினால், அதாவது, இடையறாத அக நினைவினால் நாம் கடவுளை வழிபட முடியும். பூ, தூபம் அல்லது வாசனைப்புகை, உணவு மற்றும் பானம் ஆகியவற்றை வழங்கியும் நாம் அவரைப் பூசிக்க முடியும். அவரது நாமங்களைச் சொல்லியும் நாம் அவரை வணங்கலாம். முதலாவதாகக் கூறிய வழியில் பார்வையை உள் நோக்கித் திருப்பிச் செலுத்த வேண்டியிருப்பதால் அதைக் கடைபிடிப்பது கடினம். இரண்டாவதாகச் சொல்லிய வழி எளிதானது; எல்லோராலும் எளிதில் பின்பற்றக் கூடியது. மூன்றாவதாகக் குறிப்பிட்ட வழியோ அனைத்திலும் மிக எளிதானது; நிரம்பப் பயன் தருவது, சக்தி வாய்ந்தது. அர்ச்சை அல்லது விக்கிரக வழிபாடு என்பது இறைவனின் உயிர்ப்புடன் கூடிய, எங்கும் நிறைந்திருக்கும் தன்மையின் வழிபாடேயாகும். அவதாரங்கள் என்பவை வந்தும் போகும் கடவுளின் வரலாற்று வடிவங்கள்; ஆனால், அர்ச்சை அல்லது விக்கிரகம் கடவுளின் நிரந்தர அவதார வடிவம்; பக்தர்களுக்கு எப்போதும் கிடைக்கக் கூடியதாகும். இறைவன் தமது அருளினாலும் நமது பக்தி மற்றும் பிரார்த்தனை ஆகியவற்றாலும் விக்ரகத்தில் வந்து உறைந்திருக்கின்றார்.

கடவுளை நாராயணனாக வழிபடுவதில் பாஞ்சராத்ரம், வைகானஸம் என்று இரு முக்கியமான முறைகள் இருக்கின்றன, பாஞ்சராத்ர ஆகமம் நாராயணனின் சொல்லே ஆகும்; அன்பு வழிபாட்டை அடிப்படையாகக் கொண்ட ஒரு சாத்துவிகச் சமயம் அது. வைகானஸ ஆகமமும் தெய்விகத் தொடர்புடையதே யாகும். சைவ ஆகமங்களுக்கு மூலம் சிவன். ஆகவே இதிகாசங்களுக்கும் புராணங்களுக்கும் இருக்கும் செலாவணி அல்லது உண்மைத் தன்மை ஆகமங்களுக்கும் உண்டு.

கடவுளை அர்ச்சையாக அல்லது உருவமாக வழிபடுவதில் இரு வகைகள் உள்ளன : கோயில் வழிபாடு, வீட்டு வழிபாடு. முந்தையது அனைவருக்காகவும் ஏற்பட்டது. தொடர்ச்சியுள்

ளது; முழுச்சமுதாயத்தின் நலத்தையும் பெருக்கவல்லது. வீட்டு வழிபாடோ இல்லறத்தானுக்கும் அவனது குடும்பத்திற்காகவும் ஏற்பட்டது. அன்றியும் கோவில் வழிபாட்டில் ஹோமம், பலி மற்றும் உற்சவம் ஆகியவை இருக்கும். வீட்டு வழிபாட்டில் இவை இரா : மேலும், கோவில் வழிபாட்டில் பல விக்கிரகங்கள் இருக்கும்.

ஆகமங்கள் தொண்ணூற்ருறு வகைக் கோவில்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றன; அவற்றுள் பதினெட்டு வகைகள் விஷ்ணுவிற்கும், எஞ்சியவை பிற கடவுளருக்கும் ஏற்பட்டவையாகும். ஒரு கோயிலின் முக்கியமான பகுதிகள் வருமாறு : கர்ப்பக்கிரகம் அல்லது கருவறை, அதாவது, மூலவிக்கிரகம் இருக்கும் அறை; முகமண்டபம் அல்லது முன்னுலுள்ள கூடம்; பிராகாரம் அல்லது கருவறையைச் சுற்றி வலம் வருவதற்காக அமைந்துள்ள திருச்சுற்று. கருவறையின் மேல் விமானம் அல்லது கோபுரம் ஒன்று இருக்கிறது; பிராகாரத்திலும் நுழைவாயில் அல்லது கோபுர வாயில் ஒன்றும் உள்ளது. கோவிலின் சிறப்புக்குத் தக்கவாறு ஒன்றிலிருந்து ஏழு பிராகாரங்கள் வரை இருக்கின்றன,

கோவில் வழிபாட்டிற்கு ஐந்து வகை வடிவங்கள் ஏற்பட்டுள்ளன; இவற்றுள் துருவம் எனப்படும் நிலையான வடிவமும் உற்சவர் எனப்படும் இயங்கும் வடிவமும் மிகவும் முக்கியமானவை. வடிவங்கள் ஸ்தான நிலைஅல்லது நின்ற திருக்கோலம், ஆசன நிலை அல்லது அமர்ந்த திருக்கோலம், சயனநிலை அல்லது கிடந்த (படுத்திருக்கும்) திருக்கோலம் என்று மூன்று வகையில் இருக்கின்றன. மேலும்இவற்றுள் ஒவ்வோர் வகையிலும் யோக நிலை அல்லது சாந்தநிலை, போகநிலை அல்லது ஆனந்தநிலை, வீர நிலை அல்லது பராக்கிரம நிலை என்பவை உள்ளன.

கோவிலைத் திட்டமிடுவதிலும் அதைக்கட்டுவதிலும் அதன் விமானம், பிற பகுதிகள் போன்றவை எங்கெங்கே அமைய வேண்டும், அவற்றின் கன பரிமாணமும் பிற அளவுகளும் எவ்வளவாக இருக்கவேண்டும் என்பவை பற்றிய நுணுக்கமான விவரங்களை ஆகமங்கள் எடுத்துரைக்கின்றன. எங்ஙனம் உடலானது கடவுளின் உயிருள்ள கோவிலாகவும் இருதயம் அவரது புனிதமான இருப்பிடமாகவும் கருதப்படுகிறதோ, அங்ஙனமே ஊரும் கோவிலை மையமாக வைத்து ஓர் ஆன்மிகத் திட்டத்தின் அடிப்படையிலேயே அமைக்கப்படுகிறது. ஆதிமூர்த்தி எனப்படும் பிரதான கடவுளுக்கான கோவிலையன்றி, கடவுளின் பிற அவதாரங்களுக்கும் ஆழ்வார்கள், நாயன்மார்கள் மற்றும் ஆசாரியர்கள் ஆகியோருக்கும் ஆலயங்கள்

இருக்கலாம். கோவில் முழுவதிலும் ஒரு சமயச் சூழல் பரவி யிருக்கின்றது; அச்சூழலில் தொண்டு அல்லது சேவை என்பது வழிபாட்டு நிலைக்கும், வழிபாடே ஆன்மிக, தத்துவவியல் நிலைக்கும் உயர்த்தப்படுகிறது.

கோவிலில் நடத்தப்பெறும் திருவிழாக்கள் முழுச் சமுதாயத்தின் நன்மைக்காகவே ஏற்பட்டிருப்பவையாகும். அவை குறிப்பிட்ட காலங்களில் நடைபெறுபவை, எப்போதாவது நடைபெறுபவை என இருவகைப்படும். பக்தன் மூலவரை அல்லது கோவிலினுள் எழுந்தருளியிருக்கும் கடவுளைத் தேடிச் செல்கிறான்; ஆனால், உற்சவரோ கருணை வழங்குபவராக வெளியிலுள்ள அடியார்களைத் தேடி அவர்களுக்கு அருள் பாலிக்கின்றார். சூரியன் பூமத்தியரேகையைக் கடக்கும் காலங்களிலோ, பௌர்ணமியிலோ நடத்தப்பெறும் திருவிழாக்கள் தவிர, பக்தியினாலோ, பஞ்சம் அல்லது பிரபஞ்ச விபத்துகள் ஏற்படும் காலங்களில் தீமையைத் தடுப்பதற்கான விருப்பத்தினாலோ எந்தச் சமயத்திலும் திருவிழாக்களை நடத்தலாம். விழாக் காலம் ஒன்றிலிருந்து பதினைந்து அல்லது முப்பது நாட்கள் வரை இருக்கலாம். திருவிழாவின் தொடக்கத்தில் அதைக் குறிப்பிடும் பொருட்டுக் கோவிலில் கொடி ஏற்றப்படுகிறது; விழாவின் இறுதியில் அது இறக்கப்படுகிறது. கொடி ஏறி விட்டால் அது இறக்கப்படும் வரை ஊரை விட்டு எவரும் வெளியே செல்லக்கூடாது. திருவிழா மக்களின் நன்மைக்காகவே நடத்தப்படுகிறது என்பதையே இது குறிப்பிடுகிறது. பக்தி பூர்வமான விழாக்களைப் பிற்பகலில் செய்ய வேண்டுமென விதிக்கப்பட்டுள்ளது.

கோவிலைத் தூய்மையாகவும் புனிதமாகவும் வைத்துக் கொள்வதற்காக மிகுந்த கவனம் எடுத்துக்கொள்ளப்படுகிறது. கடவுள் தூய்மையானவர், பூரணமானவர். மிகச் சிறிய அசுத்தச் செயலுக்குக் கூட தூய்மைப்படுத்தும் சம்புரோட்சணச் சடங்குகள் ஏற்பட்டுள்ளன. இதன் உட்கருத்து என்னவெனில், தூய்மையே உருவானவரும் எவ்வகை மாசும் இல்லாதவருமான கடவுள், சிறிதளவிற்கே அசுத்தமடைந்த இடங்களாயினும் அவை தாம் இருப்பதற்குத் தகுதியற்றவை எனக் கருதி அங்கிருந்து அகன்று விடுகிறார் என்பதாகும். பக்தன் தூய்மையான உள்ளத்துடனும் உடலுடனும் கோவிலுக்குள் செல்ல வேண்டும். தூய்மை இறைமைக்கு அல்லது தெய்விகத் தன்மைக்கு வழிகோலுகிறது; இதயத்தில் தூய்மையாக இருப்பவனே இறைவனை அடைய முடியும். கோவிலை அசுத்தம் செய்து விட்டால், அதைத் தூய்மைப்படுத்துவதற்

குச் சில சடங்குகள் செய்யப் படுகின்றன. கோவிலுக்குள் அசுத்தமான ஆட்களும் பிராணிகளும் நுழைந்து விட்டால் அதற்கான சம்புரோட்சணச் சடங்குகளும் வகுக்கப்பட்டுள் ளன. காளான், எறும்புப்புற்று ஆகியவை இருந்தால்கூட கோவிலைத் தூய்மைப் படுத்த வேண்டும். நாட்டிற்குத் தீமையை முன்னறிவிக்கும் தீய நிமித்தங்களுக்கான தூய்மைப் படுத்தும் சடங்குகளும் விவரிக்கப்பட்டுள்ளன.

பாரதநாடு உலகப் பொது சமயத்தின் பிறப்பிடம்; கட வுளின் அவதாரங்கள், ரிஷிகள், ஆழ்வார்கள், நாயன்மார்கள், ஆசாரியர்கள் மற்றும் தெய்வ தரிசனம் கண்டவர்கள் ஆகி யோர்களின் புனித பூமி. இறைவனின் அவதாரங்களும் தெய் வப் புருஷர்களும் தோன்றிய இடங்கள். மனிதகுலத்தை ஆன்மிகமுள்ளதாகச் செய்வதற்கான அவர்களது வருகை யினுல் புனிதமடைந்த க்ஷேத்திரங்கள் அல்லது புண்ணியத் தலங்கள் எனப்படுகின்றன. இந்தியத்தாய் யுகயுகமாகக் கணக்கற்ற முனிவர்களையும் மகான்களையும் ஈன்றெடுத்திருந் தாலும், தெய்வப் புருஷர்களை உண்டாக்கும் ஆற்றல் அவ ளுக்கு எல்லையில்லாது இருப்பதால் அவள் எப்போதும் இள நங்கையாக அல்லது நித்திய யுவதியாக வணங்கப் பெறுகிருள். வேதாந்திகள் பிரம்மத்தைப் பரம்பொருளாகவோ சத்தாகவோ, அகில நாயகனுகவோ ஈசுவரனுகவோ கருது கின்றனர்; பக்தர்கள் கடவுளை அகத்துள்ளே உறையும் பர மாத்மாவாகப் பார்க்கின்றனர்; ஆனுல், அனைவரும் க்ஷேத்திரங் களிலுள்ள கடவுளின் திருவவதாரங்களை — அவை வரலாற்று ரீதியில் நிகழ்ந்த அவதாரங்களாக இருந்தாலும் சரி, அல்லது, நிரந்தரமாக அமைந்த அவதாரங்களாக இருந்தாலும் சரி- போற்றி வாழ்த்தி ஏத்துகின்றனர். க்ஷேத்திரங்களுள் முக்கிய மானவை ஏழு. அயோத்தி, அவந்தி, காசி, காஞ்சி, மதுரை, மாயை, துவாரகை. அயோத்தி இராமன் அவதரித்த தலம்; (வட)மதுரை, கோகுலம், பிருந்தாவனம் ஆகியவை கிருஷ்ண னின் லீலைகளுடன் தொடர்பு பெற்றவை. ஆன்மிக இந்தியா வின் இதயம் வாரணுஸி எனப்பெறும் காசி புனிதமானதாகக் கருதப்படும். காஞ்சி இந்தியாவின் பிரதான மோட்சபுரி அல்லது மோட்சம் அளிக்கும் நகரம் ஆகும்.

அர்ச்சை அல்லது விக்கிரகம் ஐந்து உருவங்களில் வழி படப்படுகின்றது; இவற்றில் மிக முக்கியமானது திருப்பதியில் இருப்பதைப் போன்ற ஸ்வயம்வியக்தமான, அதாவது, பகவான் தாமாகவே வெளிப்படுத்திக் கொண்ட உருவம்;இறைவன் தமது அலகிலா அன்பினுல் இங்கு அவதாரம் செய்து ஜீவன்கள்

அனைத்தையும் ஆட்கொள்ளும் மீட்புக் கருணையின் வடிவமாக விளங்குகிறார். மலையின் உச்சியில் இருந்து கொண்டு எல்லா ஜீவன்களையும் தமது திருவடிகளை நாடி, தமது திருவருளைப் பெற்று உய்வதற்காக அவர் அழைக்கின்றார். வேறு க்ஷேத்திரங்கள் ஸ்ரீரங்கம், புஷ்கரம், மேல்கோட்டை, நைமிசம் ஆகியவை. காஞ்சி பிரம்ம தேவனால் வரதராஜருக்கு அர்ப்பணம் செய்யப்பட்ட திவ்ய க்ஷேத்திரம். திருவள்ளூர் ரிஷியினால் அர்ப்பணம் செய்யப்பட்டதால் அது ஓர் ஆர்ஷக்ஷேத்திரம் ஆகும். நல்ல மனிதனால் நிறுவப்படுறது மானுஷக்ஷேத்திரம் எனப்படுகிறது. இவ்வாறான ஆரம்பம் தெரியாத கோவில்கள் புராண க்ஷேத்திரங்கள் எனப்படுகின்றன. பெரும்பான்மையான கோவில்கள் இவ்வகையைச் சேர்ந்தனவே யாகும். சைவ க்ஷேத்திரங்களிலும் இம்மாதிரியான வகைகள் உண்டு. மேலும், நிலம், தீ, நீர், வளி, விசும்பு என்னும் பஞ்ச பூதங்களில் சிவன் உறைவதைக் குறிப்பிடும் தலங்களும் உண்டு. திருவாரூரில் நிலம் அல்லது மண் உருவிலும், திருவண்ணாமலையில் தீ அல்லது சோதி உருவிலும், திருவானைக்காவில் நீர் உருவிலும், திருக்காளத்தியில் வளி அல்லது காற்று உருவிலும், சிதம்பரத்தில் விசும்பு அல்லது ஆகாச உருவிலும் சிவன் இருக்கின்றார்: இவை பஞ்ச பூதத்தலங்கள் எனப்படுகின்றன. இவற்றுள் 'சித்' எனப்படும் ஞானம் அல்லது அறிவு நிறைந்துள்ள சிதம்பரம் மிகவும் முக்கியமானதாகும். சைவர்களுக்கும் வைஷ்ணவர்களுக்கும் சிறப்பானதாயிருக்கும், புறத்தே நிகழ்வதே எனினும் அகத்தே முகிழ்த்து வளரும் பக்தியின் முன்னேற்றத்திற்கு ஓர் அடையாளமானதாய் விளங்கும் புனித யாத்திரை வடக்கே அமர்நாத், பத்ரிநாத், கேதார்நாத் என்னுமிடங்களிலிருந்து தொடங்கி, மத்தியில் காசிநாத், மதுராநாத், அயோத்தியாநாத், மேற்கில் சோமநாத், பண்டரிநாத், துவாரகாநாத், கிழக்கில் ஜகன்னாத் என்று சென்று, தெற்கில் வேங்கடநாத், காஞ்சிநாத், ரங்கநாத், ராமனாத் என்று ஊடுருவிப் பரந்து செல்கிறது. யாத்திரையின் முடிவில் பக்தன் அகக் கோவிலுள் நுழைந்து சாசுவதத்தை அல்லது பெருநிலையை அடைகின்றான்.

தீர்த்தங்கள் அல்லது புண்ணிய நீர்நிலைகள் எனப்படுபவை பவித்திரமான தொரு தலத்தின் அல்லது ஒரு மகானின் தொடர்பினால் புனிதமுள்ளதாகக் கருதப்படும் நீரையுடைய அருவிகள் அல்லது குளங்கள் அல்லது ஆறுகள் ஆகும். தெய்வத் தன்மைக்கும் ஆன்மிகத் தூய்மைக்கும் அடுத்தபடியாக இருப்பது பௌதிக அல்லது உடல் தூய்மையாகும். ஒவ்வொரு தலத்திலும் அதனுடன் இணைந்த தீர்த்தம் ஒன்று

இருக்கின்றது; அதில் நீராடினால் நமது பாவங்கள் அகன்று நாம் புனிதமாகின்றோம். எடுத்துக்காட்டாக, திருமலையின் மீதுள்ள ஸ்ரீநிவாஸ க்ஷேத்திரத்தில் சுவாமி புஷ்கரணி என்னும் திருக்குளம் இருக்கின்றது. கடவுளின் சந்நிதிக்குச் செல்வதற்கு முன் எல்லோரும் திருக்குளத்தில் நீராடித் தங்களைத் தூய்மைப் படுத்திக் கொள்ளவேண்டும். வானுலகிலிருந்து இழிந்து விஷ்ணுவின் திருவடிகளின் வழியாக வந்ததனால் கங்கை புனிதமானதாகக் கருதப்படுகிறது. சகரன் என்பவனுடைய பதினாயிரம் புதல்வர்களின் பாவங்களை அகற்றி, அவர்களை சுவர்க்கத்திற்கு அனுப்புவதற்காக பகீரதனின் கடுந்தவத்தினால் கங்கை இவ்வுலகிற்குக் கொணரப்பட்டது. கோதாவரியும் காவிரியும் அங்ஙனமே புனிதமானவையாகும்.

புண்ணியத்தலங்களுக்கு யாத்திரை செய்வது என்பது இறைவனை நோக்கி ஆன்மா செல்லும் யாத்திரையின் அடையாளமே யாகும். நமது வாழ்வின் குறிக்கோளும் நோக்கமும் உண்மை, நலம், அழகு (சத்தியம், சிவம், சுந்தரம்) போன்ற நிலையான மதிப்புகள் அனைத்தின் இருப்பிடமான இறைவனிடம் செல்வதற்கான ஆன்மாவின் யாத்திரையே யாகும். பிறப்பு, வாழ்க்கைநிலை ஆகியவை காரணமாக மனிதனுக்கு ஏற்பட்டிருக்கும் தவறான எண்ணங்களை தலயாத்திரை நீக்கி, இறைவனின் பரமாத்ம தரிசனத்தை நாடுவதற்கு அவனுக்குத் துணை புரிகிறது. சாத்துவிக சகிப்புத் தன்மையையும் பொறுமையையும் பெறுவதனாலும் தனது தேவைகளைக் குறைத்துக் கொள்வதனாலும் வைராக்கியத்தை, அதாவது, தானாக எல்லாவற்றையும் துறப்பது என்னும் நற்பண்பினை அவன் அடைகிறான். புண்ணிய புருஷர்களின் தொடர்பு, ஆன்மிகத் தொண்டிற்கு வழி கோலும் மானிட நேய உறவையும் ஆன்மநேய உணர்வையும் வளர்க்கிறது. எனவேதான், ஆழ்வார்கள், நாயன்மார்கள் மற்றும் ஆசாரியர்கள் ஆகியோர் தங்களிடத்திலும் பிறரிடத்திலும் பக்தியை அல்லது இறையன்பினைத் தோற்றுவித்து வளர்ப்பதற்காக இமயம் முதல் சேது வரை யாத்திரையை மேற்கொண்டனர்; இன்றும் மேற்கொண்டு வருகின்றனர்.

# அத்தியாயம் - 9

## சாதனங்கள்

புருஷார்த்தங்கள் எனப்படும் வாழ்க்கைப் பயன்களுக்கு அல்லது வாழ்வின் முக்கிய லட்சியங்களுக்குச் சமய மதிப்பு ஒன்று உள்ளது. தர்மம் (அறம்), அர்த்தம் (பொருள்), காமம் (இன்பம்) ஆகியவை தம்மில் மட்டுமே இறுதிப் பயன்கள் ஆகா. அவை மோட்ச புருஷார்த்தம் அல்லது வீடு பெறுதல் என்னும் மிக மேலான லட்சியத்திற்கு இட்டுச் செல்பவையே ஆகும். சம்சாரம் என்னும் உலக வாழ்வுடன் ஆன்மாவைப் பிணைக்கும் அவித்தை அல்லது அறியாமையினின்றும், கர்மம் அல்லது வினையினின்றும் கிடைக்கும் விடுதலையே மோட்சம் அல்லது வீடு. ஆன்மா மெய்யாகவே கடவுளைச் சேர்ந்ததே; ஆனால், தான் எங்ஙனமோ பிரகிருதியின் இருபத்துநான்கு தத்துவங்களினாலான உடம்பே என்று அது நினைத்துக்கொண்டு விடுகிறது. இந்த சடப்பொருள் நோக்கு காரணமாக, பிரகிருதியின் அல்லது இயற்கையின் மாறுதல்களுக்கும், எனவே, பிறப்பு—இறப்பு, இன்பம்—துன்பம் என்னும் சுழற்சிக்கும் அது உள்ளாகிறது. நெடுங்காலத்திற்குப் பிறகு, தனது நிலையான வீடாகிய கடவுளை விட்டு விட்டு, சம்சாரத்தில் உழன்று திரிவதை அது உணர்கின்றது; அந்நிலையில், மீண்டும் தனது வீட்டிற்கு- அதாவது, கடவுளினிடம்—திரும்புவதற்கு அது ஏங்குகிறது. ஆன்மாவாகவும் ஆன்மாக்களைக் காப்பாற்றுபவராகவும் இருக்கும் கடவுளும் ஆன்மாவுடன் மீண்டும் ஒன்றியிணைவதற்காக ஏக்கமுறுகின்றார். இக்கருத்தின் நோக்கில்தான், பகவத்கீதையின் உபதேசத்தை யோக சாதனங்களின் நூலாகப் புரிந்துகொள்ள வேண்டும். யோகம் என்பது இறைவனோடு இரண்டறக் கலத்தல் அல்லது கடவுளுடன் ஒன்றியிணைவதே ஆகும். ஒவ்வொரு யோகமுறையும் இந்த ஒன்றியிணைதலையே வலியுறுத்துகிறது. யோகங்களுள் கர்மயோகம், ராஜயோகம், பிரபத்தி உள்ளிட்ட பக்தியோகம் ஆகியவை முக்கியமானவை. பொதுவாக, ஏணியின் படிகளைப் போல் அமைக்கப்பட்டிருப்பவை அவை. ஒவ்வொரு பிரிவிற்கும் அல்லது முறைக்கும் அதற்குரிய சித்தியடையும் வழிவகை ஒன்று உள்ளது. ஒவ்வொரு யோகமும் தனிப்பட்டது, நேரடியாகவே அது முக்திக்கு இட்டுச்

செல்கிறது என்னும் பிறிதொரு கருத்தும் உண்டு. இந்நூலில் ஸ்ரீவைணவக் கருத்து விவரிக்கப்பட்டுள்ளது; கர்மம், ஞானம், பக்தி என்பவை இறைவனிடம் செல்லும் புனித யாத்திரையின் வெவ்வேறு நிலைகள் ஆகும் எனக் கொள்ளப்பட்டுள்ளது. முதலில், விருப்பம் கட்டுப்படுத்தப் படுகிறது; பின்னர், எண்ணமும், இறுதியாக பக்தியாக வெளிப்படும் உணர்ச்சியும் வலியுறுத்தப்படுகின்றன. கடவுளை அடைவதற்கான மிக எளிய வழி பிரபத்தி; ஏன்எனில், கடவுளே வழியாகவும் யாத்திரையின் முடிவாகவும் ஆகின்ருர்; இங்ஙனம், கடவுளின் அருளால் முக்தி அல்லது வீடு அடையப்படுகிறது.

மனத்தை (விருப்பத்தை)ப் புனிதமாக்கும் ஒழுக்கக் கட்டுப்பாடே கர்மயோகம். அதன் நோக்கம் காம்ய கர்மத்தை அல்லதுவிருப்பச்செயலை (அதாவது, குறிப்பிட்ட பயனை அடைய வேண்டும் என்னும் விருப்பத்துடன் செய்யப்படும் செயலை) நிஷ்காம கர்மமாக அல்லது ஆசையற்ற செயலாக (அதாவது, பயன் எதையும் எதிர்பாராது செய்யப்படும் செயலாக, கடமைக் காகவே கடமை என்பதாக) மாற்றுவதுதான். கர்மம் அல்லது செயல் இல்லாமல் எவனும் இருக்க முடியாது; எண்ணம், பேச்சு, வெளிப்படையான செயல் ஆகியவை மூன்றும் அடங்கியது கர்மம். உடலுள்ள ஒவ்வொரு மனிதனும் தனது விலங்கியல் உந்துதலை, அதாவது புலன்—பொருள்களுக்கான ஆசையைப் பின்பற்றுகிருன். புலனின்பங்களை மட்டுமின்றி ஜயம் (வெற்றி), லாபம் (ஊதியம்) மற்றும் பேர், புகழ் ஆகியவற்றையும் அவன் நாடுகிருன். இவை விருப்பச் செயல்கள் எனப் படுகின்றன; ஏன் எனில், புலன்-பொருள்களுக்காகவும் புலன்—இன்பங்களுக்காகவும் மனிதனுக்கு இருக்கும் ஆசையை அடிப்படையாகக் கொண்டிருப்பவை இவை. அத்தகைய குறிக்கோள்கள் ஒழுக்க நோக்கில் மனிதனை உடலுணர்ச்சிகளுக்கு அடிமையாக்கி விடுவதால் அவை விரும்பத்தக்கவைஅல்ல. தவிரவும், ஆசை நிறைவேருது போய் விட்டால் காமம் குரோதத்திற்கு அல்லது சினத்திற்குக் காரணமாகிறது; சினத்திலிருந்து மனக்குழப்பமும் ஒழுக்கச் சிதைவும் உண்டாகின்றன. எனவேதான், கீதை நிஷ்காம கர்மத்தை, அதாவது ஆசையற்ற செயலையே, பயனை நாடாத செயலையே ஒழுக்க வாழ்வின் முறையாக விதிக்கின்றது. கர்மம் அல்லது செயல் செய்யப் படுவதற்குக் காரணம் அதைச் செய்யாமலிருப்பது சாத்தியமில்லை என்பதுதான். ஆனல், பயன்கள் அல்லது விளைவுகள் பற்றிக் கவலைப் படாமல், ஆசையற்ற செயலாக, கடமைக் காகவே கடமை என்பதாக அதைச் செய்யவேண்டும். அப்போது கர்மயோகி புலன்களுக்கு அடிமையாகி விடாமல்

அவற்றை வெற்றி கொண்டவனுக ஆகிறுன். ஒவ்வொரு வனுக்கும் ஒரு வாழ்க்கை நிலே என்பதும் அதைச் சார்ந்த கடமைகள் என்பனவும் உள்ளன. விளேவுகளேப்பற்றி எண்ணு மல் அவற்றைக் கடமைகளாகவே கருதி அவன் வெற்றியோ, தோல்வியோ அடையலாம்; இன்பமோ, துன்பமோ பெறலாம்; அவை பற்றி அவன் கவலேயுறக் கூடாது.

கர்மம் அல்லது செயல் என்பதற்கு மூன்று கருத்துக்கள் உள்ளன. அறிவியல் கருத்தில் ஒவ்வொரு செயலும் ஒரு விளேவே யாகும்; அது ஒரு காரணத்திலிருந்தோ, காரணங் களின் தொகுப்பு ஒன்றிலிருந்தோ ஏற்படுவ தாகும். வருங் காலச் செயலேயும் அது நிர்ணயிக்கிறது. இம்முறையில் அது ஓர் இடையருத தொடராக ஆகிவிடுகிறது. இக் கொள்கை ஊழ் என்பதற்கு வழிகோலுகிறது. 'எவனும் அவனது கடந்தகாலச் செயல்களிலிருந்து தப்ப முடியாது; அவன் ஊழிற்கு அடிமை' என்பதாகும் அது. அதனினும் சற்று உயர்ந்த அல்லது ஒழுக்கவியல் கருத்தில் கர்மம் என்பது கர்த் தாவின் அல்லது செயல் புரிவோனின் செயல் ஆகும்; செயல் புரிவோன் என்னவோ ஒழுக்கவியல் கருத்தில் சுதந்திரமான வன், அதாவது, தனது பற்றுறுதிக்கேற்பத் தனது எதிர்காலத் தைத் தீர்மானித்துக் கொள்ளும் விருப்பமுள்ளவன்; ஆனுல், செயல் நிகழ்ந்து விட்ட பிறகு அதன் விளேவுகளிலிருந்து அவன் தப்பமுடியாது. விஃன விதைப்பவன் விஃனயே அறுக் கிறுன்; முறைமைக்கைம்மாறு (அதாவது, குறிப்பிட்ட செயலி ஞல் ஏற்படும் விளேவு தவிர்க்க முடியாதது) என்னும் ஒழுக்க விதி கணக்கியல் நுட்பத்துடன் திட்டமாகச் செயல்படுகிறது. நல்விஃனகள் ஒருபோதும் வீண்போவதில்லே; அங்ஙனமேதான் தீவிஃனகளும். ஒருவனது ஒழுக்கத்தை அல்லது சிறப்பியல்பை நிர்ணயிப்பது அவனுடைய செயல்களே. ஆனுல், செயலே அவன் நிஷ்காம கர்மமாக, அதாவது, ஆசையற்ற செயலாகச் செய்தால், பயன்களேப் பற்றி அவன் கவலேப்படாததால் அவன் சுதந்திரமாகவே இருக்கிறுன். (விருப்பச்) செயல் - விதி அவ ஃனக் கட்டுப்படுத்துவதில்லே. நற் குணத்தின் பயன் நற் குணமே ஆகும். அதற்கு என்ற உள்ளுறை மதிப்பு என்றுமே உண்டு. நல்லொழுக்கம் அல்லது குணநலன் தானுகவே ஒளி வீசித் திகழ்கிறது. இன்னும் உயர்ந்த கருத்தில், அதாவது, சமயவியல் கருத்தில் ஒவ்வொரு செயலும் இறைவனின் வழி பாடாக அமைகின்றது. அந்நிலேயில், செயலானது கைங்கரி யம் அல்லது கடவுளுக்கு அர்ப்பணிக்கப்பட்ட தொண்டு என்ப தாகச் செய்யப்படுகிறது. கர்மயோகி அப்போது "இறைவா, செய்வது நான் அல்ல, நீயே" என்று சொல்லி, "அனைத்தும்

அவனுக்கு அர்ப்பணம்'' என்று நினைத்து வேலையைக் கடவுள் வழிபாடாகச் செய்கிறான். தனி வாழ்விலும் சரி, சமூக வாழ்விலும் சரி ஈச்வரனே மெய்யான கர்த்தா அல்லது செயல்புரிவோன். உடல், புலன்கள், மனம் மற்றும் அனைத்திலும் மேலாக ஆன்மா ஆகியவை எல்லாமே செயலுக்குக் காரணமாகின்றன என்பது உண்மையே; ஆனால் இறைவனே இறுதிச் சாதனம்; லட்சியமும் அவரே; சாதனமும் அவரே. இக்கருத்தின்படி, கர்மயோகம் முக்திக்கு நேரடியான வழியாகின்றது; ஆனால், அது சமய வாழ்வின் இறுதி நிலையில்தான் முதிர்ச்சியடைந்து கிடைக்கிறது.

சித்தவிருத்தி நிரோதம் அல்லது மனக்கட்டுப்பாடு என்பதே ராஜயோகம்; பிரம்மத்தை அல்லது கடவுளை அடைவதற்கான ராஜமார்க்கம் எனப்படும் நேர் வழியாகும் அது. பொதுவாக மனம் சலனமுள்ளது. சிதறிப்போகும் தன்மையுடையது; யோகத்தின் நோக்கம் அதைச் சிதறிவிடாது தடுத்து, கடவுளிடத்தில் அதை ஒரு முனைப்படுத்துவதுதான். எனவே, அது ஓர் உளவியல் முறையாகும்; அது கர்மயோகத்தின் கூறான ஒழுக்கமுறையினின்றும் வேறானது. ராஜயோகத்தின் எட்டு நிலைகள் யமம் (புலனடக்கம் அல்லது ஆசையடக்கம்), நியமம் (மனத்தைப்பற்றற்ற சமநிலையில் வைத்தல்). ஆசனம் (ஆசனங்கள் அல்லது தனிப்பட்ட இருக்கை நிலைகள் மூலம் உடற்கட்டுப்பாடு), பிராணாயாமம் (சுவாசத்தை அடக்கியாளுதல் அல்லது மூச்சுக்கட்டுப்பாடு), பிரத்தியாகாரம் (மனத்தை ஒரு வழி நிறுத்தல்), தியானம் (பரம்பொருள்பற்றிய ஒருமித்த சிந்தனை அல்லது இடையறாத அகநினைவு), சமாதி (உணர்வு நிலை கடந்த ஓர் அமைதி நிலையில் கடவுளிடத்தில் ஐக்கியப் படுதல்) ஆகியனவாம். முதல்நான்கு நிலைகளும் உடலைத்தூய்மைப்படுத்துவதையும் மூச்சுக் கட்டுப்பாட்டையும் குறிக்கின்றன. அடுத்த நான்கு நிலைகளும் மனக்கட்டுப்பாட்டைக் குறிக்கின்றன. இறுதியில், மனம் விரிவு பெற்று, சமாதி நிலை எய்தி, சாந்தி அல்லது அமைதியை அடைகிறது. இந்த விரிவு பௌதிக நோக்கிலும் மனவியல் நோக்கிலும் இருவகைகளில் விளக்கப் படுகின்றது. உடலின் மையங்களில், சுழுமுனையின் (அல்லது முள்ளந்தண்டு வடத்தின்) அடிப்பகுதியிலுள்ள மூலாதாரத்திலிருந்து மூளையிலுள்ள சகஸ்ராரத்திற்கு உயர்த்தப்படும் ஆன்மிக ஆற்றலின் ஏற்றமாகும் அது. (மனித உடலில் உள்ள ஆதார இடங்கள் ஆறு 1. மூலாதாரம்; பிறப்புறுப்பிற்கும் குதத்திற்கும் இடையே இருப்பது, குண்டலினி சக்தியின் இருப்பிடம். 2. சுவாதிஷ்டானம்: பிறப்புறுப்பிற்கும் கொப்பூழுக்கும் இடையே இருப்பது. 3. மணிபூரகம்: கொப்பூழிடத்தில்

சுவாதிஷ்டானத்தின் மேலாக இருப்பது. 4. அநாகதம்: மணி பூரகத்திற்கு மேல் இதய வெளியில் இருப்பது. 5. விசுத்தி: அடி நாவின் இடம். 6. ஆஞ்ஞை: இருபுருவங்களுக்கிடையில் நெற்றியில் இருப்பது. ராஜயோக முறையினால் தூங்கும் குண்டலினி சக்தியை எழுப்பி, படிப்படியாக ஆதார இடங் களுக்கு உயர்த்தி இறுதியில் மூளையிலுள்ள சகஸ்ராரம் என்னும் இடத்திலுள்ள சிவத்துடன் சேர்க்கும்போது மனிதன் மோட்ச நிலை அடைகிறான். இந்த நிலை ஒவ்வொன்றிலும் அதற்குரிய சித்திகள் உள்ளன. இதைப் பயிலுபவர்கள் உடல் நலம், நீடாயுள், மன ஒடுக்கம், மன அமைதி ஆகியவை பெற்றுத் திகழுவார்கள்). மனவியல் நோக்கில், மிகத் தாழ்ந்த நிலையி லிருந்து மிக உயர்ந்த நிலைக்கு ஏற்படும் உணர்வு—விரிவு ஆகும் அது. உறையுணர்வு நிலையிலிருந்து அரையுணர்வு அல்லது அடியுணர்வு நிலைக்கும், உணர்வு நிலையிலிருந்து சமாதி என்னும் உயர் - உணர்வு நிலைக்கும் அல்லது உணர்வு கடந்த நிலைக்கும் இவ்விரிவு நிகழ்கின்றது. யோகி பிராகாமியம் அல்லது வேறு உடலினுள் புகுதல் (கூடுவிட்டுக் கூடு பாய்தல்), இயற்கைச் சக்திகளின் மீது கட்டுப்பாடு போன்ற சித்திகள் எனப்படும் அற்புத சக்திகளைப் பெறமுடியும். (சித்திகள் எட்டு: 1. அணிமா; அணுவைப்போல் சிறிதாதல். 2. மகிமா; மேருவைப்போல் பெரிதாதல். 3. இலகுமா; காற்றைப்போல் இலேசாதல். 4. கரிமா; பொன்போலக் கனமாதல். 5. பிராப்தி; எல்லா வற்றையும் ஆளுதல். 6. வசித்துவம்; அனைத்தையும் வசப் படுத்தல். 7. பிராகாமியம்; கூடு விட்டுக் கூடுபாய்தல். 8. ஈசத்துவம்; விரும்பியதை எல்லாம் செய்து முடித்து அநு பவித்தல்). ஆனால், அத்தகைய சித்திகள் ஆன்மிக வாழ்விற் கும் கடவுளுடன் கலப்பதற்கும் உண்மையாகவே முட்டுக் கட்டைகள் தாம்; எனவே, அவை விலக்கப்படவேண்டும். இந்த யோகத்தின் முக்கியமான மதிப்பு ஆன்ம ஞானத்தையும் (அல்லது தன்னறிவையும்) ஆன்ம மேம்பாட்டினையும் (அல்லது தன்னுயர்வையும்) அடைவதற்கான வழியை நமக்கு அது கற் பிக்கிறது என்பதாகும்.

ஞானயோகம் ஆன்மாவின் தன்மையினையும் பிரம்மத் துடன் அதற்குள்ள தொடர்பையும் ஆராயும் தத்துவமுறை யாகும். அது வெறும் அறிவுமுறை விசாரணை மட்டுமின்றி, விவேகம் (கூரறிவு அல்லது பகுத்தறிதிறன்), வைராக்கியம் (பற்றின்மை), அப்பியாசம் (பயிற்சி) என்பனவற்றை ஆதார மாகக் கொண்ட ஆன்மிக ஆய்வுமாகும். விவேகம் அல்லது பகுத்தறி திறன் என்பதன் உதவியினால் யோகி அல்லது தத்துவ வியலறிஞன் எப்போதும் நிரந்தரமாக இருக்கும் ஆன்மாவை

யும் அழியும் இயல்புள்ள உடலையும் வேறுபடுத்திப் பகுத்தறிந்து கொள்ளுகிறான். வைராக்கியம் அல்லது பற்றின்மை துணை நிற்க, தான் வெறும் உடலே என்னும் தவறான, பொய்யான உணர்ச்சியை ஒதுக்கி, அகங்காரம் அல்லது அகந்தை என்பதை விட்டுவிட முயலுகிறான். அப்பியாசம் என்பது ஆன்ம சிந்தனைப் பயிற்சி. முடிவில், அவன் ஆன்ம ஞானம் அல்லது தன்னறிவு பெற்று, சாந்தி அல்லது அமைதி அடைகிறான். ஆனால், அத்தகைய ஞானம் ஓர் இடைநிலையே தவிர, அதுவே இறுதி நிலை அன்று. அது பிரம்ம ஞானம் அல்லது கடவுள்-அறிவு என்பதற்கு இட்டுச் செல்வதாக இருக்கவேண்டும். ஞான யோகத்திற்கு அத்துவைதம் வேறொரு பொருள் கூறி, யோகங்களுள் மிக உயர்வான இடத்தை அதற்கு அளிக்கிறது. ஜீவனும் ஈச்வரனும் ஒன்றே என்றும், இந்த முற்றொருமையின் உணர்வே ஞானம் என்றும் அது பகர்கிறது. ஆனால், சமயப் பாதையில் ஞானத்தைவிடப் பக்தி உயர்ந்த தாகும்.

பக்தியோகம் பகவானிடம் அல்லது கடவுளிடம் அன்பு கொள்வதாகும். கடவுள் குணம் கடந்தவர் அல்லது குணத்திற்கு அப்பாற்பட்டவர், அதாவது, ஆள் சார்பு நிலை கடந்தவரே அல்லாது, நிர்குணமானவரோ அல்லது குணமில்லாதவரோ, அதாவது, ஆள்சார்பு நிலை இல்லாதவரோ, அரூபமானவரோ அல்லது உருவமில்லாதவரோ அல்ல. ராமாநுஜர் பிரம்ம சூத்திரங்களுக்கு எழுதிய விரிவுரையான ஸ்ரீபாஷ்யத்தின் தொடக்கத்தில் கூறுவது போல, பிரம்மம் பிரபஞ்சத்தின் சிருஷ்டி (படைத்தல்), ஸ்திதி (காத்தல்), சம்ஹாரம் (அழித்தல்) ஆகியவற்றைச் செய்பவர்; அவரது ஆட்சி ஆன்மாக்களைக் கடைத் தேற்றுவதற்கான அருள் திருவிளையாடல் அல்லது அன்புத் திருவிளையாடல். உபநிஷத்துக்கள் கூறும் பிரம்மம் தயையாக அல்லது அன்புருவாக அமைந்திருக்கும் தெய்வமான ஸ்ரீநிவாஸன். பக்தியின் பயிற்சி ஏழு நிலைகளால் ஆகியது: விவேகம், விமோகம், அப்பியாசம், கிரியை, கல்யாணம், அநவசாதம், அநுத்தர்ஷம். சுருக்கமாக விளக்கினால், சத்வ குணமுள்ள உணவை உட்கொள்ளுதல், புலன்-பொருள்களுக்கான ஆசைகளை அகற்றுதல், கடவுள் சாந்நித்யத்தைப் பயிற்சி செய்தல், சாத்திரங்களில் விதிக்கப்பட்டுள்ள கடமைகளைச் செய்தல், வாய்மை, விருந்தோம்பல் முதலிய நற்பண்புகளைக் கடைப்பிடித்தல், பெருமிதம், வாட்டம் போன்ற எதிலும் எல்லைநிலை உணர்ச்சிகள் இல்லாதிருத்தல் ஆகியனவாம். பிரம்மத்தை மூலமந்திரங்கள் வடிவில் ஸ்ரீபதியாக, லட்சுமி நாயகனாகத் தியானம் செய்வதில் அல்லது உபாசனை செய்வதில் பக்தன் குருவினால் அறிமுகப்படுத்தப்படுகிறான். அப்போது

பக்தியானது பரமபக்தியாகத் தீவிரமடைந்து நம்மாழ்வாருக்கு நிகழ்ந்ததுபோல், தெய்வப் பிணைப்பிற்கான வேட்கையாகிறது. பக்தன் அநுமனைப் போல் கடவுளின் சேவகனாகவோ அல்லது தாசனாகவோ, அர்ஜுனனைப்போல் கடவுளின் நண்பனாகவோ இருக்கலாம்: யசோதை அல்லது பெரியாழ்வார் தெய்வக் குழந்தையான கிருஷ்ணனிடம் செய்ததைப் போல் தாயன்பு கொள்ளலாம்; அல்லது ஆண்டாள் செய்ததைப் போல நாயகன் பால் நாயகிக்குள்ள காதலுக்காக அவாவுறலாம்.

ஞானத்தினால் விளக்கமுறும் அன்பாகிய பக்தியோகம் கடினமான ஒரு வழிமுறையாகும். இருபிறப்புள்ளோர் மட்டுமே பின்பற்றக்கூடியது. பிரபத்தி எனப்படும் சற்று எளிதான முறை ஒன்றை ஸ்ரீவைஷ்ணவம் வகுத்திருக்கிறது. பகவான் மீட்புக் கருணை வடிவான ஸ்ரீபதி அல்லது திருவின் நாயகன். ராமனாகவும் கிருஷ்ணனாகவும் அவர் அவதரித் திருக்கிறார். எல்லா ஜீவன்களையும் மீட்டருளும் அவர் சர்வ லோகசரண்யர் அதாவது, உலகனைத்திற்கும் புகலாக விளங்கு பவர். ''அறமுறைகள் அனைத்தையும் ஆராய்வதைத் துறந்து விட்டு என்னையே தஞ்சம் அடை. எல்லாப் பாவங்களினின் றும் உன்னை நான் விடுவிக்கிறேன் '' என்னும் பிரபத்தியின் பிரசித்தமான வாசகத்தில் கூறியுள்ளபடி, அவர் ரட்சகர். அதாவது, காப்பவர் அல்லது சரண்யர். பிரபத்தி யோகத் திற்கு ஆறு நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன. இந்த யோகம் பொதுவாக, கடவுளின் காப்பாற்றும் கருணையிலும், பச்சாத்தாபம் அல்லது தன்மறுக்கம், அதாவது, செய்தகற் கிரங்கி உளம் நைவுறுதல், பணிவு, உள்ளத் தூய்மை ஆகிய வற்றோடுகூட முழுவதாகச் சரணடைவதிலும் உள்ள அசைக்க முடியாத நம்பிக்கையாகும். தானாகவே சரண் அடைவது என்பது மட்டுமே ஒரு காரணம் ஆகிவிடுவதில்லை. ஆதலால், கடவுளால் தேர்ந்தெடுக்கப்படுபவனுக்கே அவரது திருவருள் கிடைக்கிறது. எது எவ்வாறாயினும் பிரபத்தியானது சாதி, மதம், பால், தொழில் எதையும் சாராது அனைவருக்கும் ஏற் பட்ட ஒன்றாகும்; ஆகவே, அது அகில முழுவதும் அளாவிய தாகும். பிரபத்தியின் முக்கிய மந்திரம் 'த்வயம்' எனப்படும்; அதாவது, திருமால், திருமகள் இருவரின் தாள்களிலும் தஞ்சம் அடைவதாகும். பிரபத்தி முறையின் மிகச் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குபவர் ஸ்ரீவைஷ்ணவத்தின் மிக உயர்ந்த பிர பன்னரான நம்மாழ்வார்; ஸ்ரீயை அல்லது திருமகளை இதயத் திலே கொண்ட ஸ்ரீநிவாஸனின் கருணைக்குத் தம்மை முழுதும் ஒப்படைத்துக் கொண்டவர் அவர். இந்தியாவின் எல்லாச் சமயப் பிரிவினரும் புனிதமான திருமலையில் வீற்றிருக்கும்

தெய்வ தயை அல்லது இறையருள் வேண்டிவரும் யாத்திரிகர் களே. திருமாலுக்குத் தொண்டு செய்வதே சமயத்தின் முக்கிய மான வழிவகையும் குறிக்கோளும் ஆகும் என்பதை வலியுறுத் தும் மத்வரைப் பின்பற்றுவோருக்கும் திருமலை புனிதமான தாகவே இருக்கின்றது.

சைவர்கள் தங்களது உயர் கடவுளான சிவனை அன்புமய மானவர் என வரையறுத்து, அவரை அடைவதற்கு சரியை (கடவுளைக் கோவிலில் வைத்து வழிபடுதல், ஆலயத்திற்கும் அடியார்களுக்கும் தொண்டு செய்தல்), கிரியை (கடவுளை ஆகம விதிப்படி தொழுதல்), யோகம் (புலனடக்கம், தியானம் ஆகிய வற்றுக்கான பயிற்சி), ஞானம் (கடவுள் தன்மை, முக்தி ஆகியவை பற்றிய மெய்யறிவு) என்னும் நான்கு வழிகளைக் குறிப்பிடுகின்றனர். அவை வேதாந்தத்தில் குறிப்பிடப்பட்ட நான்கு யோக முறைகளை ஒத்திருக்கின்றன. சங்கரரைப் பின் பற்றுவோர் கூட இஷ்ட தெய்வம் அல்லது சொந்தக் கடவுள் அல்லது அவரவர் விரும்பும் இறைவடிவம் ஒன்று இருப்பதை யும், அக்கடவுளது அருளின் தேவையையும் ஏற்றுக்கொள்கின் றனர். ஆக, இந்துக்கள் அனைவரும் சொந்தக் கடவுள் வடி வில் பிரம்மத்தின் பால் நம்பிக்கைக் கொண்டுள்ளனர். அடுத்த அத்தியாயத்தில் விவரிக்கப்படும் மோட்சம் அல்லது சாயுச் சியம், அதாவது, இறைவனோடு இரண்டறக்கலத்தல் என்பதை அடைய, குருவின் துணை கொண்டு அவர்கள் இறையருளை நாடுகின்றனர்.

அத்தியாயம் - 10

# புருஷார்த்தங்கள்: முக்தி

ஒவ்வொரு விலங்கும் ஓர் இலட்சியத்தை அல்லது வாழ்க்கைப்பயனை நோக்கி இயங்குகிறது; ஆனால், மனிதனுக்கு மட்டுமே அந்த லட்சியத்தைப் பற்றிய உணர்வு இருக்கின்றது. உய்த்துணரும் ஆற்றல் அல்லது பகுத்தறிதிறன் (விவேகம்) அவனுக்கு உள்ளது. மேலும், அவன் ஒழுக்கவியல் சுதந்திரமுள்ளவனாகவும் செயல்புரிவோனாகவும் (கர்த்தாவாகவும்) இருக்கிறான். லட்சியம் அல்லது நோக்கத்தைப்பற்றி அவனுக்கு இருக்கும் உணர்வே புருஷார்த்தம் அல்லது வாழ்க்கைப் பயன் எனப்படுகிறது; அவனது வாழ்வின் குறிக்கோள் அல்லது முடிவு அது. மனிதனின் பௌதிகத் தேவைகள் உணவு, நீர், தீ, காற்று, மற்றும் உடை ஆகியவை; அதாவது, அவனது உடலை உயிருடன் வைத்துப் பேணுவதற்குத் தேவைப்படுபவை அவை. இன்பங்களிலும், அவை தொடர்ந்து இருக்க வேண்டும் என்பதிலும் அவன் நாட்டம் கொள்கிறான்; துயரங்களைத் தவிர்க்க அவன் முற்படுகிறான். இந்து மதம் வாழ்க்கையின் முக்கியப் பயன்கள் அல்லது பேறுகள் அனைத்தையும் ஆராய்ந்து, அவற்றை நான்கு பொதுவகைகளாகப் பகுத்துள்ளது. அவை தர்மம் (அறம்), அர்த்தம் (பொருள்), காமம் (இன்பம்), மோட்சம் (வீடு) என்றழைக்கப்படுகின்றன. அவற்றை அறவியல், பொருளாதார, இன்பம் நாடும், சமயக் குறிக்கோள்கள் எனக் கூறலாம். எனினும், அவை ஒன்றிலிருந்து ஒன்று தனித்திருப்பவை அல்ல; அவை அனைத்தும் வாழ்வின் மேலான பயனான மோட்சத்திற்கு இட்டுச்செல்ல வேண்டும்.

வாழ்வின் அறவியல்பயன் தர்மம் அல்லது நன்னெறியாகும். எவருக்கும் ஒழுக்கத்திலிருந்து விலக்கு என்பது கிடையாது. ஆகையால், இந்து மதம் வாழ்க்கைப் பயன்களுள் முதலாவது இடத்தை நன்னெறி வாழ்வு முறைக்கு அளித்திருக்கிறது. நன்னடத்தையே முழுவாழ்வு; பிறவாழ்க்கைக் குறிக்கோள்களும் நெறியுடன் கூடியனவாகவே இருக்கவேண்டும். புத்தமதமும் ஜைனமதமும் கூட நன்னெறி வாழ்வுமுறையின் தேவையை வலியுறுத்துகின்றன. ஆனால், குணநலனுக்கு

கடவுள்பற்றில் அல்லது இறைமையில்தான் இறுதியான பொருள் இருக்கின்றது என்பதை அவை கண்டு கொள்வது மில்லை. மெய்ப்பொருள் நோக்கில் உணருவதுமில்லை. கடவுள் இயல்பாகவே நல்லவர்; எனவே, மிக உயர்ந்த நலம், சாத்திரத்தின் வாயிலாகவே அடையப்படவேண்டிய இறைமையே ஆகும். எனவே, ஒழுக்கம் அல்லது அறம் என்பது சமயத்தில், அல்லது, செய்தே தீரவேண்டிய கடமைகளை விதிக்கும் சாத்திரத்தில்தான் முழுக்கருத்துடன் நிறைவு பெறுகிறது. அவை விதிகள் எனப்படுகின்றன. செய்யும் செயல்கள் அனைத்திலும் அநுசரிக்கப்படும் நன்னெறியே அவ்விதிகள். தர்மம் என்பது செயலிலே நன்னெறி; அது கடமையின் சாரம். பெற்றோர், ஆசாரியர், ஞானியர் ஆகியோரிடம் பெருமதிப்பு, வாய்மை, ஈகை, துணிவு, எல்லாப் பிராணிகள்பாலும் அன்பு ஆகியவை அனைத்தும் தர்மம் என்பதில் அடங்குவதாகும். பிரம்ம யஞ்ஞம் அல்லது வேதம் ஓதுதல், தெய்வயஞ்ஞம் அல்லது கடவுள் வழிபாடு, பித்ருயஞ்ஞம் அல்லது இறந்த மூதாதையர்களுக்கு உணவு இடுதல், பூதயஞ்ஞம் அல்லது பிராணிகளுக்கு உணவு இடுதல், மனுஷ்ய தர்மம் அல்லது விருந்தோம்பல் என்னும் பஞ்ச யஞ்ஞங்களை அல்லது ஐவகை வேள்விகளைச் செய்வதும் அதில் சேர்ந்ததே. அது பிரபஞ்ச ஒருமைப்பாட்டினையும் பரஸ்பர உதவியின் தேவையையும் வெளிப்படுத்துகிறது. இக்கடமைகளைச் செய்யா திருத்தல் அதர்மம் ஆகும்; அதனால் பாவம் அல்லது தீவினைப்பயன் ஏற்படுகிறது. தீமையும் பாவமும் அதர்மத்தில் அடங்கியவை; ஒழுக்க நோக்கில் அது தீமை; சமய நோக்கில் தெய்வ விதியை மீறுவதால் அது பாவம். தர்மச்செயல்களைப் புரிவதனால் தர்மத்தின் பால் பற்று அல்லது நன்னெறிப் பாங்கு பெறப்படுகிறது. இப்போது மனிதன் தருமனைப்போல் தர்மவானாக ஆகிறான்; தர்மத்தின் அவதாரமான ராமனைப் போல அவன் இருக்கிறான். சத்தியம் (வாய்மை), பிரதிஞ்ஞையில் உறுதி (சூளுறுதி), எல்லாப் பிராணிகளினிடத்தும் அன்பு, தன்னடக்கம் ஆகியவற்றை வாழ்க்கையில் நேரடியாக அநுசரித்துக் காட்டியவர் ராமர். அர்த்தம் (பொருள்), காமம் (ஆசை) இரண்டையும் தர்மத்திற்கு (அறத்திற்கு)க் கீழ்ப்படிந்திருக்குமாறு செய்து காட்டியவர் அவர். இவ்வாறாக, கடமைக்காகவே கடமையைச் செய்வது என்பதன் சாரமே தர்மம் அல்லது அறம்.

அர்த்தம் (பொருள்) என்பது விரும்பப்படுவதும் விரும்பத்தக்கதுமான ஒரு வாழ்க்கைப்பயன் ஆகும், கல்வியை முடித்த மாணவன் இல்லற வாழ்வை (கிருஹஸ்த வாழ்வை) மேற்கொள்ளவேண்டும். அவன் தனது குடும்பத்தையும் பிறரையும்

காப்பாற்றும் பொருட்டுக் கடினமானதும் நேர்மை யானதுமான வேலையைச் செய்து பிழைக்கிருன். செல்வம் தன்னிலேயே நிறைவு பெறும் ஒரு குறிக்கோள் ஆகிவிடாது; செல்வத்திற்காகவே செல்வத்தைத் திரட்டிக் குவித்துப்பதுக் கும் கருமி நெறியற்றவன், சமூக விரோதி என்று பழிக்கப்படுவது முற்றிலும் சரியே ஆகும். உலகம் முழுவதும் ஒன்றே ஆதலால், இல்லறத்தான் விருந்தோம்பும் பண்புடையவனுகவும், இல்லா தோர்க்கு உதவி புரிபவனுகவும், தேவர்கள் மற்றும் பித்ருக்கள் பால் தனக்குள்ள கடமையை ஆற்றுபவனுகவும் இருக்கவேண் டும். ஒவ்வொரு கடமையும் இறுதி நிலையில் கடவுளுக்குச் செய் யப்படும் காணிக்கையே ஆதலால், தனிப்பட்ட அல்லது சமயச் சார்புள்ள அல்லது லௌகிகமான கடமைகளுக்கும் சிறப்பான அல்லது ஆன்மிக அல்லது வைதிகமான கடமைகளுக்கும் உண் மையில் வேறுபாடே கிடையாது. கர்மங்கள் சந்தியாவந்தனம் போன்ற, நாள்தோறும் செய்யப்படும் நித்திய கர்மங்கள், பித்ருக்களுக்குச் பெய்ய வேண்டிய சிராத்தம் போன்ற, அவ் வப்போது செய்யப்படும் நைமித்திக கர்மங்கள், விருப்பத்தின் பேரில் செய்யப்படும் காம்ய கர்மங்கள் என மூவகைப்படும். முதல் இரண்டு வகைகள் செய்தே தீர வேண்டியவை: மூன்ரு வதைச் செய்வதற்குக் கட்டாயம் ஏதுமில்லை: அதைச் செய் வதோ செய்யாமலிருப்பதோ நமது விருப்பத்தைப் பொறுத் தது.

காமம் என்பது வாழ்வின் இன்பங்களை நுகர்வதாகும்: வாழ்க்கைப் பயன்கள் நான்கினுள் மூன்ருவதாக வைக்கப்பட் டிருப்பது அது. ஒருவன் குழந்தைகளையோ, உடல் நலத் தையோ, செல்வத்தையோ பெற விரும்பினுல், அவன் தேவர் களை மகிழ்விக்கும் பொருட்டுக் குறிப்பிட்ட சில கர்மங்களை அல்லது வேள்விகளைச் செய்து, தான் விரும்பிய வரங்களைப் பெறுகிருன். மக்கள் வரங்களின் பொருட்டுக் கடவுளை வேண்டு கின்றனர். கடவுள் அவர்களின் வேண்டுகோள்களை ஏற்று அருள் புரிகின்ருர். பொதுவாக, காம்யகர்மங்கள் அல்லது விருப்பச் செயல்கள் என்பவை இங்கும் சுவர்க்கத்திலும் வாழ் வின் இன்பங்களை நுகரும் பொருட்டுச் செய்யப்படுபவையாகும். ஆனுல், அவை அற்பமானவை, நிலையற்றவை; எனவே, நல் லறிவுள்ளவன் இவ்வின்பங்களைத் துறந்து, மோட்சத்தில் மட் டுமே கிடைக்கும், என்றும் அழியாத பேரின்பத்தையே நாட வேண்டும்.

கைங்கரியம் அல்லது எல்லா ஜீவன்களுக்கும் செய்யும் சமூக, ஆன்மிகத்தொண்டு என்பது கடவுள் வழிபாட்டு

நிலைக்கு உயர்த்தப்பட்ட ஊழியமாகும். ஆழ்வார்கள், மற்றும் ஆசாரியர்கள் போன்ற சிறந்த இறையடியார்கள் கடவுளை எல்லாவற்றிலும், கடவுளில் எல்லாவற்றையும் நாடிக் கண்டனர் ஆதலால், சேவை அல்லது தொண்டு என்பதை கைங்கரியம் என்னும் மேல் நிலைக்கு உயர்த்தினர். கடவுளிடம் தன்னை ஒப்புவித்தல் அல்லது புகல் அடைதல் என்பது மிக உயர்ந்த வாழ்க்கைப் பயன் அல்லது நன்னடத்தையின் மிக மேலான குறிக்கோள் ஆகும். கடவுள் சர்வகாமன் அல்லது எல்லோரும் விரும்புபவன், சர்வசரண்யன் அல்லது அனைவருக்கும் புகல் ஆதலால், இறைவனே எல்லா வாழ்க்கைப் பயன்களின் நிறைவாகின்றார்.

சாதனங்களை அல்லது யோகங்களைப் பின்பற்றி முக்தியை நாடுபவன் இறுதியில் அதைப் பெறுகிறான். மோட்சம் என்னும் சொல் அறியாமையினாலும் (அவித்தையினாலும்) கர்மத்தினாலும் ஏற்படும் வாழ்க்கைக் கேடுகளிலிருந்து அல்லது சம்சாரத்திலிருந்து பெறும் விடுதலையைக் குறிக்கிறது. உடலோடு அமைந்துள்ள அல்லது கட்டுண்ட ஜீவனுக்கு பிறப்பு-இறப்புச் சுழற்சியினின்றும் கிடைக்கும் விடுதலையாகும் அது. விடுபட்ட ஜீவன் இந்த சம்சார உலகிற்கு மீண்டும் வருவதில்லை ஆதலால், முக்தி என்பது எதிர்மறைப்பொருள் கொண்டதாகும்; ஆனால், விடுபட்ட ஜீவன் காலத்தையும் வெளியையும் கடந்த பிரம்மத்தின் உலகிற்குச் செல்லும் ஏற்றத்தை அல்லது உயர்வை அது குறிப்பதால் அதற்கு மெய்ம்மை சார்ந்த பொருள் ஒன்றும் உண்டு. எதை அறிந்தால் எல்லாம் அறியப்பட்டதாகிறதோ அந்த பிரம்மத்தை அடைவதே மோட்சம். ராமானுஜரின் கொள்கைப்படி, உபநிஷத்துக்கள், பிரம்ம சூத்திரங்கள், கீதை ஆகியவற்றைப் பின்பற்றி உடலிலிருந்து விடுதலை பெற்ற ஜீவன் தெய்விக வழிகாட்டி ஒருவர் வழிகாட்ட, அர்ச்சிராதி மார்க்கம் அல்லது தேவயானம் என்னும் பாதைவழியாக, இவ்வுலகிற்கும் தேவர்களின் உலகிற்கும் அப்பாற்பட்ட வைகுண்டத்திற்குச் சிறப்புடன் உயரச் செல்கிறது. உடல் மரித்தவுடன் மோட்சத்தை நாடி முயலும் மனிதனுக்கு பிரம்ம நாடியின் காட்சி தென்படுகிறது. செல்லும் பாதையின் மீது இந்த நாடி ஒளி வீசச் செய்கிறது; இந்திரன், சூரியன், பிற தேவர்கள் ஆகியோரின் பிரகாசமான பிரதேசங்கள் வழியாக ஜீவன் ஏகி, விரஜா ஆற்றைக் கடந்து, அதற்கப்பால் சென்று, பேருயர்வுடன் வைகுண்டம் அடைகிறது. விரஜா ஆற்றின் புனித நீரில் நீராடுவதால் அவித்தை (அறியாமை), கர்மம்(செயல்), சூட்சும சரீரம் (நுண்ணுடல்) ஆகியவற்றிலிருந்து ஜீவன் விடுவிக்கப்படுகிறது. பின்னர், வைகுண்டம் அடைந்து, நேரடியாகப் பிரம்

மத்தைக் கண்டு, அதனுடன் ஒன்றி, நிரந்தரமான அழியாத பேரின்பத்தை அது நுகர்கிறது. ஜீவனின் இந்த ஏற்றத்திலும் சாதனையிலும் பயன்படுத்தப்பட்டுள்ள உபநிஷத்துக்களின் மொழி காலம், இடம், உணர்ச்சி போன்ற பூவுலக மொழியாக இருப்பினும், மனிதனின் விவரணைக்கு அப்பாற்பட்டது அது; அவனால் விவரிக்க முடியாதது அது. அங்ஙனமேதான் வைகுண்டமும் காலத்திற்கும் இடத்திற்கும், உள்ளத்திற்கும் உடலுக்கும் அப்பாற்பட்டதாக இருக்கின்றது; அது நித்திய மானது அல்லது என்றும் இருப்பது, எப்போதும் சுயம்பிரகாச மாய்த் திகழ்வது, ஆனந்த மயமானது. முக்தன் அல்லது விடு தலையடைந்தவன் அதனுடன் ஒன்றிப்போய், அழிவற்றவனாக ஆகி, என்றும் ஆனந்தமயமானவனாக இருக்கிறான். இந்த கர்ம லோகத்திற்கு அல்லது செயலுலகிற்கு அவன் மீண்டும் திரும்பு வதில்லை; பிரகிருதியினாலோ காலத்தினாலோ அவன் கட்டுப் படுவதில்லை. ஆனந்த நிலையில் அவன் பிரம்மத்துடன் ஒன்றிப் போய் விடுகிறான்; ஆயினும், அவன் தனித்தும் இருக்கிறான். முக்தர்கள் அல்லது விடுதலையடைந்தோர் ஆன்மிக நோக்கில் ஒற்றுமையானவர்கள்: அவர்கள் சுதந்திரமாயிருப்பதால், அவர்களுடைய விருப்பங்கள் உடனுக்குடன் நிறைவேறி விடு கின்றன, எவ்வகை அகந்தை எண்ணமுமின்றி அவர்கள் இறை வனுக்கும் ஒருவருக்கொருவருக்கும் தொண்டு செய்யலாம்: கட் டுண்டு கிடக்கும் பிறரை ஜீவன் முக்தர்களாக ஆக்க ஆசைப் படும் ஆண்டவனின் மீட்பு நோக்கத்தை நிறைவேற்றலாம். மொத்தத்தில், வைகுண்டத்தின் பேரின்பத்தை வார்த்தை களில் வடிக்க இயலாது. அதை அநுபவிப்பவனால்தான் விளக்க முடியும். மத்வரைப் பின்பற்றுவோர் நல்லதிலிருந்து தீயதைப் பகுத்துப் பிரித்து, நல்ல ஜீவன் அல்லது விஷ்ணுபக்தன் வைகுண்டம் சென்று அங்கே எப்போதும் பரமனுக்குத் தொண் டாற்றி வருகிறான் என்றும், தீயோர் நித்திய நரகத்தில் தள்ளப் படுகின்றனர் என்றும் துணிவுடன் உரைக்கின்றனர். உயர்நலம் சிவனே என்னும் நம்பிக்கையுள்ள சைவர் இறையடியார்களின் வழியைப் பின்பற்றி, இறந்தபின் சிவலோகத்தை அல்லது கைலாயத்தை அடைகின்றனர். முக்தி அல்லது விடுதலை இவ் வாழ்விலேயே சாத்தியமானது என்றும் அத்துவைதிகள் கூறு கின்றனர். எனினும், விஷ்ணுலோகம் சென்று படிப்படியாக விடுதலை பெறுவதையும் அவர்கள் ஏற்றுக்கொள்கின்றனர்.

ஆக, எல்லா இந்துக்களுக்கும் நான்கு யோகங்களிலும், இறையருள் துணையுடன் சம்சாரத்திலிருந்து விடுதலை பெறுவ திலும் ஆழ்ந்த நம்பிக்கை இருக்கின்றது.

## அத்தியாயம் - 11

# சமயமும் சமுதாயமும்

மனிதன் தனிப்பட்ட முறையில் ஞானத்தை அல்லது பேரறிவை நாடுபவன் என்பதோடு கூட அவன் கூட்டு வாழ்வை அவாவுகிற ஒரு விலங்கும் ஆவான். அவன் நான்கு புருஷார்த்தங்களை அல்லது பேறுகளைத் தேடுகிறான்; சமுதாய விலங்கு என்னும் வகையில் சமுதாயத்திலுள்ள ஏனையோர் அனைவரும் செய்யும் முயற்சிகளிலும் அவன் பங்கு கொள்கிறான். உதறித் தள்ள இயலாத சமூக உறவுகள் அவனுக்கு உள்ளன. கூட்டுறவு, குழு ஒற்றுமை, குழுநலன் போன்ற சமுதாய அலுவல்களுக்கான இயல்பூக்கங்களும் அவனுக்கு அமைந்திருக்கின்றன. ஒவ்வொரு தனி நபரின் பௌதிகக் கூறுகளையும் ஆன்மிக அம்சங்களையும் இந்து சமயம் ஏற்றுக் கொள்வதைப் போன்றே, தனி நபருக்குரிய அம்சங்களை மட்டுமன்றி சமூகத் தொகுதியில் அவனுக்கு ஒரு சமுதாயப் பங்கு இருப்பதையும் அது ஏற்றுக் கொள்கிறது. எங்ஙனம் அவன் ஆன்மிக நோக்கில் தனது சொந்த உயர்வுக்கான முயற்சிகளை மேற்கொள்கிறானோ, அங்ஙனமே சமூகத்தின் உறுப்பினர்கள் அனைவருடனும் தனக்குள்ள ஒற்றுமை அல்லது சகோதரத்துவம் என்பதை வலியுறுத்தும் வகையில் அவன் தனது சமுதாய அலுவல்களை மேற்கொள்ள வேண்டும்.

இந்து சமயம் மிகவும் சமரசப் பான்மை கொண்ட ஒரு மதம் ஆகும். வேறுபாடுகளுக்கிடையே சமுதாய ஒருமைப்பாடு என்பதை உணர்ந்து கொள்வதே அதன் ஒருமுனை முயற்சியாக எப்போதும் இருந்து வந்துள்ளது. வெவ்வேறு உருவங்களிலும் பெயர்களிலும் வழிபடப் பெறுவது ஒரே கடவுளே என்னும் தத்துவக் கொள்கையை எடுத்துரைப்பதன் வாயிலாக, அது பொதுவான அல்லது ஒரே மனித சமுதாயத்தை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, மனித சமுதாயத்தின் உறுப்பினர்களுள் ஒவ்வொருவரின் வாழ்விலும் ஈசுவரனை அறிந்து கொள்வதையே சமயத்தின் குறிக்கோளாகக் கொண்டு வந்திருக்கிறது. இந்து சமயம் வெறும் அறிவிற்கோ இதயத்திற்கோ மட்டுமே நிறைவு அளிக்கும் வகையில் அமையவில்லை; அவற்றுக்கும் மேலான ஒன்றை அது

நிறைவு செய்ய முற்படுகிறது. ஒவ்வொரு தனி மனிதனிடமும் உள்ள ஆன்மிகத் தன்மைக்கு அல்லது ஆன்மாவிற்கு நிறைவு தர அது முயலுகிறது. ஒவ்வொரு பிராணியின் இதயத்திலும் கரந்து நிற்கும் இறைமைக்கு அது முதலிடம் அளிக்கிறது. இறைவனிடத்திலும் இறைவனுக்காகவும் அவனது உலகில் வாழ்வது என்னும் தெய்விக வாழ்வை அது நமக்குப் போதிக்கின்றது. இதுவே இந்து மதத்தின் குறிக்கோள். ஒவ்வொரு மனிதனுக்கும் சுதந்திரமான வாழ்வு, நெறியான வாழ்வு, கடவுளின் படைப்பு முழுவதையும் அணைக்கும் அன்பான வாழ்வு என்னும் ஆன்மிக வாழ்வின் மூன்று லட்சியங்களை வழங்குவதற்கு அது உறுதியாக வகை செய்கிறது.

இந்து மதம் மிகச் சிறந்த ஒரு சமுதாய சக்தியும் தெய்விக சக்தியும் ஆகும். சில மதங்களைப்போல் அது சமூகத்தின் ஒருமைக்கோ மேம்பாட்டிற்கோ எதிரானதோ அல்லது சமுதாய அலுவலைப் புறக்கணிக்கும் ஒன்றானதோ இல்லை. இவ்வுலகிலேயே மனிதன் வளமான வாழ்வு பெறுவதை அது ஏற்றுக் கொள்கிறது. ஒவ்வொரு பாத்திரத்திற்கும் விதிக்கப்பட்டுள்ள அறநெறிக்கு அல்லது தர்மத்திற்கு ஏற்ப எல்லோரும் பங்கேற்க வேண்டிய இறைவனின் மாபெரும் அருள் நாடக அரங்கமாக உலகம் முழுவதையும் அது கருதுகிறது.

இந்து சமயம் சமுதாயத்தின் அமைப்பையும் அதன் அலுவல்பிரிவுகளையும் ஒவ்வொரு மனிதனின் பருவ முதிர்ச்சி, வளர்ச்சி, அபிவிருத்தி, நிறைவுக் காலங்கள் ஆகியவற்றையும் கவனத்துடன் ஆராய்ந்துள்ளது. அதாவது, சாதிப்பகுப்பு என்பது சமுதாயத்தில் ஒருவனுக்குள்ள அலுவல்களை ஆதாரமாகக் கொண்டிருப்பது; ஆசிரமங்களின் அல்லது வாழ்க்கை நிலைகளின் பாகுபாடு மனிதனின் வெவ்வேறு வாழ்க்கைப் பகுதிகளைப் பொறுத்திருப்பது. சில விஷயங்களில் இவற்றுக்கு மேலும் முழுமையான, ஆழ்ந்த உட்கருத்து ஒன்று அளிக்கப் படுகிறது என்பது என்னவோ உண்மையே; ஆயினும், இப்பிரிவுகளை ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத பகுதிகளாகக் கருத முடியாது. எந்த சமுதாயத்திலும் தனிப்பட்ட, அதாவது, ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத வகைகள், அலுவல்கள் என்பவற்றைக் காண்பது கடினம். விடுதலை (மோட்சம்), அறநெறி (தர்மம்), அன்பு (காமம்) என்னும் சொற்களுக்கு சமயத்தில் புதிய மதிப்புக்களை ஒருவன் கண்டுணர்கிறான். வெறும் அரசியல் சமுதாயம் ஒன்றில் இத்தகைய விளக்கங்களைக் காண்பது இயலவே இயலாது. இப்போது இருப்பது போல், வெவ்வேறு தரத்திய அறிவுத் திறமும் ஆற்றலும் ஆளுமையும்

உடைய ஆட்களினுல் ஆகியிருக்கும் சமுதாயம் சமய உணர்வின் இந்தக் கண்டுப்பிடிப்பின் முழுக்கருத்தையும் உணருவதில்லை. இருப்பினும், விடுதலை, அறநெறி, அன்பு என்னும் மூன்று லட்சியங்களையும் ஒருமைப்படுத்த அல்லது ஒருங்கிணைக்க சமயம் உதவவே செய்கிறது. இவற்றுக்கு தன்னிச்சை அல்லது ஒழுங்குப் புறக்கணிப்பு, ஆதிக்க வெறி, காமவேட்கை என்று கீழியல்பினர் பொருள் கொள்கின்றனர். ஆனுல், சமயத்தினுல் புடம் செய்யப்பட்ட நிலையில் அவை ஆன்மாவின் அற்புத வெளிப்பாடுகளாக அமைகின்றன.

சாதாரண மனிதனின் அலுவல்கள் உயர் குறிக்கோள்களின் பால் திருப்பப்படும்போது, மனிதனின் சமுதாய வாழ்வு முழுவதும் மாறுதலடைந்து நாகரிகமானதாய் அமைகின்றது. இந்து மதப் பெரியோர்களின் அறிவுரைகளும் நடைமுறைப்பழக்கங்களும், அகந்தை, போட்டி, பொருமை, வன்முறை, பேராசை ஆகியவற்றில் களியாட்டம் கொள்ளும் மனிதனின் கீழ்த்தரமான இயல்பினை அடக்கி, மனிதனை நாகரிகப் படுத்துவதற்குப் பயன் படுத்தப்படுகின்றன. மனிதனின் தனிப்பட்ட அல்லது சமுதாய வாழ்வின் புதிய பரிமாணமான தோர் உயர் சக்தியாக சமயம் விளங்குவதால், அது அவனுடைய முக்கியமான, கடந்த கால வாழ்வின் மீது ஆதிக்கம் பெற முற்படுகிறது. இந்து சமயத்தில் விடுதலை, நீதி, அன்பு என்னும் முப்பெரும் தத்துவங்களுக்கு முற்றும் இணங்கவே அதற்கானமுயற்சி மேற்கொள்ளப் படுகின்றது. நாம் விரும்புவதைவிட அதிக அளவிற்கு அம் முயற்சி வெற்றி பெறவில்லை என்பது, பொதுவாக எங்குமே சமயக் குறிக்கோள்களில் ஓர் இறக்கம் ஏற்பட்டிருப்பதையே சுட்டிக் காட்டுகிறது. சமயங்கள் தமது நெகிழ்வுத்தன்மையை இழந்து, கீழ்நிலைகளில் காணப்படும் பேராசை, வெறியுணர்வு போன்ற தவறுகளை சமூக, ஆன்மிகச் செயல்களாகிய உயர்நிலைகளில் மீண்டும் செய்ய முற்பட்டு, உண்மையான ஆன்ம நேய உந்துதலின் சக்தியைக் குறைத்து விடுகின்றன.

போட்டி நோக்குடன் செயல்படும் பிற சமயங்களைப் போலல்லாது இந்து சமயம் பிற சமய அறிஞர்களின் உற்சாகத்தைக்கூட, அச்சமயங்கள் எடுத்துரைக்கும் உண்மைகள்பால் தனக்குள்ள பரந்த நோக்கினுல் கட்டுப்படுத்த முயன்றுள்ளது. அமைதியான முறையில் அணுகி, இந்தியாவிற்கு உள்ளேயும் வெளியிலும் அவர்களை ஆற்றலற்றவர்களாகச் செய்திருக்கிறது. அமைதி (சாந்தி), அறிவு (ஞானம்), அதாவது, அறிவு வாயிலாக அமைதி, அமைதி வாயிலாக அறிவு-என்னும் இருகுரல்கள் இந்திய வரலாற்றில் பலதடவை ஒலித்து வந்துள்ளன. இவ்விரு

கொள்கைகளை அல்லது குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ள சமுதாய வாழ்வு சுகத்தையோ பாது காப்பையோ அல்லது மோட்சத்தையோ கூட ஆதாரமாகக் கொண்ட சமூக வாழ்வைவிட உயர்ந்த அளவிற்கு நாகரிகமும் பண்பும் நிறைந்ததொரு நிலையை வெளிப்படுத்த முற்படு கின்றது.

ஆன்மிக நோக்கில் மனிதன் மீண்டும் திருத்தி அமைக்கப் படவேண்டும். இதற்கு, உலகம் என்பது தற்செயல் அல்லது குழப்பம் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டதில்லை, அது ஒழுங்கு முறையில் அமைந்தது, தெய்விகமானது என்பதை ஒவ்வொருவனும் உணரவேண்டும். ஒழுங்கு நிறைந்த உலகமே பகுத்தறிவுடன் கூடியவனின் குறிக்கோளாகும். நாம் முன்பு கவனித்ததுபோல், அறம் அல்லது தர்மம் என்பது உலகை இயக்கும் ஒழுங்குமுறையே ஆகும்; தக்கவாறும் தன்னலமின்றி யும் பயனை எதிர்பாராமலும் செய்யப்படும் எல்லாச் செயல் களுமே தனிமனிதனின் வீடு பேறு நிலைக்கும் சமுதாயத்தின் மேம்பாட்டிற்கும் உதவுபவையே ஆகும். செயல்களை நன்கு செய்தல் அல்லது கர்மயோகம் என்பதே பிரம்மானுபவத்திற்கு அல்லது கடவுள் அநுபவத்திற்கு இட்டுச்செல்லுகிறது. பயன் களை எதிர்பாராமலும் சம்பிரதாயம் அல்லது மரபு, ஆன்மிக அக நோக்கு ஆகியவற்றினாலும் பெரும் ஞானிகளினாலும் விதிக் கப்பட்டிருக்கும் தர்மத்திற்கு இணங்கியும் செய்யப்படும் எல்லாச் செயல்களையுமே அறச் செயல் என்று இந்துமதம் குறிப்பிடுகிறது. அத்தகைய செயல்களின் சிறப்பியல்பு சமுதாய நலமே; ஏன் எனில், சமுதாயத்திற்குத் தீங்கு விளைவிக்கும் செயல்கள் பெரும்பாலும் தன்னலமும் அகந்தையும் நிறைந் தனவாகவே இருக்கும். கடவுள் (தர்மம்) அநுமதித்துள்ள, தனி மனிதர் நோக்கிலோ சமூக நோக்கிலோ நல்லனவும் அல்லாத, தீயனவும் அல்லாத செயல்களைச் செய்ய வேண்டும் என்று இந்து சமயம் வலியுறுத்து கிறது என்பது உண்மையே; ஏன் எனில், தமக்கு எவை நல்லவை, எவை தீயவை என்பதைப் பற்றிய அறிவு மனிதர்களுக்கும் சரி, மனித சமூகங்களுக்கும் சரி இன்னமும் உறுதியாக ஏற்படவில்லை. அவர்களின் அறிவுக்கு அப்பாற் பட்டதாயுள்ளது அது. எனவே கடமைகளைச் செய்யும்போது சாத்திரங்களில் நம்பிக்கை வைத்துச் செயல்படுவதே முக்கியம் ஆகிறது. ஏன்எனில், அந்த நம்பிக்கையே தனி மனிதர்களுக் கும் சரி, சமூகங்களுக்கும் சரி இறுதியில் நலமாக விளங்கும் ஓர் உயர் நலத்திற்கு இட்டுச் செல்லுகிறது.

மக்கள் சமுதாயம் ஒன்றின் அரசியல் வாழ்வு அதன் உறுப்பினர்களின் ஒழுக்கவியல் மற்றும் அறவியல் பண்புகளைப் பிரதிபலிக்கின்றது. சமுதாயம் என்பது, அதன் முழுக்கருத்தின் நோக்கில், அதன் உறுப்பினர்களுக்கு சுதந்திரத்தையும் உரிமைகளையும் உறுதிப்படுத்தும் அரசும் பிற நிறுவனங்களுமே ஆகும். தற்காலத்தில் மக்களின் தேவைகளை நிறைவேற்ற வேண்டிய நிறுவனங்களை அரசு மேற்கொண்டுவிட்டிருக்கின்றது. தனிநபர்களினுல் நடத்தப் பெற்று வந்த இத்தகைய நிறுவனங்களைத் தேசீயப்படுத்தியதற்கும் சமுதாயப்படுத்தியதற்கும், மக்களுக்கு சமூக, ஆன்மிக சுதந்திரம் மற்றும் கடமைகள் பற்றிய விழிப்பு ஏற்பட்டிருப்பது பெருமளவிற்குக் காரணமாகும். வாழ்க்கையின்பால் ஒரு பெருமதிப்பினையும் ஒவ்வொருவரின் உரிமைகளையும் எடுத்துரைத்த பெரியோர்களின் சமயப் போதனைகளினுல்தான் இந்த விழிப்பு தோன்றியது. குறிக்கோளாகக் கொள்ளப்பட்டு வரும் தனி நபர் சுதந்திரம், ஏழை—பணக்காரர், உயர்ந்தோர்—தாழ்ந்தோர் ஆகிய இரு சாராருக்கும் சமமாக இயங்கும் சட்டம், நோய் நொடி, பஞ்சம், புரட்சி போன்ற சமயங்களில் பாதுகாப்பும் பரிவும் அளிக்கும் செயல்களின் வாயிலாக வெளிப்படுத்தப்படும் அன்பு என்னும் இம்மூன்று உண்மைகளையும் பாரதத்தில் போதித்தது சமயமே ஆகும்.

மாபெரும் சமய உண்மைகளே வாழ்க்கை நிலைகளின் சமுதாய மேம்பாட்டிற்கான பெரும்பணியை ஊக்குவித்தன. பொருள்முதல் அரசிலும் சரி, சமதர்ம அரசிலும் சரி இன்றைய அரசுகளை ஊக்குவித்து இயக்கும் சமுதாய தத்துவத்திற்கு ஆதாரம் அறம் (தர்மம்), வீடு (மோட்சம்), ஆசை (காமம்), நீதி, விடுதலை, அன்பு-மற்றும் கருணை (பரிவிரக்கம்) ஆகியவையே. இந்து மதத்தில் சமயத்தின் கருத்தியல் அல்லது இலட்சிய நோக்கு நடைமுறைத்தன்மையுடன் கூடியிருப்பதால் பிராணிகள் விஷயத்திலும் இது செயல்படுகிறது. பிராணிகளும் அரசின் பொருளாதார அமைப்பைச் சேர்ந்தனவாயிருப்பதால் மனிதஇனநலப் பற்று என்பது பிராணிகளையும் அணைத்துச் செல்வதாய் இருக்கிறது. இந்து மதம் போன்ற உண்மைச் சமயத்தின் குறிக்கோள் மத சம்பந்தமற்ற அலுவல்கள் அனைத்திலும் கூட மக்கள் அறம், அன்பு, வீடு என்னும் மூன்று கொள்கைகளைப் பின்பற்றி நடக்கச் செய்வதே யாகும். அங்ஙனமே, சமூக அல்லது அரசியல் சட்டங்களை இயற்றுவதில் இக்கொள்கைளைப் பின்பற்றுவது ராஜதர்மம் ஆகும். ராஜதர்மம் என்பது மக்கள் சுயதர்மத்தைப் பின்பற்றுவதை மேம்படுத்துவதாகவும் இருக்க வேண்டும். அது மனிதனைச் சமுதாயநோக்கில் மேம்படுத்தி,

அவனது கீழ்த்தரமான அல்லது நன்னலம் நிறைந்த இயல்புகளை மாற்றியமைப்பதைத் திருத்தி விரைவுபடுத்தலாம்; மற்றும், சட்டத்தின் கட்டுப்பாடுகளைக் கொண்டு, மக்களின் சட்டத்திற்குப் புறம்பான அல்லது உண்மையல்லாத இயல்பினைக் கட்டுப்பாட்டிற்கு கொண்டு வரலாம். ஆனால், மெய்யான விடுதலையான மோட்சத்தைப் பெறுவதற்காக இருப்பதே ராஜதர்மம்.

தற்காலத்திய அரசு சமயத்தின் லட்சியங்களைத் தனது குறிக்கோள்களாக ஏற்றுக் கொண்டுவிட்டதனால் சமயத்தின் அலுவல்கள் அனைத்தையும் தானே நிறைவேற்ற முற்படுகிறது. ஆனால், மக்களின் வளர்ச்சிக்கும் மகிழ்ச்சிக்கும் தேவையான நிலைகளை ஏற்படுத்துவதில் உதவவோ, சிறப்பாக, அவர்களின் பௌதிக, சமூகத் தேவைகளைப் பொறுத்தவரை அவர்களுக்கு ஒரு நிறைவுணர்ச்சியை அளிக்கவோ அதனால் முடியும் என்றாலும், தண்டனை என்று ஒன்றை விதித்தாலன்றி அதனால் மக்களை நல்லவர்களாக இருக்கும்படி கட்டாயப்படுத்த முடியாது. மக்களிடம் அச்சுறுத்தலினால் சமுதாய விரோதச் செயல்களில் அவர்கள் ஈடுபடாமல் இருக்கும்படி செய்ய முடியும். ஆனால், இதில் பெரும் ஆபத்து ஒன்று உள்ளது. பலவந்தமான செயல் எதுவும் சுயவளர்ச்சிக்குக் குந்தகமாக இருக்குமேயன்றி அதற்கு உதவியாக இராது. ஆன்மிகப் பரிணாம வளர்ச்சிக்கான அலுவல்களை மேற்கொள்ளும் அரசு அதில் தோல்வியுறக் கூடும். இடையூறுகளைத் தடுக்கும் தடையாக ஆகி விடக் கூடும். சமயம் எதிர்மறையாக மட்டுமின்றி ஆக்கமுறையிலேயே கூடத் துணை புரிவதாயுள்ளது. இதய மாறுதல் ஏற்படுவதற்கு அது வகை செய்கிறது. உளநோய் மருத்துவர்களாலும் மருந்தியல் மருத்துவர்களாலும் தீர்க்க முடியாத சொந்தப் பிரச்னைகளுக்குத் தீர்வுகாண மக்கள் சமய ஞானிகளை நாடுகின்றனர். மானிடப் பிரச்னைகள் தாற்காலிக சமூக, சொந்த வாழ்க்கைக்கு அப்பாற்பட்டும் இருக்கும் தன்மையுடையனவாயுள்ளன. அகவமைதி கண்டு, இம்மை, மறுமை இரண்டின் உண்மைகளையும் அறிந்துணர்ந்து ஆன்ம ஞானிகள் உள்ளத்தே அமைதி பெறுவதற்குத் துணை செய்கின்றனர். மனிதன் வெறும் சமுதாய, உடலியல் பிராணி இல்லை; அதைவிட அவன் அதிகமானவன். அவனது வாழ்வு, சாவுப் பிரச்னைகள் அறிவுத் திறனையே அயர வைக்கின்றன; அரசோ, அதன் நிறுவனங்களோ இப்பிரச்னைகளைத் தீர்க்க முடியாது. சமயம் ஒன்றே அவற்றைத் தீர்ப்பதற்கு உறுதியளிக்கிறது; தனக்கே உரிய, தன்னிகரற்ற முறையில் அதைச் செய்கிறது. மறைமுகமாகவன்றி, இப்பிரச்னைகள் சமுதாயப் பிரச்னைகளே அல்ல. அரசு இதில் தனது வரையறைகளை

உணர்ந்து கொள்ள வேண்டும். தேசிய அல்லது சமதர்ம, அல்லது பொருள்முதல்வாதக் கொள்கைகளினுல் ஆளப்படும் நாடுகளில் பிறப்பிக்கப்பட்டிருக்கும் ஆணைகளினுல் மக்களின் ஆன்மாக்களைத் துன்புறுத்தி அலைக்கழிக்கும் இந்த அடிப் படைப் பிரச்னைகளின் சம்பந்தத்தைப் புறக்கணிக்க முயலும் எந்த அரசும் காலக்கிரமத்தில் அரசே அழிவதற்குக் காரண மாகி விடும். அரசு அல்லது சமுதாயம் கூட கடவுளாக அல் லது பற்றுக்குரிய ஒரு தனிப் பொருளாக ஆகிவிட முடியாது. ஏன்எனில், தன்னை முழுவதும் அறிந்து கொள்வதற்காக ஆன் மாவிற்கு இருக்கும் ஆழ்ந்த உந்துதலை அதனுல் திருப்திப் படுத்த இயலாது. மெய்யான மோட்சம் அல்லது விடுதலையே நாடப்படுகிறது; அவ் விடுதலை பொருள்களை அடைவதற்கான அல்லது விருப்பங்களையோ தேவைகளையோ நிறைவேற்றிக் கொள்வதற்கான சுதந்திரத்தையோ, அல்லது சமவாய்ப்புக் கான உரிமையையோ குறிப்பிடுவ தன்று; பிறப்பு இறப்பு பயத் திலிருந்தும் பெறும் விடுதலையையே அது குறிக்கிறது.

சமயம் இதை வழங்குகிறது; சமயத்தினுல் மட்டுமே இதை வழங்கவும் முடியும். ஆன்மிக நோவு என்பது பிற எல்லா வகை நோவுகளிலிருந்தும் மெய்யாகவே வேருனதாகும். இம்மைச் செல்வத்தினுலேயோ, கட்டுப்பாடான தர்ம வாழ் வின் பயனுகக் கிடைக்கும் தெய்விக இன்பங்களினுலோ கூட அந்நோவை மட்டுப்படுத்த முடியாது. இவை அனைத்திலிருந் தும் கிடைக்கும் விடுதலையின் பொருட்டு மாபெரும் மனிதர்கள் சாம்ராஜ்யங்களைத் துறந்திருக்கின்றனர். பொருள் (அர்த்தம்) ஆசை (காமம்) என்னும் பேறுகள் துச்சமானவை. அவை ஆதிக்கம் பெற்றுள்ள உலகு ஒரு மாயத் தோற்றம், வஞ்சகப் பொறி. மனிதன் அவற்றிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள வேண்டும். ஆனுல், ஆன்மாவிற்கு உண்மையான ஒளி கிடைக் காதவரை அது கடினம். இம்மனிதர்களுக்கு எப்படி உதவுவது என்பது சமய ஆசிரியர்களுக்குத் தெரியும். சமய நூல்களை யும் சமய நிறுவனங்களையும் பாதுகாத்து வைத்தால் மோட் சத்தை நாடுபவர்களின் வழியை அது எளிதாக்கும். அக ஒளி அல்லது அக விருப்பம் என்பதற்கு சமய இலக்கியம், சமய வழி முறைகள் ஆகியவற்றின் துணை தேவைப்படுகிறது. நல்லோர் களின் அல்லது ஆன்ம அறிவு பெறும் வழி அறிந்தவர்களின் சேர்க்கை அமைதியைப் பொழிந்து, ஆன்ம வளர்ச்சிக்கான நிலைகளை அமைக்கின்றது. அமைதியும் ஆறுதலும் தேவைப் படும் ஆன்மாவிற்கு வெறும் சுதந்திரம் அல்லது விடுதலை என்பது பொருளற்றதாயுள்ளது. இந்த அமைதி ஆண்டவனுல் அளிக்கப்படுவ தாகும்; மனிதன் தனது தனித்தன்மை, குழு

ஆகியவற்றிலிருந்து விளையும் துயர்களிலிருந்தும் போராட்டங்களிலிருந்தும் முரண்பாடுகளிலிருந்தும் விடுபட்டு, ஆண்டவன் முன்னிலையில்தான் சுதந்திரமாக இருப்பதை உணர்கிறன். ஆலயங்களும் மடங்களும் இத்தகைய சூழ்நிலையை வழங்குகின்றன: ஆனல், அவ்விடங்களில் தன்னறிவையும் இறையுணர்வையும் பெறும் முயற்சியில் ஈடுபட்ட, ஈடுபட்டு வரும் ஞானிகள் இருக்கவேண்டும். மேலான ஆன்ம ஞானியர் வசிக்கும் ஆச்ரமங்களில் அன்பும் இரக்கமும் நிறைந்திருக்கும். இவர்களும் மனித சமுதாயத்திற்குத் தொண்டு புரிவோர்கள்தாம். யோகி அல்லது சமய அறிஞன் என்பவன் உலகிலிருந்து விலகி ஓய்வு பெற்றவன் என்ருலும், தனது தோழமையை விரும்புவோருக்குத் தனது அமைதிப் பண்பினுலேயே, எந்த அரசினுலும் உறுதியளிக்கமுடியாத அக அமைதியினுலேயே, தொண்டு புரிகின்ருன். இதை அடைவதற்கான சுதந்திரம் எல்லாவகை மனிதர்களுக்கும் இருக்கவேண்டும் என்பதை இந்து சமயம் நன்கு உணர்ந்திருக்கின்றது. உடல், மூளை, இதயம் அல்லது ஆன்மா ஆகியவற்றின் எல்லா நோய்களுக்கும் ஒரே ஒரு சர்வ ரோக நிவாரணி அல்லது அனைத்து நோய் தீர்க்கும் மருந்து என்னும் கருத்தை அது ஏற்றுக் கொள்வதில்லை. சமயப்பற்று மிகுந்த நபர் அல்லது ஆன்மிக அறிஞர் என்பவர் உலகத்திலிருந்து விலகியிருந்தாலும் கூட, அவர் ஒரு முக்கியமானவர் ஆவார்; கடவுளுணர்விலேயே வாழ்ந்து இயங்கி இருந்து வருபவர்; மனித சமுதாயம் முழுவதற்கும் அமைதியை அளிப்பவர்; கேட்க விரும்புவோருக்கு ஆன்மிக அமைதியை வழங்குபவர்; அச்சத்தினுலும் துயரினுலும் நடுங்கித் துன்புறும் ஆன்மாவிற்குப் புகலிடமாக விளங்குபவர்; வாழ்வதற்கு உலகம் ஒரு பயங்கரமான இடம் என்று நினைப்பவருக்கெல்லாம் அன்பு கிடைக்கத் தொடங்குகிறது. நோயுற்றுக் கிடக்கும் உலகை மாற்றுவதற்கான புதிய வழி ஒன்றை அவர் காட்டுகிருர். அவர் எங்கு இருந்தாலும் உலகனைத்தையும் அணைத்து நிற்கும் தமது இயல்பு காரணமாக எல்லோரிடத்திலும் நம்பிக்கை, அன்பு, பற்று ஆகியவை சுரக்கும்படி செய்கிருர்.

சமயத்திற்கும் சமயச் சங்கங்களுக்குமே உரித்தான ஆன்மிக அலுவல்களை அரசு தனது பொது அலுவல்களில் ஒரு பகுதியாக ஏற்று ஒருபோதும் செயல் படுத்தவே முடியாது. சமயச் சார்பற்ற அரசு அல்லது பொது நலம் பேணும் அரசு உலகியல் பொருள்களை "அதிகப்பட்ச மக்களுக்கு அதிகப்பட்ச மகிழ்ச்சி" என்னும் அடிப்படையில் வேண்டுமானுல் சமமாகப் பகிர்ந்தளிக்க முற்படலாம். ஆன்மிக நலம் வேறு; சமூக அல்லது பொருளாதார அல்லது இன்பவியல் நலங்கள் (அதாவது, அர்த்

தம் அல்லது பொருள், காமம் அல்லது இன்பம் என்பவை) வேறு: முந்தையதன் சிறப்புத் தன்மையைப் பிந்தையவற்றிஞல் ஒருபோதும் அளவிட முடியாது. சமூக அல்லது பொருளாதாரத் துறைகளில் உலக மக்களிடையிலோ, தேச மக்களிடையிலோ சமமாகப் பகிர்ந்தளிக்கும் முறையே நியாயமானது என்பது உண்மைதான்; எனினும், நலங்களைச் சமமாகப் பகிர்ந்தளித்தல் என்பது அரசுக்குரிய கடமையின் அல்லது தர்மத்தின் ஒரு பகுதியே ஆகும். சமப்பங்கீடு என்பதை விட வேறு நியாயமான அளவைகள் இருக்கின்றன. இருந்து வந்திருக்கின்றன கூட. பாதுகாப்பை வேண்டுமாஞல் எல்லோருக்கும் சமமாகப் பகிர்ந்தளிக்க முடியலாம். ஆஞல், சுதந்திரத்தை அவ்வாறு பகிர்ந்தளிக்க இயலாது. தெய்வத்தின் பெயரால் நடத்தப் படும், தற்காலத்தில் உள்ள பாகிஸ்தான் போன்ற இறைமை ஆட்சி அரசிஞல் கூட சுதந்திரத்திற்கான, குறிப்பிட்ட ஒரு முறையிலேயே வளர்ச்சி ஏற்படுவதற்கான சூழ்நிலையை மட்டுமே உண்டாக்க முடியும்; ஆஞல், இந்த முயற்சியை மேற்கொள்ளும் போது, சமய உணர்வைச் சமுதாயப்படுத்துதல் என்பது நிகழ்ந்து விடுகிறது. இது தீமையே கலவாத ஒரு முழு நன்மை என்று சொல்ல முடியாது. ஆயினும், தனிப்பட்ட அல்லது சொந்த சுதந்திரம் பற்றிய விவரங்களில் மேன்மேலும் அதிக அளவிற்குத் தெளிவு இருக்கவேண்டியதன் அவசியத்தை உணர்ந்து கொள்வதற்கு இது துணை புரிகிறது. சுதந்திரத்தின் குறிக்கோளே ஒழுங்கான அல்லது தன்னெழுக்கத்துடன் கூடிய சுதந்திரம்தான்: இல்லாவிட்டால், மோட்சம் என்பதற்கே பொருளில்லாது போய்விடும். ஒவ்வொரு மனிதனின் ஆன்மாவிலும் இறைவனைத் தன்னகத்தே காணவேண்டும் என்னும் இயற்கைத் தேவை அல்லது உந்துதல் ஒன்று இருக்கிறது. புறச் சமூகச் செயல்களோ, சமூகமோ துணை புரிவதாக இல்லாமலிருந்தாலும் கூட, கடவுள் தரிசனம் என்பது பலமுறை சாதித்து அடையப் பெற்றுள்ளது. மனித அலுவல்களைச் சமுதாயப் படுத்துவதன் வாயிலாக மனிதனுக்குக் கிடைக்கும் அமைதி, வசதி, பாதுகாப்பு ஆகியவற்றிலிருந்து இந்தத் தேவை வேறுபட்டதாகும். சமுதாயத்தின் ஒரு பகுதியாக தனி நபர் இருப்பினும் கூட, சமுதாயத்தைக் காட்டிலும் தனி மனிதன் பெரியவன் என்பதில் மிகுந்த உண்மை இருக்கிறது. ஆஞல், தனிப்பட்ட மனிதன் மனித குலத்தை விட உயர்ந்ததான ஒரு பொருளுக்கு, அதாவது, கடவுளுக்கு உரியவஞயிருக்கிருன்; ஏன்எனில், மனிதனின் குறிக்கோள் என்றும் நிரந்தரமாகவும் அழிவேயில்லாமலும் இருப்பதே யாகும்; இதைக் கடவுள் ஒருவரால் மட்டுமே அளிக்கமுடியும். உலகியல் லட்சி

யங்களுக்கும் அரசுக் குறிக்கோள்களுக்கும் அப்பாலுள்ள இறுதி இலட்சியம் கடவுளே; வேறு குறிக்கோள்கள் அனைத்திற்குமே கடவுளை ஒட்டியே மதிப்போ, பொருளோ உள்ளது.

குறிக்கோள் சமயச் சார்பற்ற அரசே என்னும் போது, சமயத்திற்கு எதிரானதாக அரசு இருக்கவேண்டும் என்பதைக் குறிப்பதாகாது. அதற்குப்பொருள் என்னவென்றால், முறைப் படுத்தப்பட்ட அல்லது முறைப்படுத்தப்படாத, நிறுவனத் திற்குட்பட்ட அல்லது நிறுவனத்திற்குட்படாத சமய அலுவல் களை அரசு மேற்கொள்ளாது என்பதே யாகும். இதிலிருந்து, சமய நிறுவனங்கள் அல்லது மதஸ்தாபனங்கள் தம்விருப்பப்படி எதையும் செய்வதை அரசு அநுமதிக்கிறது என்று நினைத்து விடக்கூடாது: நியாயமான சமூக வாழ்க்கை மற்றும் அமைதி பற்றிய அலுவல்களைப் பொறுத்தவரை அரசிற்கே அதிகாரம் இருக்க வேண்டும்; மதஸ்தாபனங்களின் ஒழுங்கான ஆட்சி முறை சம்பந்தமான அலுவல்களில் அரசு தனது தகுதிக்குட் பட்ட சட்டங்களை இயற்றுவதற்கான சுதந்திரத்தைத் தன் னிடம் வைத்துக்கொண்டுள்ளது.

சமயத்திலிருந்தும் தத்துவவியலிலிருந்தும் நாம் தெரிந்து கொள்ளும் ஓர் உண்மை என்னவென்றால், மானிட நடத்தை யில் வெவ்வேறு அம்சங்கள் இருப்பது நமக்குப் புரிந்தாலும் அவ்வம்சங்களை ஆராய்ந்து பல்வேறு அறிவியல் துறைகளை அமைத்தாலும் கூட, அவ்வம்சங்களை ஒருபோதும் வெவ்வேறா கப் பிரிக்க முடியாது. பொருளாதார மனிதன், அரசியல் மனிதன், சமயவியல் மனிதன், அழகியல் மனிதன் என்றவாறாக மனிதனுக்குப் பலவகை இயல்புகள் இருப்பதை அறிவியல் அறிஞர்கள் கண்டுபிடித்திருக்கின்றனர். இதன்அடிப்படையில் பொருளாதாரம், சமூகவியல், அரசியல், சமயவியல், அழகியல் என்ற அறிவியல் துறைகள் ஏற்பட்டுள்ளன. குறிப்பிட்ட வரம்புக்குட்பட்ட வரை இவை உபயோகமானவையே; ஆனால், ஒவ்வொன்றும் தனது ஆராய்ச்சிக்குட்பட்ட மனிதனின் பகுதி மட்டுமே முழு மனிதனையும் குறிக்கும் என்று எண்ணி, தனது விதிகளையும் கொள்கைகளையும் பிரயோகிக்க முற்படும்போது அவை வரம்பைக் கடந்துவிடுகின்றன. இதனால் தற்காலத்தில் ஏறுமாறான, சீரற்ற வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. அறிவியல் துறைகள் மனிதனையே மறந்துவிடும் அவலநிலை உண்டாகியிருக் கிறது. அறிவியல் துறைகள் ஆராயும் மனிதனின் வெவ்வேறு அம்சங்கள் பற்றிய அறிவு அனைத்தையும் விட மிகுதியானவன், மேம்பட்டவன் மனிதன். இந்தப் பல்வேறு அம்சங்கள் மனித னின் பல்வேறு அலுவல்களில் வெளிப்படும் பண்பான பகுத்தறி

வைச் சார்ந்த உடமைகளாகும். மனிதனின் இலட்சியம் இந்த முழு ஆளுமையின் இசைவான அமைப்பு; ஆனல், எந்த ஒரு சமூக அமைப்பினுலுமோ, அரசினுலுமோ அதை அடைவது சாத்தியமில்லை. தனி மனிதன் என்பவன் அவனுடைய சமுதாய, பொருளாதார, சட்ட வாழ்வு அனைத்தையும் விட மிகுதியானவன் அல்லது மேம்பட்டவன் என்பதை அரசு நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். சமயமும் கூட, தனது முக்கியமான நோக்கம், ஒவ்வொருவனும் தனது உள்ளத்திலுள்ள மெய்ப்பொருளைக் கண்டுகொள்ளலே என்பதையும், அத்தகைய உயரிய செய்கைக்குத் தேவையான சுதந்திரம், நெகிழ்ச்சி, சூழ்நிலை ஆகியவற்றை அளித்து அவனுக்கு உதவ வேண்டும் என்பதையும், தனி மனிதன் மெய்யுணர்வு பெறுதலே அவன் உறுப்பினனுக இருக்கும் சமுதாயத்தின் நிறைவுமாகும் என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள புனைவியல் விஞ்ஞானிகளை எங்ஙனம் பொதுப் பார்வையினின்றும் அரசு பாதுகாத்து வருகிறதோ, அங்ஙனமே ஆன்ம அறிவுக்கான பாதையைத் தாமாகவே தேர்ந்து கொண்டோருடைய சூழலின் புனிதத்தையும் அது காத்து உதவ வேண்டும். கலாசாரத்தின் கடந்தகால வரலாறு காட்டுவது போல், சமயப் புனிதர்களின் மெய்யறிவுக் கண்டுபிடிப்புகளும் அறிவியலறிஞர்களின் கண்டுபிடிப்புகளை விடச் சமுதாயத்திற்கு நலனளிப்பதிலோ அதை மாற்றுவதிலோ எவ்வகையிலும் குறைந்தவை அல்ல. எனவே, சமய உணர்வுக்கான பாதுகாப்பு அல்லது ஏதாவதொரு சாக்கில் மெய்ப்பொருள் நாடுவோரின் வாழ்க்கையில் ஏற்படும் தினசரிக் குறுக்கீட்டினின்றும் அவர்களைப் பாதுகாக்கும் மனமார்ந்த முயற்சிகூட அவர்களுக்குப் பெரிதும் உதவும். சமய உணர்வில் குறுக்கிடுதல் என்பது இறுதியில் சமுதாய ஒருமைப்பாட்டினையே குலைக்க முற்படுவதாகும். தனி மனிதர்களின் அறம் சார்ந்த பல்வகை ஈடுபாடுகளுக்குத் துணை நிற்பதே அரசின் பெருமையாகும். சமய உந்தல் என்பது வேறு எந்த உந்தலையும் போன்றே ஏதாவதொரு கட்டத்தில் ஒவ்வொருவருக்குமுள்ள அடிப்படையான தேவையாகும்.

வெறும் பலத்தின் மீதோ சமுதாய வற்புறுத்தலின் மீதோ அல்லாமல், அன்பின் மீது அமைக்கப்பட்டுள்ள பண்பாட்டிற்கும் சமூக ஒருங்கிணைப்பிற்குமான சக்தியாக விளங்குகிறது இந்து சமயம். வாழ்வை வாழக்கூடியதாகச் செய்கிறது அது; வாழ்விலிருந்து தப்பித்துக் கொள்ள உதவும் ஓர் அமைப்பாக இருப்பதில்லை அது. தத்துவவியற் சிந்தனையின் துணைகொண்டு அனைவருக்கும் நிறைவையும் தெளிவையும் அது கொடுக்கிறது. ஆனல், சமயத்திற்குப் புறம்பான அலுவல்களைக் களைந்தெடுக்க

வேண்டியது அவசியம்: அரசு இதனைச் செய்ய வேண்டும். சமுதாய அமைப்புகளின் துணை கொண்டு சமயக் கொள்கைகளைச் செயல் படுத்தவல்ல அரசுறுப்பினர்களின் வாழ்க்கை வாயிலாக அல்லது ஆட்சியாளர்களின் வாழ்க்கை மூலமாகவே சமயம், அரசின் மீது ஒரு விளைவை ஏற்படுத்த முடியும். அரசு என்னவோ வெவ்வெறு நம்பிக்கைகளுள்ள சமயங்களிலிருந்து ஒதுங்கி, சமயச் சார்பற்றதாகவே இருக்கவேண்டும். இங்குதான் ஒரு நுண்ணிய வேறுபாட்டை, ;சமயத்திற்கும் சமயங்களுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டைக் குறிப்பிட வேண்டியதாயிருக்கிறது. மனித குலம் சமயத்தையே, அதாவது, மாறுத அடிப்படைகளைக் கொண்ட ஒரு சமயத்தையே நாடுகிறதேயன்றி, பல சமயங்களை அது நாடுவதில்லை. குறிப்பிட்ட கட்டுப்பாடுகளையே அல்லது கொள்கைகளையே யுடைய சமயங்கள் உண்மையிலேயே சமயத்திற்குத் தொண்டு புரிவதில்லை· சமய உணர்வுதான் நமது குறிக்கோளாக இருக்க வேண்டும். இந்து மதத்தைப் போல் வேறு எந்தச் சமயமும் இதை அவ்வளவு சிறப்பாகச் செய்வதில்லை. இந்து மதத்திலும் பல ஸ்தாபனங்கள் உள்ளன என்பது உண்மையேயாயினும், இந்து மதத்தைப் பற்றிச் சொல்லக்கூடிய ஒரே ஸ்தாபனம் என்று எதுவும் அதில் இல்லை. இந்து மதம் அதைப் பின்பற்றுவோரின் வாழ்க்கையிலும் அதன் ஞானிகளின் அநுபவங்களிலும் சம்பிரதாயங்களிலும் உயிர்த்துடிப்புடன் விளங்குவ தாகும். எல்லாவகைச் சாதனங்களையும் யோக முறைகளையும் வளர்ப்பதில் உள்ள அக்கறை இந்து மதத்தின் சீரிய, பரந்த கொள்கைக்குச் சான்ருகும். ஸ்ரீராமானுஜரின் ஸ்ரீவைஷ்ணவம், சமயம், அநுபூதியியல் ஆகியவற்றின் அக மரபின் மூலமாக தனி மனிதர்கள் ஆன்மிக வளர்ச்சி பெறும் வகையில், சமய ஆன்மிக மரபுகளுள் மிகச் சிறந்தவை அனைத்தையும் தன்னுள் ஏற்றுக் கொண்டு விளங்குகிறது. வைணவமும் திருவேங்கடமுடையானின் அர்ச்சாவதாரத்தின் வடிவில் மாந்தரிடையில் தெய்விக சாந்நித்தியம் இருப்பதை உறுதி செய்து, சமுதாயத்தில் ஊடுருவி அதை மாற்றி அமைக்க முயன்றிருக்கிறது. உலகம் இறைவன் இருப்பதற்கு ஏற்ற இடமாகவும் தெய்விகப் பேரரசு ஏற்படுவதற்கான இடமாகவும் செய்யப்படவேண்டும் என்பதை எல்லாப்

பெரும் சிந்தனையாளர்களும் ஞானிகளும் ஏற்றுக்கொண்டுள்ளனர். சடகோபர் தமது 'திருவாய் மொழி'யிலே, மக்களின் சமுதாய வாழ்வு மற்றும் உலக வாழ்வு இவற்றில் சீர்திருத்தத்தையும், தேவையானால், சமுதாய வாழ்க்கை முறைகளில் ஒரு புரட்சியையும் கூட அறிவித்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். சமயத்தின் குறிக்கோள் வரம்பிலா வேட்கையையும் செல்வத்தையும் நாடும் மனிதனை மோட்சம் அல்லது உண்மையான விடுதலையை நாடுபவனாக மாற்றுவதாகவும், போட்டி மனப்பான்மையுடனும் தளைகளுடனும் இருக்கும் சமுதாயத்தை 'அனைவரும் ஒரே இறைவனின் குழந்தைகள்' என்னும் அறிவிலிருந்து விளையும் அன்பையும் எல்லா உறவுகளும் அடிப்படையாகக் கொண்டு விளங்கும் தெய்விக சமுதாயமாக மாற்றுவதுமே யாகும்.

---

## அத்தியாயம் - 12

# முடிவுரை

இந்து சமயம் அகிலமனைத்தும் அளாவிய ஒரு மதம்; ஏன் எனில், உலகத்திற்கும் அப்பாலுள்ள ஒருவராகக் கடவுள் இருக்கின்றார் என்பதை மட்டுமின்றி, எல்லா ஜீவன்களிடத்தும் உள்ளுறை அன்பாகவும் அவர் விளங்குகின்றார் என்பதையும் அது உறுதிப்படுத்துகிறது. ஒவ்வொருவரும் கடவுளை நாடி, அவரை நேருக்கு நேராகக் காணமுடியும். ரிஷிகள், ஆழ்வார்கள் மற்றும் நாயன்மார்கள் அங்ஙனமே இறைவனை நாடி, அவரை நேருக்கு நேராகக் கண்டவர்கள். இறைவன் இருப்பது இறையநுபவத்தின் வாயிலாக மெய்ப்பிக்கப்படுகிறது. சாஸ்திரம் என்பது அறிவியலுக்கு (ஸயன்ஸுக்கு) முரணானது அன்று; ஏன் எனில், கடவுளை அறிவதற்கான அதன் வழிவகையும் அறிவியல் முறையை ஒட்டியதே என்பதோடுகூட, சொந்த அநுபவத்தினால் அதைச் சோதித்தும் பார்க்கமுடியும். இறைவன் சத்தியமே உருவானவன், அமலன், அதாவது, தூயவன். எனவே சாத்துவிகமான முறையைக் கடைப்பிடிப்பவர்களும், உள்ளத்தில் தூய்மையுடன் விளங்குபவர்களுமான உத்தமர்களே கடவுளை அடைய முடியும். லட்சியம், தூய்மையே உருவாக விளங்கும் ஒன்றாதலால், வழி வகைகளும் தூயனவாகவே இருக்கவேண்டும். ஆகவேதான், இந்து சமயம், சமய வாழ்வுக்கு முக்கியமான ஆதாரமாக மனம், மொழி, செயல் அனைத்திலும் தூய்மையையே வலியுறுத்துகிறது. ஸ்தாபனத்தின்பால் விசுவாசம், கொள்கையில் ஒருமைத்தன்மை என்பனவற்றை விட அகத்தூய்மையையே அதிக அளவிற்குக் குறிக்கோளாகக் கொண்டு திகழும் தனிப்பட்ட மதம் இந்து சமயம்.

எந்த இரு மனிதர்களும் உளப்பாங்கிலோ வாழ்க்கை நிலையிலோ ஒரே மாதிரியாக இருப்பதில்லை. ஒவ்வொரு வகையான பக்தனுக்கும் வழிவகை செய்து வருகிறது இந்து மதம்; அவனவனது ஆன்மிக வளர்ச்சி நிலைக்கேற்ற வழியைத் தேர்ந்து கொள்வதற்கு அவன் அநுமதிக்கப்படுகிறான். இறைவனை எந்த வகையான உருவத்திலாவது ஒருவன் வழிபடலாம்;

இறைவன் அவனுக்கு அந்த உருவத்திலேயே காட்சி அளிக்கிறான். ஆனால், பக்தன் தூய்மையான உள்ளத்துடன் கடவுளை அணுக வேண்டும்.

சமூக வாழ்வின் மையமாக அமைந்துள்ள கோவிலின் சூழல், கடவுளே மனிதனின் எல்லா அலுவல்களுக்கும் மையமாக விளங்குகிறார் என்பதையும், அவரே உண்மையான செயல் புரிவோன் என்பதையும், அவனுக்கு இடைவிடாது நினைவுறுத்திக் கொண்டிருக்கும் ஒன்றாகும். குடும்பம், பள்ளிக்கூடம், கோவில் மற்றும் அரசு ஆகியவை பரஸ்பர நல்லுணர்வுக்கும் தொண்டிற்கும் வேண்டிய வசதிகளை வழங்குகின்றன. இராமாயணத்தை முன் மாதிரியாகக் கொண்டு தூய்மைப்படுத்தப்பட்ட சமுதாய வாழ்வின் கூறாக விளங்குவது குடும்பம். வாசுதேவனாக இறைவன் எங்கும் நிறைந்து விளங்கும் வைபவத்தை நினைத்து வணங்குவதற்கான வாய்ப்பை நமக்குத் தருவது கோவில். இவ்வாறாக, இந்து சமயம் வேறுபாட்டில் ஒருமைப்பாட்டை இலக்காகக் கொண்டிருந்தாலும், அது தந்தையிடமிருந்து மகனுக்கு, குருவினிடமிருந்து சீடனுக்கு என்று பரம்பரையாகத் தொடர்ந்து வரும் பழைய மரபைப் பின்பற்றுகிறது; சத்சங்கம் அல்லது நல்லோர் சேர்க்கையையும் அது வலியுறுத்துகிறது. ஆசிரமம் என்பது சாதுக்களின் ஆன்மிகத் தொகுதி; நல்லோர் சேர்க்கை என்னும் கருத்தின் நோக்கில் உணர்ச்சி செறிந்த சமுதாய லட்சியம் ஒன்றை இந்து சமயம் நமக்கு வழங்குகிறது. சமயச் சடங்குகளோ, வழிபாடு முறைகளோ நேர்மையின் விவரங்களே ஆதலால், அவை ஒழுக்கக்கட்டுப்பாட்டின் பொருட்டும் ஆன்மிக ஒழுங்கு முறையின் பொருட்டும் திட்டமாகச் செய்யப்பட வேண்டியது இன்றியமையாத தாகும். நேர்மையான செய்கை ஒவ்வொன்றுமே இறைவழிபாடுதான்; 'நானல்ல எல்லாம் நீயே, அல்லது பிரம்மார்ப்பணம்' என்னும் கருத்துடன் செய்யப்படும் சமர்ப்பணம் அல்லது காணிக்கையாகும் அது.

இறைவன் எல்லோருடைய அல்லது ஆன்மிகப் பொருள்களுடைய இதயங்களில் அந்தர்யாமியாக அல்லது உள்ளுறைப் பொருளாக வசிப்பவன் ஆதலால், ஒருவருக்கொருவரிடையே உண்மையிலேயே தடுப்போ, பிரிவோ எதுவும் கிடையாது. நல்லோர்களின் குழு, கடவுளுக்கும் மனிதனுக்குமிடையே ஒன்றியிணைப்பு ஏற்படும் சமயக் குறிக்கோளுக்கு உரமாக விளங்குகிறது. இந்து சமயம் அதன் சமரசப்பான்மைக்கும் சகிப்புத்தன்மைக்கும் பேர்போனதாகும். கருத்து வேறுபாடு

களும் வழிபாட்டு வேறுபாடுகளும்கூட ஏற்றுக் கொள்ளப்படு கின்றன. ஒழுக்க வாழ்வின் தூய்மை, மெய்ம்மையில் பற்றுறுதி ஆகியவற்றைப் பொறுத்தவரை உடன்பாடு அல்லது கொள்கை நெகிழ்ச்சி என்பது கிடையாது. அகிலமளாவிய தன்மை மற்றும் சமரசப்பான்மை ஆகியவற்றோடுகூட, எல்லா ஜீவன்களிடத்தும் அந்தர்யாமியாக இறைவன் உறைந்திருத் தல், அவதாரங்களின் மீட்பு நோக்கம், ஜீவன்களின் ஒத்த இயல்பு, கைங்கர்யம் அல்லது தொண்டு என்பதன் தேவை, எல்லா ஜீவன்களுமே அழிவினின்றும் காக்கத்தக்கவை என் னும் கருத்து ஆகியவற்றையும் ஏற்றுக்கொள்ளும் ஒரே மதம் இந்து சமயமே யாகும். சமயப் பிரசாரத்தை அது அநுமதிக் கிறது; சமயப்படிப்பை அது வலியுறுத்துகிறது. ஆனால், கருத் துக்களை வற்புறுத்தும் வழிவகைகளையும் மத மாற்றத்தையும் அது திட்டவட்டமாக எதிர்க்கின்றது.

எவ்வகையிலும் அடிப்படைக் கருத்துக்களை விட்டு விடாமல், தற்காலத் தேவைகளுக்கேற்ப இந்து சமயத்தை விரிவுபடுத்துதலே இன்றைய உடனடித் தேவையாகும். இந்து சமயக் குறிக்கோள்களை வளர்ப்பதற்குத் தேவையான எல்லா வசதிகளையும் அளித்து, தக்க ஆசிரியர்களைத் தயார் செய்வதன் வாயிலாக இதைச் சாதிக்கலாம். தாங்கள் எடுத்து விளக்கும் லட்சியங்களைத் தங்கள் வாழ்க்கையிலேயே பின்பற்றுபவர்களாக அவர்கள் இருக்க வேண்டும்; சொல்வது ஒன்று, நடப்பது வேறு என்றாக இருந்தாலோ, சமய ஆசிரியர் கள் தங்கள் சொந்த வாழ்வில் தூய ஒழுக்கத்துடன் இல்லா விட்டாலோ, சமயக் கல்விக்குப் பொருள் எதுவும் இல்லை. இந்தியாவிலும் மடங்கள் தங்கள் தங்கள் மரபுகளை அங்ஙனமே வைத்துக் கொண்டாலும், நாத்திகத்தையும் இந்து சமயத் திற்கு எதிரான சூழ்நிலைகளையும், செயல்களையும் எதிர்த்துப் போராடுவதற்கு, அவை தங்கள் திறமைகளையும் வசதிகளையும் ஒருங்கிணைத்துச் செயல்பட வேண்டும். இறைவனது உறை விடமாகவும், என்றும் நிலையாக விளங்கும் அவனது இறை மதிப்புகளின் இருப்பிடமாகவும் விளங்கும் திருமலை, பௌதிகத் தூய்மைக்கும் ஆன்மிகத் தூய்மைக்கும் தேவை யான சூழ்நிலையை வழங்குவதோடுகூட, இந்த சமயப் பணிக்குத் தலைமை அலுவலகமாக இருக்கும் தகுதியுடைய தாகவும் விளங்குகிறது.

முற்றும்